# தமிழரசு

மலர்: 13 இதழ்: 7

1—10—1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — புரட்டாசி 15




உண்மையினாலும், அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றி கொள்ளமுடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

வீணான நேரத்தை நன்கு பயன்படுத்தும்படி கிராம மக்களைத் தூண்டுவதே உருவான முன்னேற்ற வேலையாகும்.

பசியால் வாடி, வேலையின்றி இருக்கும் மக்களுக்கு வேலை அளிப்பது ஒன்றே ஆண்டவன் தரிசனம் அளிப்பதற்கு ஒப்பாகும்.

அண்ணல் காந்தியடிகள்

# படமும் செய்தியும்



மகாகவி பாரதியார் நினைவு நாளையொட்டி சென்னையில் உள்ள பாரதியார் சிலைக்கு மாண்புமிகு மேலவைத் தலைவரும் மாண்புமிகு அமைச்சர்களும் மாலை அணிவித்தனர்.



பஹாமாவில் நடைபெறும் காமன்வெல்த் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் 21.9.82ல் புறப்பட்டார்.

தந்தை பெரியார் பிறந்தநாளில் (17.9.82) சென்னையில் தந்தை பெரியார் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர்கள் மாலை அணிவித்தனர்.



# வளரும் வயதிலே வறுமையைப் போக்கிட...



## அ. மருதவிநாயகம்

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மூதூரில், பாரெங்கும் போற்றும் மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டமாகிய முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் நகர்ப்புறப் பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் சரித்திரம் படைக்கும் நிகழ்ச்சியாக நடைபெற்றது.

1982 ஜூலை முதல் நாளிலிருந்து கிராமப் பகுதிக் குழந்தைகளுக்குத் துவக்கப்பட்டு நடைபெற்று வரும் இத்திட்டம் 15-9-82 முதல் நகர்ப்புறக் குழந்தைகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் துவக்கவிழா மதுரை தமுக்கம் மைதானத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் நடைபெற்றது.

விழா ஆரம்பத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சீருடை அணிந்த கல்லூரி மாணவிகள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மலர் தூவி வரவேற்றனர்.

பின்னர், பள்ளி மாணவ மாணவியர்கள் உடல்திறன் நிகழ்ச்சி நடைபெற்றது. சத்துணவுத் திட்டக் கண்காட்சியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சியினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்குள்ள ஆசிரியர் ஒருவரிடம் 'சமையலுக்கான பாத்திரங்களை எங்கு வாங்குகிறீர்கள்?' என்று கேட்டார். 'டான்சியில் வாங்குகின்றோம்' என்று கூறினார் அவர்.

மங்கையர்க்கரசி உயர்நிலைப் பள்ளியில் பயிலும் 7 வயது மாணவி லோகசுந்தரி மாணவ, மாணவியர்கள் சார்பாகச் சிறப்புற வரவேற்புரை நிகழ்த்தி, எல்லாரின் கையொலியைப் பெற்றார்.

விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடைய பிள்ளை, இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றுகையில் — ''மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் எல்லோரையும் வரவேற்கின்றேன். கடந்த இரண்டரை மாதங்களாகக் கிராமங்களில் நடைபெறும் சத்துணவுத் திட்டப் பாங்கினைப் பார்த்து வருகின்றேன். எனக்கு மிகவும் ஊக்கம் அளிக்கின்றது'' என்று குறிப்பிட்டார்.

மதுரை மாநகரத் தந்தை திரு எம். பட்டுராசன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில், ''இத்திட்டத்திற்கான காரணகர்த்தா யார் என்பது நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இல்லை. இத்திட்டத்தை நிறைவேற்றும் ஆசிரியர்கள் மீது நம்பிக்கையுண்டு. அவர்கள் முழுமனதுடன் ஒத்துழைப்புத் தந்து உதவிடக் கேட்டுக் கொள்கின்றேன். தமிழக மக்கள் நன்றியோடு நினைவு கூர்ந்து வாயார வாழ்த்தும் இத்திட்டத்தினால் பல இலட்சக்கணக்கான குழந்தைகள் பலன் அடைந்து, வரலாறு படைக்க என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பேசுகையில், ''பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்று இத்திட்டம் மதுரை மாநகரில் துவக்கப்படுகின்றது. இன்று குழந்தை



மாண்பு மிகு முதல்வர் சத்துணவுக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்.

## புறநகர்ப் பகுதிகளில் சத்துணவு

தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளுக்கு 15.9.82 முதல் விரிவாக்கப்பட்ட சத்துணவுத் திட்ட விவரங்கள் பின்வருமாறு:

செங்கல்பட்டு மாவட்டத்தில் 208 மையங்கள் துவக்கப்பட்டதில் 31,271 குழந்தைகள் பயன் பெறுவர். வட ஆர்க்காடு மாவட்டத்தில் 199 மையங்கள் துவக்கப்பட்டதில் 29,812 குழந்தைகள் பயன் பெறுவர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 156 மையங்கள் துவக்கப்பட்டதில் 23,158 குழந்தைகள் பயன் பெறுவர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் 135 மையங்கள் துவக்கப்பட்டதில் 17,282 குழந்தைகள் பயன் பெறுவர். சேலம் மாவட்டத்தில் 245 மையங்கள் துவக்கப்பட்டதில் 36,621 குழந்தைகள் பயன் பெறுவர். நீலகிரி மாவட்டத்தில் 43 மையங்கள் துவக்கப்பட்டதில் 6,431 குழந்தைகள் பயன் பெறுவர். தருமபுரி மாவட்டத்தில் 35 மையங்கள் துவக்கப்பட்டதில் 5,204 குழந்தைகள் பயன் பெறுவர்.

பெரியார் மாவட்டத்தில் 52 மையங்கள் துவக்கப்பட்டதில் 7,823 குழந்தைகள் பயன் பெறுவர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 85 மையங்கள் துவக்கப்பட்டதில் 12,742 குழந்தைகள் பயன் பெறுவர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 222 மையங்களில் 33,327 குழந்தைகள் பயன் பெறுவர். புதுக்கோட்டை மாவட்டத்தில் 39 மையங்களில் 5,861 குழந்தைகள் பயன் பெறுவர். திருநெல்வேலி மாவட்டத்தில் 263 மையங்களில் 39,588 குழந்தைகள் பயன் பெறுவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் 218 மையங்களில் 32,765 குழந்தைகள் பயன்பெறுவர்.

மதுரை மாவட்டத்தில் 133 மையங்களில் 20,184 குழந்தைகள் பயன் பெறுவர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 80 மையங்களில் 12,092 குழந்தைகள் பயன் பெறுவர்.

களுக்குக் குதூகலத் திருநாள் ஆகும்.

''பசியினைப் பற்றி விவேகானந்தர், வேதநாயகம்பிள்ளை, பட்டினத்தார், வடலூர் வள்ளலார், மகாத்மா காந்தி, அண்ணா போன்றோர் கூறியுள்ளார்கள். முதல்வர் நடத்தும் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பத்தில் கேலி பேசியவர்கள் இன்று ஆச்சரியப் படும்படி நடந்து வருகின்றது. மணிமேகலைக் காப்பியத்தில் குறிப்பிட்ட அட்சய பாத்திரம் இன்று புரட்சித்தலைவர் கையில் இருக்கின்றது. முதல்வர் அவர்கள் இத்திட்டத்தின் மூலம் மக்களிடையே மவுனப் புரட்சியை, சரித்திரப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

''பசியினால் ஏற்படும் துன்பத்தைத் தாய்தான் உணர முடியும். அந்தத் தாய் போன்று பசியைத் தீர்ப்பதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பறிந்து செயல்படுகின்றார். இது மிகப் பெரிய சமுதாயத் திட்டமாகும்'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் உரையாற்றுகையில்- ''தான் பட்ட துன்பத்தை மற்றவர்கள் படக்கூடாது என்று முதல்வர் அவர்கள் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால் அறிவுள்ள சமுதாயம் வேண்டும். ஆகவே, சத்துணவுத் திட்டம் மூலம் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்படுகின்றது. அரசு மாறினாலும், ஆட்சி மாறினாலும் இத்திட்டம் மாறாது'' என்றார்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகையில், ''சமூகப் புரட்சியை ஏற்படுத்தும் மாபெரும் திட்டமாகும் இது.

ஆந்திரம், கர்நாடகம் முதலிய மாநிலங்கள் எல்லாம் பின்பற்றப் போகும் நல்ல திட்டம். முதல்வர் அவர்கள் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்த விளைவினால்தான் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் பிறந்தது. மக்களை எண்ணித் திட்டம் போட்டால்தான் மக்கள் நம்மை நினைப்பார்கள். ஆகவே இது மக்களுக்கான ஒரு திட்டமாகும்'' என்று குறிப்பிட்டார்.

மதுரை மாநகராட்சியின் துணை மேயர் திரு எம். முனியசாமி அவர்கள் பேசுகையில், ''ஏழை மக்களின் உள்ளத்தில் பதிந்துவிட்ட இத்திட்டத்தைத் திறம்படச்செயல்படுத்தப்பாடுபடுவேன்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கட்டுப்பாட்டுடனும், கவனத்துடனும், கண்ணியத்துடனும் நின்று எனக்கு வரவேற்புக் கொடுத்த இளஞ்சிறுமியர்களைக் கண்டு பெருமைப்படுகின்றேன்.

''உடல் வலிமையை எடுத்துக் காட்டும் வகையில் இங்கே இளம் சிறார்கள் உடற்பயிற்சி நடத்திக் காட்டினார்கள். அவர்களுக்கும் வரவேற்பு உரை நிகழ்த்திய சிறுமி லோகசுந்தரிக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.





மதுரையில் சத்துணவுத் திட்டத் துவக்க விழாவின் போது தமிழரசு (16.9.82 இதழ்) படித்துக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதல்வர்.

''என்னுடைய எண்ணமெல்லாம் குழந்தைகள் அறிவற்றவர்களாக இருக்கக் கூடாது என்பது தான். எல்லோருக்கும் அறிவு சொந்தமாக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில்தான் சத்துணவுத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

''வேலைகளுக்கு விகிதாச்சாரம். வைக்கலாம்; அதன் அடிப்படையில் வேலை கொடுக்கலாம். ஆனால் அறிவை எப்படிக் கொடுக்க முடியும்?

''சத்துணவுத் திட்டம் மூலம் பெற்றோர்களுக்குச் சுமை குறைகிறது. குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் நெருங்கிப் பழகுகிறார்கள். வகுப்பு வேற்றுமையை இளமையிலேயே மறந்திட இத்திட்டம் பயன்படும். எல்லோரும் சமத்துவ நிலையில் இருக்க வேண்டும், இதற்கு ஏற்ப குழந்தைகளை வளர்க்க வேண்டும்,

''நாங்கள் யாருடைய பணத்தையோ கொண்டு வந்து பிச்சை போடவில்லை. ஒவ்வொருவரும் பட்டினி கிடக்காமல் இருக்க வேண்டும். நாட்டில் வறுமை இருக்கும் வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

''நாங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று தேர்தல் வாக்குறுதியில் கூடச் சொல்லவில்லை. ஆனால் செயல்படுத்தி வருகிறோம்.



''இன்று ரூ. 130 கோடி செலவில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

''நாங்கள் திட்டம் தீட்டிக் கொடுக்கின்றோம். அரசு பணம் ஒதுக்குகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் செயல்படுத்துகிறார்கள். தவறுகள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். மக்களாகிய உங்களை நம்பித் தான் இத்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளேன். என்னை நம்பி அல்ல, நீங்கள் இதைக் கண்காணிக்க வேண்டும்.

''தற்போது வயது முதிர்ந்தோர் 1.5 லட்சம் பேருக்கு உதவிப் பணம், வேட்டி, அல்லது புடவை கொடுக்கப்படுகின்றது. வருகின்ற 1983-ஆம் ஆண்டு சனவரி மாதம் பொங்கல் நாள் முதல் இலவசமாக மதிய உணவு முதியோர்க்கு அளிக்கப்படுவதற்குத் திட்டமிட்டு இருக்கின்றேன். இத்திட்டத்திற்கு நிதி நிலை அறிக்கையில் வழிவகை செய்யப்படும்.''

விழா இறுதியில் மதுரை மாநகராட்சியின் ஆணையாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி இ. ஆ. ப. அவர்கள் நன்றி கூறினார்.

விழா முடிந்ததும் குழந்தைகளுக்கு மாண்புமிகு முதல்வர் உணவு பரிமாறினார். குழந்தைகளுடன் உட்கார்ந்து, குழந்தைகளுக்குக் கொடுக்கும் அதே தட்டில் உணவு அருந்தினார். ''குழந்தைகளிடம் உணவு எப்படி இருக்கிறது'' என்று கேட்டறிந்தார். அவரது பக்கத்தில் உட்கார்ந்து உணவு சாப்பிட்ட மூன்று வயதுக் குழந்தைக்குத் தாமே தமது கையால் கைகழுவி விட்டது எல்லார் நெஞ்சையும் தொட்டது.



# சரித்திர நாயகருக்குச் சான்றோர்கள் புகழாரம்!

மக்களிடத்திலே அறிவைக் கொளுத்தியவர்—

திருக்குறளுக்கு மாபெரும் சிறப்புச் செய்தவர்—

சாதனையில் சரித்திர நாயகனாக விளங்கியவர்—

—என்றெல்லாம் போற்றிப் புகழப் பெற்ற தென்னாட்டுக் காந்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் 74வது பிறந்தநாள் விழா செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

அன்று மாலை, திரு டி.கே.எஸ். கலைவாணன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

### அறிவைக் கொளுத்தியவர்

பிறகு நடந்த சிறப்புக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்று, செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் தமிழருக்கு, தமிழகத்திற்கு, தமிழ் மக்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அருந்தொண்டினை நினைவுகூர்ந்தார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், அறிஞர் அண்ணாவின் சிறப்பியல்புகளைக் கோடிட்டுக் காட்டினார். அவர் சொன்னார்—

''அண்ணா அவர்கள், நாடகத்தின் மூலம் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியவர். பத்திரிகையாளராக - பேச்சாளராக- எழுத்தாளராக- நாடகாசிரியராக நடிகராக விளங்கியவர். மக்களிடத்திலே அறிவைக் கொளுத்தியவர். இலக்கியத்திலே புரட்சி செய்தவர். நாடகத்துறையிலே- திரைப்படத் துறையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்'' என்று புகழாரம் சூட்டினார்.

### குறளுக்குச் சிறப்புச் செய்தவர்

திரு ஊரன் அடிகள் பேசுகையில், வள்ளலார் வழியில் நின்று தொண்டாற்றியவர் அறிஞர் அண்ணா என்று விளக்கி, ''முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தியவர் வள்ளலார். அந்தத் திருக்குறளுக்கு மாபெரும் சிறப்பு செய்தவர் அண்ணா அவர்கள்''. என்று அழகாக எடுத்துக் கூறினார்.

திருமதி சுலோசனா சம்பத் அவர்கள், அண்ணாவோடு பழகிய அக்கால நினைவுகளை அழகுற எடுத்துக் கூறினார். ''புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப் பேற்றபிறகு, பெருந் தலைவர்களுக்கெல்லாம் விழா நடத்திச் சிறப்புச் செய்து வருகிறார்கள். எழுத்து, பேச்சு, நடிப்பு ஆகிய துறைகளில் தலைசிறந்து விளங்கியவர் அண்ணா'' என்று எடுத்துச் சொன்னார்.

### சரித்திர நாயகன்

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தினைத்



அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தினை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார்.

திறந்து வைத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத்தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள், நடமாடும் திருவுருவம் இன்று படமாகத் திகழ்கின்றது என்று சொல்லி, அறிஞர் அண்ணாவுக்கும், தமக்கும் உள்ள நட்பினைச் சுவைபடக் கூறினார்.

''அறிஞர் அண்ணா அவர்கள் சாதனையில் சரித்திர நாயகனாக விளங்கினார். இந்த நாட்டை வாழ வைத்தார்- வளர வைத்தார். பேச்சாளர்களை - எழுத்தாளர்களைத் தோற்றுவித்தார். பகைவரையும் தன் வசப்படுத்தும் நாவன்மை படைத்திருந்தார்'' என்று அறிஞர் அண்ணாவின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினார் சிலம்புச்செல்வர்.

### ஊமைகளைப் பேசவைத்தவர்

திரு வலம்புரிஜான் அவர்கள் பேசுகையில், தாம் படித்த காலத்தில் அண்ணாவின் பேச்சாற்றலில் மயங்கிய மாணவப் பருவத்தை நம்மோடு பகிர்ந்துகொண்டார். அவர் குறிப்பிட்டார்— ''நாடெல்லாம், வீடெல்லாம், ஏடெல்லாம் அவர் வரலாற்றுப் பேழையாக விளங்கினார். அவர் ஊமைகளைப் பேச வைத்தவர்; குருடர்களைப் பார்க்க வைத்தவர்; செவிடர்களைக் கேட்க வைத்தவர்''.

திரு.வி.க. விருதினை, திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கினார்.



## ஆலின் நிழலே! அண்ணா தமிழே!!

—ஆற்றலரசு—

மூச்சிலே தமிழே என்றால்
முத்தமிழ்த் தென்றல் நீங்கள்!
பேச்சிலே ஆற்றல் என்றால்
பாய்ந்திடு நதியே நீங்கள்!

வீச்சிலே எளிமை என்றால்
விளைச்சலில் நஞ்சை நீங்கள்!
பாய்ச்சலில் வேங்கை என்றால்
பண்பிலே மேகம் நீங்கள்!

எழுத்திலே புலமை என்றால்
எழுதுகோ லரசரானீர்!
உழுதிடும் கலப்பை என்றால்
உரம்தரும் திறனே நீங்கள்!

அழுவதில் மழலை என்றால்
அன்பிலே அன்னை நீங்கள்!
விழுதிலே ஆலாய் வந்தே;
விளைவினைத் தந்தீர் அண்ணா!

திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்களைப் பற்றிய குறிப்பினை, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் மா.நன்னன் அவர்கள் படித்தார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் விழா நிறைவுரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''அரசு வழங்கிவரும் இந்த திரு.வி.க. விருதை இந்த ஆண்டு திருக்குறள் முனிசாமிக்கு வழங்க முடிவு செய்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

''எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் உள்ள அண்ணாவின் கட்டுரைகளைத் திரும்பத் திரும்பப் படித்தால் எவருக்கும் புலமை வரும். அரசியல் அறிவு பெருகும்.''

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா-நமக்கெல்லாம் பேரானந்தம் தந்தது மட்டுமல்ல, அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற உந்துதலையும் உணர்வையும் தந்தது என்றால், அது மிகையல்ல!

—பி. வி. கிரி

## கலைவாணர் நினைவுநாள்...

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் 25-வது நினைவுநாள் விழா 30.8.82 மாலை கலைவாணர் அரங்கில் இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்கள் வில்லிசையின் வாயிலாகக் கலைவாணர் சிறப்புகளை எடுத்துச் சொன்னார்.

விழாவுக்கு மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா.கோகுலகிருஷ்ணன் தலைமை ஏற்றிருந்தார்.

இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி.வி.நாராயணசாமி, வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''மனித குலத்தின் நல்வாழ்வை எண்ணித் தவங்கிடந்த மாமனிதர் கலைவாணர். அவர் மறைந்துவிட்டார்; ஆனால் அவரது சிந்தனைகள் நம்மைவிட்டு மறையாமல் நமது இதயத்தில் இருந்து கொண்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றன''

விழாவைத் துவக்கி வைத்த முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் குறிப்பிட்டார்:

''கலைவாணர் நகைச்சுவையை நல்கினார். நையாண்டித்தனத்தை நல்கவில்லை. நகைச்சுவை அறிவாளிகளை மகிழ்விப்பது; நையாண்டி மற்றவர்களை மகிழ்விப்பது''.

தலைமை வகித்த மாண்புமிகு நீதிபதி பு.ரா.கோகுலகிருஷ்ணன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சிந்திக்க வைத்து, சிரிக்க வைத்துச் செம்மைப்படுத்தியவர்-யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் நல்லனவற்றை தமக்கு அளித்தவர் கலைவாணர்''

அடுத்து உரையாற்றிய நடிகர் திரு டி.என்.சிவதாணு தெரிவித்தார்:

''மக்களுக்கும் கலைக்கும் கலைஞர்களுக்கும் இடையே தொடர்பு உண்டு என்பதைக் கலைவாணர்தான் நிரூபித்தார். அவருக்கு முன்பிருந்த கலைஞர்கள் சமுதாயத்துக்கு எதுவும் செய்யவில்லை''

அடுத்து உரையாற்றிய திருமதி சி.டி. ராஜகாந்தம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''கலைவாணரின் விழாவைக் கொண்டாட வகை செய்த புரட்சித் தலைவரின் அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்''

பின்னர் பேசிய திரு எஸ். வி. சகஸ்ரநாமம் தெரிவித்தார்:

''இனி வருகின்ற ஆண்டுகளில், கலைவாணர் நினைவு நாளை மேடைப் பேச்சாக மட்டும் வைத்துக் கொள்ளாமல் நகைச்சுவை நாடகப் போட்டியை ஏற்படுத்தி சிறந்த நாடகத்திற்குப் பரிசு வழங்கும் முறையைக் கொண்டு வரலாம்''.

அடுத்து உரையாற்றிய திரு வெ. நாராயணன் குறிப்பிட்டார்:

''பிறரை மகிழ்விப்பது மட்டுமல்ல எல்லாப் பொருள்களையும் ரசிக்கத் தெரிந்த ரசிகராக அவர் விளங்கினார். பிச்சைக்காரனின் பாடலையும் ரசிக்கக்கூடியபெரிய மனம் பெற்றிருந்த பெரியார் அவர்.

''அவரது பெயரில் ஒரு கலைக் கல்லூரியை அரசு நிறுவவேண்டும். ஜெமினி ஸ்டுடியோ அருகிலிருந்து தொடங்கி, போரூர்வரை செல்லும் சாலை முழுவதையும் கலைவாணர் எஸ்.என். கிருஷ்ணன் சாலை என்று அறிவிக்க வேண்டும்.''

பின்னர் உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்:

''கலைவாணர் அவர்கள், சமுதாயத்திற்கு எடுத்து வைத்த கருத்துக்களை நாம் இளைஞர்களுக்கு நினைவுறுத்த வேண்டியது அவசியம்.,

''அவர் கடுமையாக உழைத்து மறைந்தவர். பிறரது உழைப்பில் வாழ்ந்து மறைந்தவரல்ல; தனது வாழ்க்கையை மெழுகுவர்த்தியாக்கிக் கொண்டவர். அவரை ஒரு சகாப்தம் என அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சகாப்தம் தந்த-



தோற்றிய பல உணர்வுகள்தான் இன்று ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன.

''இந்த நூற்றாண்டு கண்டெடுத்திருக்கின்ற — வாராது வந்த மாமணியாக வாய்த்த — கலைவாணர் என். எஸ். கே. சாகாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது தத்துவங்களை உலகமுழுவதும் எடுத்துச் சொல்லிப் பெருமைப்படுத்த வேண்டும்.

''மகிழ்ச்சியாக இந்த மனித சமுதாயம் இருக்க வேண்டும் என்பதற்காக வாழ்ந்தவர் அந்த உயர்ந்த மனிதர். உயர்ந்த மனிதனாக இருக்க வேண்டுமானால் உயர்ந்த கலைஞனாக இருக்க வேண்டும்; உயர்ந்த கலைஞனாக இருக்க வேண்டுமானால் உயர்ந்த ரசிகனாக இருக்க வேண்டும்.

''கலைவாணர் தொடர் சொற்பொழிவு ஒன்றை மாதந்தோறும் ஆண்டுதோறும் இயல் இசை நாடக மன்றம் நடத்த வேண்டும். ஆண்டுதோறும் அவரது தத்துவங்களை - கலை உலக இலக்கியங்களை எடுத்துச் சொல்லும் பணியினைச் செய்ய வேண்டும்.

''கலைவாணரின் பெயரில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று இங்கே கேட்டுக் கொண்டார்கள். சென்னையிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு கலைவாணர் பெயரைச் சூட்டலாமா என்று யோசனை செய்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இது குறித்துப் பேசி விரைவில் அறிவிக்க முயற்சி செய்கிறேன்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

''கலைவாணரைப் பாராட்டிப் போற்றி வணங்குவதற்குக் காரணம், கலை உலகில் தனக்கென்று தனி இடத்தை அவர் ஏற்படுத்திக் கொண்டார். யாரும் எட்டிப் பிடிக்க முடியாத இடத்தை எட்டிப் பிடித்தார். அவர் காலி செய்த இடத்தை நிரப்புவதற்கு இன்னும் ஆள் தோன்றவில்லை.

''பிறரை அழவைப்பது மிகமிக எளிது; சிரிக்க வைப்பது கடினமானது. அந்தக் கலையை மிக உன்னதமாகக் கையாண்டார் கலைவாணர்.

''உலகில் இரண்டே இரண்டு சுவைதான் சிறப்பு வாய்ந்தது. ஒன்று அவலம்; மற்றொன்று நகைச்சுவை.

''அவலம் இதயத்தைத் தொடும். அழவைக்கும், மனத்தைக் கலக்கிக் கரைக்கும், இரங்க வைக்கும்.

''நகை-மகிழ்ச்சியூட்டும், உள்ளத்தை விரிவாக்கும், பரந்த உள்ளத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். அனைவரையும் ஈர்க்கும்; பலரையும் ஒன்று படுத்தும்.

''மனித சமுதாயத்தை மகிழ்ச்சியினால் ஆழ்த்தக்கூடிய வகையில் அவரது தொண்டு பயன்பட்ட தென்றால், அது தனிச் சிறப்பு.

''மனித சமுதாயத்தின் நெளிவு சுளிவுகளை எல்லாம் எடுத்துக் காண்பிக்கும் திறம் அவரிடம் இருந்தது''

இறுதியில், இயல் இசை நாடக மன்றச் செயலர் திரு டி.வி. நாராயணசாமி நன்றி கூற விழா இனிது முடிந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு:

**—தமிழ்ப்பித்தன்**

# மாநில தலைமைக் கணக்காயர்

தமிழ்நாடு : : சென்னை–18

## அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி 1981-'82

மாநில தலைமைக் கணக்காயர், தமிழ்நாடு அவர்கள், மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (ஜி. பி. எப்.) 1981-82-ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள் (அக்கவுண்ட் ஸ்லிப்) அனைத்தையும் அனுப்பி விட்டார்.

இந்த அறிக்கைகள் அரசு ஊழியர்கள் 1982-ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணிபுரிந்தார்களோ, அந்தந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, தமிழக அரசு ஊழியர் அனைவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தக் கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப்படுமேயானால், சம்பளப் பட்டியல் முழு விவரங்களுடன் கீழ்க்கண்ட விலாசதாரருக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள்:

திரு க. விசுவநாதன்,
கணக்கு அலுவலர் (F.M.I. பிரிவு)
மாநில தலைமைக் கணக்காயர் அலுவலகம்,
261, அண்ணாசாலை,
சென்னை - 600 018.



# அண்ணாவின் கனவு நனவாகிறது!

அ. மருது

கரூர் - திண்டுக்கல் - மதுரை - தூத்துக்குடி ரயில்பாதைத் திட்டப்பணிகள் துவக்கவிழா தூத்துக்குடி தருவை திடலில் (30.8.82) சிறப்புற நடைபெற்றது.

தமிழக அரசு தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் விளைவாக நடவடிக்கை எடுக்கப்படும் இந்த இனிய விழாவில் தென்னக இரயில்வேயின் பொது மேலாளர் திரு. வர்கீஸ் அன்வர் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு, ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு.பி.சி. சேத்தி அவர்கள் கட்டுமானப் பணியைத் துவக்கிவைத்து அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார்.

மேலும்-மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம், மாண்புமிகு கதர்-பொதுப்பணித் துறை அமைச்சர் திரு, எஸ்.என். ராஜேந்திரன் ,மாண்புமிகு மத்திய ரயில்வே துணை அமைச்சர் திரு,சிகே.ஜாபர்ஷெரீப், மத்திய ரயில்வே போர்டுத் தலைவர் திரு எம்.எஸ்.குஜ்ரால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு,சிவப்பிரகாசம், திரு, கே.டி. கோசல்ராம் ஆகியோரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

மாண்புமிகு மத்திய ரயில்வே அமைச்சர் திரு, பி.சி.சேத்தி அவர்கள் உரையாற்றுகையில்—''இந்த அரிய திட்டத்திற்குத் தம் முழு ஒத்துழைப்பையும் அளித்த தமிழக முதல்வர் திரு, எம்.ஜி. ஆர். அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கி



# கரூர்-நெல்லை அகல இரயில் பாதை

## சிறப்பம்சங்கள்

கரூரிலிருந்து நெல்லைக்கு (திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி வழியாக) அமைக்கப்பட இருக்கும் அகல இரயில் பாதையின் மொத்த நீளம் 326 கிலோ மீட்டர். இந்தத் திட்டம் முடிவடையும்போது கருருக்கும், நெல்லைக்கும் இடையே உள்ள மொத்த இரயில் நிலையங்கள் எண்ணிக்கை 51 ஆக இருக்கும்.

இதில் திண்டுக்கல்லுக்கும், நெல்லைக்கும் இடையே தற்போது இருக்கும் இரயில் நிலையங்கள் அப்படியே நீடிக்கும்; அவற்றில் மாறுதல்கள் இல்லை.

கரூர்-திண்டுக்கல் இடையே போடப்படும் இரயில் நிலையப் பாதையில் 7 புதிய இரயில் நிலையங்கள் அமைக்கப்படும்.

பணிகள் 2 கட்டமாகச் செயல்படும். முதல் கட்டத்தில் முதல் பகுதியாக நெல்லையிலிருந்து தாழையூத்து, மணியாச்சி வழியாக தூத்துக்குடிவரை அகல இரயில்பாதை போடப்படும், இந்த வேலை 1983-84-ஆம் ஆண்டில் முடியும்.

அதே சமயத்தில் கரூர்—திண்டுக்கல் இடையே புதிய இரயில் பாதை போடும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். இரண்டு ஊர்களுக்கும் இடையேயான தூரம் 73 கிலோமீட்டர். இந்த வேலையும் 1983–84 ஆம் ஆண்டு முடிவடையும். அடுத்து திண்டுக்கல்-மதுரை இரயில் பாதைப் பணி நடைபெறும். இரயில் பாதை நிலங்களுக்காகத் தமிழக அரசு கையகம் செய்து கொண்டிருக்கிறது. பணியை விரைவு படுத்த தனி அதிகாரிகளையும் தமிழக அரசு நியமித்துள்ளது.

இரண்டாவது கட்ட வேலையாக மதுரை-மணியாச்சி "மீட்டர் கேஜ்" இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றி அமைக்கும் வேலை நடைபெறும்.

இந்த இறுதிக்கட்ட வேலை நடைபெறும் பொழுது, திண்டுக்கல் வழியாக மதுரைக்கும், நெல்லை வழியாகத் தூத்துக்குடிக்கும் அகல இரயில்பாதை வசதி கிடைத்துவிடும்.

இந்தப் பணி முடிந்த பிறகு ஆண்டுக்கு 60 இலட்சம் பயணிகள் பயன்பெறுவார்கள் என்றும், ஏறத்தாழ 42 இலட்சம் டன் சரக்குப் போக்குவரத்து நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கு ரூ.42 கோடியே 86 இலட்சம் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய இரயில்பாதை திட்டத்தின் மூலம் சேலம், கோயம்புத்தூர், கரூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற முக்கிய நகரங்கள் இணைக்கப்படுகின்றன. இதனால் தமிழகத்திற்குச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கும். தமிழகம் மேலும் செழிப்படையும்.

றோம். ''என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''இந்த அகலரயில் பாதைத் துவக்க விழா, தமிழக மக்களுக்கு திருவிழாவாகும். தமிழ் நாட்டின் எதிர்காலம் இதன் மூலம் பொற்காலமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் எல்லாத் தொழிலும் ஏற்றம்பெறும் என்பது உறுதி.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு, எம்.ஜி.ஆர். அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது

''இந்த விழா விளம்பரத்திற்காக நடத்தப்படும் விழா அல்ல; அரசு நிறைவேற்றும் திட்டங்களை மக்கள் அறிந்து கொள்ள நடக்கும் விழா.

''அமரர் அண்ணா அவர்களின் விருந்து ,இத்திட்டம் நிறைவேற எல்லாரும் பெருமுயற்சி எடுத்தார்கள். இதற்கான நில ஆர்ஜிதம் குறித்தும் கடந்த மாதமே தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

''இங்கு தொழிற்சாலைகள் பெருகவும், தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கவும் நல்வாய்ப்பாக இந்தக் கால்கோள் விழா அமைவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில், எழும்பூர் ரயில்வே தலைமைப் பொறியாளர் திரு.ஸ்ரீதரன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.



# முப்பெரும் விழா!



ஆதிதிராவிடர்க்குக் கறவைமாடு வாங்கக் கடன் உதவி வழங்குதல்

இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியம் எது?

அதுதான், சென்னை அயன் புரத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் சென்னை - செங்கை மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம். இதன் வயது 55.

இந்த ஒன்றியத்தின் சார்பில் முப்பெரும் விழா 13.8.82அன்று மிகக் கோலாகலமாக - பால் உற்பத்தியாளர்கள் திரளாகச் சூழ, ஒரு மாநாடு போலவே நடந்தது.

இந்த அமைப்பு நவீன 'அமுல்' பாணி அல்லது 'ஆனந்த்' பாணி என அழைக்கப்படும் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட அகில இந்திய அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தாயாகும். 13 சங்கங்களுடனும் ரூ.242 பங்குத் தொகை மூலதனத்துடனும் துவங்கப்பட்ட இந்த ஒன்றியம், இன்று தன்னகத்தே 300 சங்கங்களின் மூலம் சுமார் 24,800 செங்கை மாவட்ட கிராம பால் உற்பத்தியாளர்கள் குடும்பங்களுக்குப் பால் பண்ணைத் தொழிலின் மூலம் கூடுதல்பலன் பெறவழிசெய்கிறது. முன்பு 3,69,000 லிட்டர் பால் கொள்முதல் செய்த இந்த ஒன்றியம், கடந்த 1981-82ஆம் ஆண்டில் 69,00,000 லிட்டர் பால் கொள்முதல் செய்தது.

தற்போது நாளொன்றுக்குச் சராசரி 20,000 லிட்டர் கொள் முதல் செய்து, 24,800 உற்பத்தியாளர்களுக்கு, 250 சங்கங்களின் மூலம் பலனளிக்கும் இந்த ஒன்றியம், வரும் ஐந்தாறு ஆண்டுகளில் 500 சங்கங்கள் அமைத்து 89,000 லிட்டர் பால் பெற சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றும்!

'முப்பெரும் விழா' வண்ண விளக்குகள் வரவேற்க, நம் எண்ணத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் மிகச் சிறப்பாக நடந்தது.

ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே. பாலாஜி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'இந்த ஒன்றியம் ஆசியாவிலேயே முன்னோடியானது' என்றார்.

தமிழ்நாடு பால் வளத்துறை ஆணையர் திரு. ஏ. எம். சுவாமிநாதன் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், ''ஒன்றியப் பணிகள் மிகுந்த உற்சாகத்துடன் நடப்பதைப் பாராட்டுகிறேன். ஒன்றியத்தின் பால் மூலமாகத் தனிப்பட்டோருக்கு மிகுந்த பலன் கிடைக்கிறது'' என்றார்.

இந்த ஒன்றியத்தின் நிறுவனர் பழம்பெரும் கூட்டுறவாளர் திவானபகதூர் திரு.கீ.தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி மாண்புமிகு திரு.இரா. மோகனரங்கம் அவர்கள் திறந்து வைத்துப் பேசினார். அவர் பேசுகையில், ''வட, தென்னார்க்காடு மாவட்டங்களிலும் இதுபோன்ற ஒன்றியங்களை அமைக்க வேண்டும். பால் வளத் துறையில் தமிழகம்தான் முன்னணி வகித்து வருகிறது'' என்றார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள், ஒன்றிய கால்நடைப் பராமரிப்பு மற்றும் பயிற்சி நிலைய அலுவலகங்களுக்கு அடிக்கல் நாட்டிப் பேசினார். அவர் பேசுகையில்,—

''மூன்று இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். நியூசிலாந்தில் 15 ஆயிரம் பேர்தான் இருக்கிறார்கள். இவர்கள் ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ''இந்த அளப்பரிய வெற்றியின் ரகசியம் என்ன?''என்று அவர்களைக்கேட்டதில், அதற்கு அவர்கள் பதில் சொன்னார்கள் அமைப்புமுறை, எடுக்கின்ற நடவடிக்கை, தரமான பொருளைத் தயாரிக்கின்ற ஆர்வம், எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் நலனைவிட நாட்டின் நலனைப் பெரிதாகக் கருதும் தன்மை என்று பதில் சொன்னார்கள்.

''முதல்வர் அவர்கள் நினைத்ததை முடிப்பவர். 10 இலட்சம் விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இரண்டாவது பால்வளப் பெருக்கத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குத் தக்க வசதி செய்து வருகிறார்கள்.

''கிருஷ்ணகிரி, தருமபுரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் பால்பண்ணை வர உள்ளது. 1986 ஆம் ஆண்டிற்குள் 10 இலட்சம் குடும்பங்களுக்குப் பாதுகாப்புத் தரப்படும்; இதில் ஒரு இலட்சம் பேர் செங்கல்பட்டு மாவட்டத்தினராக இருப்பார்கள்.''

முப்பெரும் விழாவினை வாழ்த்திப் பழம்பெரும் கூட்டுறவாளர் திரு.கீ.தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் குமாரர் திரு. கீ. நச்சினார்க்கினிய சிவம், திரு கே.வி.சீனிவாசன், திரு பாக்கூர் எஸ்.சுப்பிரமணியம், திரு ஜேப்பியார், எம்.எல்.சி., திரு.ஜே.சி.டி. பிரபாகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

இந்த ஒன்றியத்தில் 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றியவர்களுக்கு ஒன்றியம் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கைக்கடிகாரங்களை வழங்கினார். டிபன் கேரியர்களை திரு ஜேப்பியார், எம்.எல்.சி. அவர்கள் வழங்கினார்.

அன்றைய விழா, விரைவான வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட விழாவாக விளங்கியது என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி



# தமிழ்த்தென்றல் நூற்றாண்டு விழா!

நிகழ்ச்சித் தொகுப்பு : தமிழ்ப்பித்தன் • பி. வி. கிரி • ஜி. ஆனந்தன்

'தமிழ்த் தென்றல்' என்றும் தமிழ் முனிவர்' என்றும் தமிழ்ப் பெருங்குடி மக்களால் போற்றிப் புகழப்படும் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களின் நூற்றாண்டுத் தொடக்க விழா, ஆகஸ்டுத் திங்கள் 28, 29 தேதிகளில் மிகச் சிறப்பாக நடந்தது.

28-ந் தேதி காலை, சென்னை கலைவாணர் அரங்கில், விழா தொடங்கியது.

அரசு இளங்கலைஞர்கள் திருப்பாம்பரம் சகோதரர்கள் கலைமாமணி திரு ஏ. கே. பழனிவேல், கலைமாமணி திரு டி. ஏ. கலியமூர்த்தி குழுவினரின் நாயன இசையும், கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடந்தன.

செய்தி-சுற்றுலா (தமிழ்)ப்பண்பாட்டுத்துறை ஆணையர்மற்றும் செயலர் திரு ப. பா. கிருஷ்ணசாமி இ. ஆ. ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

**மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி**

மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து, விழாத் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்**

மாண்புமிகுசெய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''நாட்டுப் பற்றின் காரணமாகத் 'தேச பக்தன்' என்ற பெயரிலேயே ஒரு பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று, இந்திய ஒற்றுமைக்காக அவர் அரும்பாடுபட்டு வந்தவர்.

''திரு. வி. க. வைப் பற்றித் தமிழகம் மட்டும் அறிந்தால் போதாது. இந்திய ஒருமைப் பாட்டிற்காக உழைத்த அவரை மத்திய அரசு அனைத்து மாநிலங்களில் உள்ளவர்களுக்கும் அடையாளம் காட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அன்னார் இயற்றிய நூல்களை இந்தியாவெங்கும் பரவச் செய்ய வேண்டும்.''

திரு. வி. க. அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்து திரு. சி. சுப்பிரமண்யம் அவர்கள் பேசுகையில், ''நான் மாணவனாக இருந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது எளியவாழ்க்கை, இனிய சொல் எல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தன. அவர் தமிழ்ப் பெரியவர் மட்டுமல்ல. இந்தியப் பெரியவர் ''என்றுகுறிப்பிட்டார்.

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்கள் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப. அவர்கள் தமது நன்றியுரையில் திரு. வி. க. அவர்களின் அருமை பெருமைகளை எடுத்துக் கூற, அன்றைய காலை நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

சென்னைஇராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி மேல்நிலைப் பள்ளித்திடலில்மாலை நிகழ்ச்சி திருப்பாம்பரம் சகோதரர்கள் 'கலைமாமணி'திரு-டி.கே.பழனிவேல் 'கலைமாமணி' திரு. டி. ஏ. கலியமூர்த்தி குழுவினரின் நாயன இசையுடனும்சுப்புஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டுடனும் துவங்கியது.

செய்தி- மக்கள் தொடர்புத் துறைஇயக்குநர்திரு. எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப. அவர்கள் ,தமது வரவேற்புரையில்'' 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க. அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அவர் தலைசிறந்த எழுத்தாளராகவும் தலைசிறந்த பேச்சாற்றல் மிக்கவராகவும் எழுத்தில் கருத்தும் வேகமும் கொண்டவராகவும் தியாகச்சுடராகவும் திகழ்ந்தார். அவர் விட்டுச் சென்ற தமிழ்ப்பணியை



நினைவு கூரும் வகையில், இந்த அரசு விழா எடுத்து அவருக்கு மேலும் நற்புகழைச் சேர்ப்பிக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

**மாண்புமிகு**

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், தமது தலைமையுரையில்,

''பண்பட்ட பத்திரிகையாளராகவும் ஒழுக்க சீலராகவும் மிளிர்ந்திருந்திருக்கிறார். கொள்கைக் குன்றாக விளங்கிய அவர்,

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போர்க்கொடி உயர்த்தி, சென்றிருக்கிறார்.

சாதி— சமய— இன வேறுபாடு அற்ற புதிய சகாப்தத்தை உருவாக்கப் பாடுபட்டவர் திரு.வி.க. எதிர்நீச்சல் போட்டே வாழ்நாளை நடத்தியிருக்கிறார். சுதந்திரக் காற்றை நாம் இன்றைக்குச் சுகமாக சுவாசிக்கிறோம் என்றால் திரு. வி. க போன்ற தேசபக்தர்கள் சுதந்திரம் பெற பாடுபட்டதால்தான் என்பதை உணர வேண்டும்.

''அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் புதிய தலைமுறையினர்க்குப் போய்ச் சேர வேண்டும் என்ற உயரிய லட்சியத்துடன் விழாக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன'' என்று குறிப்பிட்டார்.

**சட்டப் பேரவைத் தலைவர் திரு இராசாராம்**

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தமது துவக்க உரையில், ''அந்தக்காலத்தில் மேடைகளில் ஆங்கிலம் பேசுவதைப் பெருமையாக மதித்த நேரம். அந்த முறையை உடைத்து எறிந்து தமிழில் பேசுவதேதமது லட்சியமாகக் கொண்டு விளங்கியவர் திரு. வி. க. அவர்கள். தந்தை பெரியார், வரதராஜுலுநாயுடு, மூதறிஞர் ராஜாஜி போன்றவர்களிடத்தில் மிகவும் அன்பும் பற்றும் பாசமும் வைத்துக்கொண்டவர் திரு. வி. க. அவர்கள்.

''மதவெறி-மதமாச்சரியங்கள் சாதிவெறி இவைகளைக்களைய பாடுபட்ட முற்போக்குச்சிந்தனையாளர்— அந்தக் காலத்திலே கலப்புத் திருமணத்தை ஆதரித்தவர் திரு. வி. க. பல பிரச்சனைகளில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இறுதி மூச்சு உள்ள வரை தந்தை பெரியாரின் உயிர் நண்பராகத்தான் திரு. வி. க. வாழ்ந்திருக்கிறார்.'' என்றார்.

திரு. வி. க. எழுதிய 'பெண்ணின் பெருமை' என்ற நூலை சட்டப் பேரவைத் தலைவர்



**திரு. வி. க. கண்காட்சியை மேதகு ஆளுநர் திரு. சாதிக்அலி திறந்துவைத்தார்.**

வெளியிட - அதனை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பேசுகையில், ''திரு. வி. க. வாழ்க்கை வரலாறுகளைப்பாடப்புத்தகமாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வைக்க அரசு முன் வர வேண்டும். அவர் எழுதிய நூல்களை மலிவு விலையில் வெளியிட வேண்டும்'' என்றார்.

நெல்லை தியாகி திரு. எஸ். என். சோமயாஜுலு பேசுகையில், குறிப்பிட்டார்.'' இதுபோன்ற தேசபக்தருக்கு அரசு விழா எடுப்பதன் மூலம் அரசின் புகழுக்கு மேலும் புகழ் மகுடம் சேர்ப்பதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதுதான் இந்த அரசுக்குப்பெரிய 'சொத்து''

பிரபல எழுத்தாளர் திரு.அகிலன் பேசுகையில்,'' திரு. வி. க. தனது வாழ்நாள் முழுவதும் தேசத்தின் நலனிலும் மக்கள் நலனிலும் அக்கறை காட்டி வந்தார். மக்களிடத்தில் இருக்கும் மூட நம்பிக்கையை விரட்டியடிக்க-எதிர்த்து போராடத் தவறவில்லை'' என்று குறிப்பிட்டார்.

திரு.நெ. து. சுந்தரவடிவேலு பேசுகையில், ''தமிழ்த் தென்றல் திரு. வி. க. 'தமிழ்' 'தமிழ்' என்று உயிர் மூச்சு உள்ளவரை பாடுபட்டு வந்தார். அவர் நல்ல தமிழில் எழுதும் எழுத்தாளர். அவரது புகழைப்பரப்பும் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

திரு வலம்புரிஜான் பேசுகையில், ''திரு. வி. க.'பெண்ணின் பெருமையை' அற்புதமாக வடித்துக் காட்டியிருக்கிறார். தமிழ் முனிவராக—சாதுவான முனிவராக இருந்தாலும் அவரது பார்வை விரிந்த பார்வையாகத்தான் இருந்திருக்கிறது. சாதுவான முனிவர் என்று கூறும் அவர் சிறுமையைக் கண்டு பல நேரத்தில் பொங்கி எழுந்திருக்கிறார். தமிழகத்திற்குக்கிடைத்த தலை சிறந்த தமிழ் பொக்கிஷம். திரு. வி. க.'' என்றார்.

**டாக்டர் நாவலர்**

விழாவில் மாண்புமிகு நிதிஅமைச்சர்டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், ''தமிழ்மொழிக்காக அவர் செயற்கரிய செயல்களைச் செய்து தமிழ்மொழிக்குச் சிறப்பு தந்திருக்கிறார். பாரதியாருக்கு ஆண்டு முழுதும் நூற்றாண்டு நிறைவு விழா எடுப்பதுபோல திரு. வி. க. வுக்கும் ஆண்டு முழுதும் விழாவை நடத்தி வருவோம்.

''யார் யார் மனித சமுதாயத்திற்குப்பாடுபடுகிறார்களோ அவர்களைத்தான் இந்த உலகம் தனது இதயத்தில் வைத்துக் கொள்கிறது. அந்த வகையில் திரு. வி.க வும் ஒருவர். மக்களின் இதய நாடியைத்தொடும்படி திரு.வி.க. வின் கருத்துக்கள் இருப்பதனால் அவர்களுக்கு அரசுவிழா எடுத்துச் சிறப்பிக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

திரைப்பட நடிகை 'கலைமாமணி' செல்வி ஸ்ரீ பிரியா — வைஜயந்திமாலா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இரண்டாம் நாள் 29-8-82 அன்று காலை நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் கலைமாமணி திரு. வி. கோவிந்தசாமி மாஸ்டர் சுரேஷ் பாபு ஆகியோரின் வயலின் இசையுடன் ஆரம்பமானது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. எஸ். டி.

காசிராஜன் இ. ஆ. ப. அவர்கள் ''மனத்திடத்துடன் பணியாற்றும் காரியம் வெற்றி பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டு திரு.வி.க. அவா தமிழுக்கும் சமுதாயத்திற்கும் செய்திருக்கும் .மகத்தான பணிகளை நாடு நன்கறியும். இந்த நூற்றாண்டு முதற்கொண்டேனும் நமது கடமையை ஒழுங்காகச் செய்தாலே போதும். அதுவே திரு. வி. க. வின் கொள்கையை நாம் கடைப்பிடிப்பதாக அர்த்தம். அவர் விட்டுச் சென்ற பணியை ஒவ்வொருவரும் கடைப் பிடித்து நடக்க வேண்டும்'' என்று வரவேற்புரையில் குறிப்பிட்டார்

### டாக்டர் நாவலர்

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்,

''திரு. வி. க. அவர்கள் தன்னுடைய எண்ணத்தாலும் எழுத்தாலும், செயலாலும், சொல்லாலும் இந்த நாட்டுக்கு வெற்றி தேடித் தந்தவர். அவர் இந்த நாட்டுக்கு நல்ல வழிகாட்டியவர். வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி ஊட்டி அதற்கான வழி வகைகளைச் செய்தவர்.

''காந்தி கொள்கையையும் வள்ளுவர் அறிவுரைகளையும் எங்கெங்கு வாய்ப்பு கிடைக்குமோ அங்கெல்லாம் எடுத்துக்கூறினார். காந்தியையும், வள்ளுவரையும் மக்கள் பின்பற்ற தொடங்கினால் நாடு சிறப்படையும்.

''தந்தை பெரியார் அவர்களை மேடையில் பேச வேண்டும்என்று தூண்டியவரே திரு. வி. க. தான் என்று பெரியாரே கூறியுள்ளார். மனிதரை மனிதர் மதிக்கும் பண்பாடு திரு. வி. க. வுக்கு உண்டு'' என்று குறிப்பிட்டார்

பேராசிரியர் டாக்டர் ந சஞ்சீவி பேசுகையில், ''திரு. வி. க. ஒரு சுரங்கமாக, ஒரு மலையாக, தமிழ்கலைக், களஞ்சியமாக இருந்தார் அவரது நூல்களை கலைக். களஞ்சியமாக வெளியிட்டு அனைத்து மக்களுக்கும் பயன் படும்படிச்செய்யவேண்டும்''என்று குறிப் பிட்டார்

தமிழ்ப் பழங்கலை இயக்குநர் திரு. கு. ராஜவேலு பேசுகையில், திரு. வி. க. சமய-சன்மார்க்க நெறிகளைக்கடைப்பிடித்து வந்தவர். அவர் கடைசிமூச்சு இருக்கும் வரை, தான் கொண்ட கொள்கையில் உறுதியுடன் இருந்தவர் என்று குறிப்பிட்டார்.

தவத்திரு ஊரன் அடிகள் பேசுகையில். ''சாதி, சமய, இன வேறுபாடற்ற மனிதராகத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. திகழ்ந்தார்'' என்று குறிப் பிட்டார்.

பேராசிரியர் டாக்டர் திரு. நா. பாண்டுரங்கன் பேசுகையில், 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க. விற்கு விழா எடுப்பதோடு நின்று விடாமல், நாம் அவர் விட்டுச் சென்ற பணியை முடிப்பதற்காக, நம்மை நாமேதயாராக்கிக்கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

சிறுவை திரு. மோகனசுந்தரம் பேசுகையில், 'பெண்ணின் பெருமை' என்ற நூலை அரசு மலிவுப் பதிப்பாக வெளியிட்டுத்தமிழ் உலகத்திற்கு வழங்க வேண்டும்'' என்று குறிப்பிட் டார்.

திரு அன்பு கணபதி பேசுகையில், ''திரு. வி. க. தமிழ்க்காக ஆற்றிய பணி சொல்லில் அடங்காதது. திரு. வி. க. நூலை அரசே நாட்டுடைமை ஆக்க முன் வர வேண்டும்''என்று குறிப்பிட்டார்.

### மாண்புமிகு காளிமுத்து

விழாவினைத் தொடங்கி வைத்த மாண்புமிகுவேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்துஅவர்கள் பேசுகையில்,

''ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்நாட்டுச் சான்றோர்களின் வரலாற்றுத் தொகுப்புதான் என்பார்கள. திரு. வி. க. வின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து படித்தால் அதுதான் தமிழ்நாட்டின் சரித்திரம்—தமிழ்நாட்டின் சமுதாய சீர்திருத்த வரலாறு-தமிழ்நாட்டின் பெண்ணுரிமை இயக்க வரலாறு-தமிழ்நாட்டின் தொழிற்சங்க வரலாறு என்று கூறலாம். இப்படி பல பட்டைகள் தீட்டப்பட்ட வைரமாகத் திகழ்ந்தவர் திரு. வி. க. அவரது வார்த்தைகள் மற்றவர்களை புண்படுத்தியதில்லை. அவரது வாழ்க்கை மற்றவர்களுக்கு முள் வேலியாக இருந்ததில்லை. தமிழகத்தில் புதிய மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் திரு. வி. க.

''தியாகத்தைக் 'கொள்முதல்' ஆக்கி தன் சொந்த வாழ்க்கைக்காக அவர் பள பளப்பாக்கிக் கொண்டவரல்ல; ஒளிதந்துஅணையும் மெழுகுவர்த்தி போல, மணம் தந்து மறையும் சந்தனக் கட்டைகள் போல தனது வாழ்க்கையை ஆக்கிக் கொண்டார்.

''தமிழுக்குச் சிறப்பு தேடித் தந்தார். தமிழ் ஒதுக்கப்பட்டு இருந்த காலத்தில் தமிழுக்குப் பெருமை தேடித்தந்தவர். தமிழுக்கு ஆபத்து வந்தபோது அஞ்சாது போர்க்களத்தில் குதித்தவர். அவர் காட்டிய அந்த வழி நெறி நின்று, மொழிக்காக உறுதி எடுப்போம்,'' என்றார்.

செய்தித் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

29.8.'82 மாலை திரு.வி.க. வின் பிறந்த நாள் விழா வெஸ்லி உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் ''தொழிலாளர் திருநாளாகக்' கொண்டாடப்பட்டது.

பிற்பகல் கலைமாமணி திரு வி கோவிந்தசாமி, மாஸ்டர் சுரேஷ் பாபு ஆகியோரின் வயலின் இசையுடன் விழா துவக்கம் ஆகியது.



பின்னர், திரு.வி.க. அவர்களின் பேத்தி வசந்தகுமாரி திரு.வி.க. அவர்களைக் குறித்துப் பாடல்கள் பாடினார்.

அதன்பின்னர் 'கலைமாமணி' சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''அரசியலில் நுழைந்த முதல் புலவர் பெருமான் திரு.வி.க. பேச்சுக்கும் நடைமுறைக்கும் வித்தியாசமின்றி வாழ்ந்த பெரியவர், திரு.வி.க.''

அடுத்து, உரையாற்றிய திரு அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் தெரிவித்தார்:

"திரு,வி.க. எந்த இடத்திற்கும் பேசச் சென்றாலும், எளிமையையே பின்பற்றுவார்.''

அடுத்து உரையாற்றிய திரு வி.பி.சிந்தன் அவர்கள் தெரிவித்தார்; திரு.வி.க. 'குழந்தை உள்ளம் கொண்டவர். கருத்து மாறுபட்டவர்கள் அவரிடம் பேசும்போது பொறுமையோடு கேட்டுக் கொள்வார்,''

திரு எஸ். சி. சி அந்தோணிப் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்: ''உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் வகையிலே திரு.

வி.க. பேசக்கூடியவர். அந்தப் பேச்சு, கேட்டவர்கள் மனதில் பதியும்''

பின்னர் உரையாற்றிய திரு எம். கலியாணசுந்தரம் ,எம்.பி. அவர்கள் குறிப்பிட்டார்:

''திரு.வி.க. தொழிலாளர் சங்கத்தை மட்டுமல்ல -தொழிலாளர்களையும், தொழிலாளர் தலைவர்களையும் உருவாக்கிய பெரியார்.''

அடுத்து உரையாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தெரிவித்தார்:

''உழைக்கும் வர்க்கத்திடம் அன்பு கொண்டவர் திரு.வி.க. கடவுளும் ஒரு தொழிலாளி என்று சொல்வார் அவர்."

பின்னர் உரையாற்றிய முத்தமிழ்க் காவலர் திரு.கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இலக்கியம், சமூகம், அரசியல் சீர்திருத்தம், தொழில் என்னும் 5 துறையிலே அவர் சிறந்து விளங்கினார். ஒழுக்கத்தை வற்புறுத்தினார். தாமும் ஒழுக்கத்துடன் வாழ்ந்தார்.''

அடுத்து உரையாற்றிய முன்னாள் மேயர் திரு டி.செங்கல்வராயன் அவர்கள் தெரிவித்தார். எளிய வாழ்க்கை முறையின் காரணமாக, 'சாது' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். திரு.வி.க. மக்களின் நலனுக்காக மக்கள் சக்தியைத் திரட்டிய மேதை அவர்''

**மாண்புமிகு எஸ். இராகவானந்தம்**

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் குறிப்பிட்டார்:

''இந்தியாவில் முதன் முதலாகத் தொழிற்சங்கத்தைத் துவக்கியவர் திரு.வி.க.

''அவர் பல்வேறு தொழிலாளர் போராட்டங்களுக்கு ஆதரவு தந்திருக்கிறார். பி.அண்டு சி ஆலைத் தொழிலாளர் நடத்திய போராட்டம்-1928ஆம் ஆண்டு ரயில்வே தொழிலாளர் நடத்திய போராட்டம் ஆகியவற்றிற்குப் பேராதரவு தந்தார். தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டால் ஒழிய, அவர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது கிடையாது.''

**டாக்டர் ம. பொ. சி**

தலைமை ஏற்ற மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் உரையில் குறிப்பிட்டார்:

''மனிதனுக்குத் தேவையான பண்புகள் எல்லாம் மொத்தமாகக் கொண்டிருந்த தலைவர் திரு.வி.க இலக்கியத்தில் அரசியலை அரசியலில இலக்கியத்தைப் புகுத்தியவர் திரு.வி.க. எதிலும் ஒப்பு நோக்குகின்ற பண்பு அவரிடம் இருந்தது."

**மாண்புமிகு முதல்வர்**

திரு.வி.க. நூற்றாண்டு விழாவையொட்டி இராயப்பேட்டை வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் நடந்த விழாவில் திரு.வி.க.வின் சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில்,

''திரு.வி.க. எழுதி என்.வி. என். எனக்கு அளித்த, இளமை விருந்து' என்னும் நூலில் உடலை எப்படிப் பேணிப் பாதுகாப்பது இளமையைஎப்படிப்பாதுகாப்பது எப்படியெல்லாம் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

''இந்த நாட்டிலே இருக்கிற மக்கள், குழந்தைகள் வலியூட்டப்பட்ட நிலையில் உள்ளத் திறத்தோடு ஒழுக்கம் மிகுந்த நாணயத்தோடு வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் தான், எதிர்காலத்திலே எந்த நாட்டோடும் நாம் போராட முடியும்.

''போராட்டம் என்றால் துப்பாக்கி ஏந்திக்கொண்டு செல்வது அல்ல. அறிவுப் போராட்டத்தில் நாம் முன்வரிசையில் முதலாவதாக நிற்கமுடியும். அதைப் பெற்றாக வேண்டும் என்பதை நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

''கல்வி கற்கப் போகிறவர்கள் எதிர்காலத்தில் தமிழை உயிராக மதிப்பவர்கள்தான் தமிழகத்தில் இருப்பவர்கள் என்று இருந்தாலும்கூட அது வார்த்தையிலே மட்டுமே இருக்கக்கூடாது. உள்ளத்திலே-உணர்விலே-நரம்பிலே ரத்தத்திலே அது ஊறிப்போன ஒன்றாக ஆக்கப்பட வேண்டும்.

''திரு.வி.க. பல பிரச்சினை பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார். 50-60 நூல்களை எழுதியிருக்கிறார். அவை நூலகங்களில் வைக்கும்போது மாணவர்கள் படிக்க வேண்டும். அப்படி அவர்கள் படித்தார்களானால் பெண்ணின் பெருமை மாணவியர்களுக்குத் தெரியும். ஆணின் கடமை ஆண்களுக்குத் தெரியும்.

''தமிழகத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திரு.வி.க. போன்றவர்களின் சிலைகள் தோன்றவேண்டும். அரசு மட்டும் செய்யாமல் வசதி படைத்தவர்களும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

''தமிழைக் காத்து, வளர்த்து பெருமை சேர்த்து-மொழியால் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள் இது. இந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் இன்னொரு அறிவிப்பையும் இங்கே செய்கிறேன். சென்னை வெலிங்டன் திரையரங்கம் முதல் லஸ் முனைவரையுள்ள ஜெனரல் பேட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை என்று தற்போது அழைக்கப்படும் சாலை இனி, திரு.வி.க. நெடுஞ்சாலை என்று அழைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குத் ''திரு.வி.க. அரசினர் கலைக்கல்லூரி'' என்று பெயரிடப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

திரு.வி.க. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

விழா இறுதியில், பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுத் தனி அலுவலர் திரு சி.என். கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி கூறினார்.

# சாத்தமங்கலம்

## கால்நடைக் கவனிப்பு



மதுரை மாவட்டத்தில், கால்நடைகளுக்கெனப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பில் ஒன்றும், கால்நடைப் பராமரிப்புத்துறை சார்பில் ஒன்றுமாக இரண்டு செயற்கைமுறைக் கருத்தரிப்பு நிலையங்கள் இருக்கின்றன.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் சார்பில் உள்ள மையம் மதுரை-சாத்தமங்கலத்தில் அமைந்துள்ளது. இங்கு விந்துசேகரிப்பு, தரம் பிரித்தல், பாதுகாத்தல் ஆகிய பணிகள் நடக்கின்றன.

1980ல் துவக்கப்பட்ட இந்த மையத்தில் உறைவிந்து தயாரித்தல், பாதுகாத்தல் போன்ற பணிகள் நடக்கின்றன. இங்கு முர்ரா இன மாடுகள் பத்தும், ஜெர்ஸி இனக் காளைகள் ஆறும் இருக்கின்றன.

அந்த மாடுகள் மூலம் 1981-82ல் மட்டும் மதுரை வட்டாரத்தில் 14,320 முர்ரா எருமைகள் பயனடைந்துள்ளன. ஜெர்ஸி மாடுகள் 8,580 பயனடைந்துள்ளன. இதனால் 1,175 எருமைக் கிடேறிக் கன்றுகளும், ஜெர்ஸியில் 1208 கிடேறிக் கன்றுகளும் 1,059 ஜெர்ஸி கடாக் கன்றுகளும் பிறந்துள்ளன.

40 கிலோ மீட்டர் சுற்றளவு வரையுள்ள கிராமக் கால்நடைகள் இந்த மையத்தால் கவனிக்கப்படுகின்றன. அவசரச் சிகிச்சைப் பிரிவு மிங்குள்ளது. தூரக் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு ஏதேனும் துன்பமென்றால், தொலைபேசிமூலம் இங்கு தெரிவித்தாலே நடமாடும் வண்டி ( Mobile Unit' ) அங்கு வந்து சேரும். அப்படிச்சென்று கவனிக்கும் 'கேஸ்' களுக்கான மருந்து செலவு, டாக்டர் கட்டணம் எல்லாவற்றையும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையமே ஏற்கிறது.

உறைவிந்துப் பயிற்சிக்காக கிராமநல ஊழியர்கள் பயிற்சித் திட்டம் இங்கே உண்டு. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒருவரே இப்பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார். பயிற்சி காலத்தில் ரூ.100 உதவிப்பணம் தரப்படுகிறது.

இதற்கான ஐந்து மாதக் காலப் பயிற்சியின்போது சினை ஊசி போடும் முறை, மாடுகளின் நிலை சினை மருந்தைப் பாதுகாக்கும் முறை, கருத்தரிக்கச் செய்யும் முறை ஆகியவையும், பின்னர் உறை விந்து பற்றிய ஐந்துநாள் பயிற்சியும் , அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியெல்லாம் முறைப்படி முடித்துச் செல்வோருக்கு ரூ. 3500 பெறுமானமுள்ள உறைவிந்துக் குடுவையொன்றும், உறைவிந்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

கால்நடைகளை உறைவிந்து மூலம் கருத்தரிக்கச் செய்யும் முறைக்கு மதுரை மாவட்டத்திலுள்ள அத்தனைக் கிராமங்களிலும் நல்ல வரவேற்பிருக்கிறது.

கால்நடைகளுக்கான முதலுதவிச் சிகிச்சைக்காக 5 நாள் பயிற்சி ரூ. 50 உதவிப் பணத்தோடு இங்கு தரப்படுகிறது. முதலுதவிக்காகச் சென்று வருவோருக்கு ரூ. 25 ரொக்கமும், இதுதவிர வழிச் செலவும் தரப்படுகிறது.

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ், கால்நடைத் தீவனத்தொழிற்சாலையொன்று 81 லட்சம் ரூபாயில் சாத்தமங்கலத்தில் அமைய அரசு அனுமதித்துள்ளது. கிராம நல ஊழியர் கட்டடம் ஒன்றும் பயிற்சி பெறுவோருக்கென விடுதி கட்டடம் ஒன்றும் அரசால் இங்கே கட்டப்படவிருக்கின்றன.





# ஊனமுற்றோர் மண்டல மறு வாழ்வு இல்லம்

—ராஜா

அனைத்து நாட்டு உடல் ஊன முற்றோர் ஆண்டாக 1981-ஆம் ஆண்டு உலகெங்கும் கொண்டாடப்பட்ட போதிலும், தமிழ் நாடு அதில் தனிச் சிறப்படைந்தது.

ஊனமுற்றோர் நலனில் பெரும் கவனம் செலுத்திய அரசு, நல்ல பல திட்டங்களை அவர்கள் தம் எதிர்கால வாழ்வு கருதித் தீட்டி வகையுறச் செயல் படுத்தியது. கடந்த ஆண்டு மட்டுமல்ல; எந்த ஆண்டும் அவர்கள் நல்ல முறையிலே கவனிக்கப்பட வேண்டுமென்ற கருத்தில் - மதுரை மாநகரில் 1981 மார்ச்சுத் திங்களில் துவக்கப் பட்டதுதான் மண்டல ஊன முற்றோர் மறுவாழ்வு மையம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றோர் வாழ்வை வளமாக்கும் குறிக்கோளோடு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும் இது.

மதுரை திருநகர் பகுதியிலே உள்ள இந்த மையத்தில் 16 முதல் 45 வயதுக்குட்பட்ட ஊன முற்றோர் பல்வேறு வகைப்பணிகளில் பயிற்சி பெறுகிறார்கள். ஒரு மாதக் காலமே பயிற்சி. அந்த ஒரு மாதக்கால மதிப்பீடு முடிந்த பின்னர், ஒவ்வொரு ஊன முற்றவருக்கும் நூறு ரூபாய் உதவிப் பணம் அளிக்கப்படுகிறது.

மண்டல ஊனமுற்றோர் மறு வாழ்வு மையத்தில் சேர்வோரின் மனப்பாங்கு, அங்குள்ள மனோ தத்துவ உதவியாளரால் மனோ தத்துவரீதியில் மதிப்பீடு செய்யப் பட்டு அதற்கேற்றபடி தையல், பொறியியல் போன்ற பணிகளிலேயே அவர்களுக்குத் தக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் அவரவர் கல்வித் தகுதிக்கேற்ப அவர்கள் வெளியே வேலைவாய்ப்புப் பெறச் செய்திடவும் இந்த அமைப்பே தக்க நடவடிக்கைமேற்கொள்ளுகிறது.

தனியே தொழில் துவக்கும் தகுதி பெற்ற ஊனமுற்றவர்க்கு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத் தரவும், அரசு மூலம் அவர்களுக்கு உரிய மான்யத்தைத் தங்குதடையின்றிப் பெறவும் உதவி செய்யப் படுகிறது.

இது மட்டுமல்ல; பயிற்சியாளர்க்குச் செயற்கை உறுப்புகள், ஒலி உணர் செவிக் கருவிகள், மூன்று சக்கர வண்டிகள் ஆகியவை அரசுத்திட்டங்கள்மூலமோ அல்லது தனியார் சேவை நிறுவனங்கள் மூலமோ கிடைத்திட ஆவன செய்கிறது இந்த அமைப்பு.

இம் மையத்திலே ஒரு மாதப் பயிற்சிக்கு120 பேர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இது வரை அப்படி இங்கு அனுமதிக்கப் பட்ட ஊனமுற்றோர் எண்ணிக்கை 194 ஆகும்.



இப்போது இத்தகைய அமைப்பு சென்னை தஞ்சை கோவை வேலூர் ஆகிய இடங்களிலேயும் அமைந்துள்ளது. ஆனால் அரசு சமூகநலத் துறையினாலே, மண்டல உடல ஊனமுற்றோர்மையம் முதன் முதலாக மதுரை மாநகரிலேதான் துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரையில் தமிழ் இசைச் சங்கம்

மதுரையில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் சீரிய முயற்சியால் ரூ. 75 லட்சம் செலவில் தமிழ் இசைச் சங்கக் கட்டடம் மிகப் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்டுள்ளது.

மதுரையில் அமையும் இந்தத் தமிழ் இசைச் சங்கக் கட்டடம் இருக்கும் இடம், 10 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய பள்ளமாக இருந்தது. இன்று அதே இடத்தில் ரூ. 75 லட்சம் செலவில், கிழக்கு ஆசியாவிலேயே மிக அழகிய பெரிய இசை அரங்கமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான $2\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தினைத் தமிழக அரசு இலவசமாகக் கொடுத்துள்ளது. இக்கட்டடத்தில் ஒரே நேரத்தில் 1500 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இந்த அரங்கம் முழுமையும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. கட்டடம் கட்டி முடிந்ததும், இசை நூலகமும், தமிழ் இசைக் கல்லூரியும் நிறுவவும் ஆட்சிக் குழுவினர் முடிவெடுத்துள்ளனர்.

# தாயகம் திரும்புவோர்க்கு...

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்ட சாஸ்திரி - சிரிமோவோ ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் 5,25,000 இலங்கை வாழ் இந்தியர்களை 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் குடியமர்த்த வேண்டியுள்ளது. இவ்வாறு குடியமர்த்த இருக்கும் இலங்கை வாழ் இந்தியர்களில் பெரும்பாலோர் தேயிலை மற்றும் இதரத் தோட்டங்களில் வேலை செய்பவர்களாக இருப்பதால் இங்கு அவர்களை அதைப் போன்ற வேலைக்கு அமர்த்துவது மிகப் பொருத்தமானது என்று மத்திய அரசு கருதுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு நீலகிரி மாவட்டத்தில் தேயிலை வளர்ப்புப் பணியினை மேற்கொள்ள மத்திய அரசால் திட்டம் வகுக்கப்பட்டு முதன் முதலில் 1968ம் ஆண்டு சோதனை முறையில் துவக்கப்பட்டது. இதன்படி 1969ம் ஆண்டு ஓர் அடிப்படைத் திட்டம்தேயிலைவளர்ப்புக்காகத் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1500 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடவும் இதனால் 3750 தோட்டத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தவும் நீலகிரியில் இரண்டு கோட்டங்கள் உயர்மலைப்பகுதி நிலத்திலும் மூன்று கோட்டங்கள் இடை மலைப்பகுதியான கூடலூர் வையநாடு பகுதியிலும் ஆரம்பிக்கப் பட்டது. இத்திட்டம் முழுமையாக நிறைவேறும் போது இது இந்தியாவிலேயே மிகப் பெரிய தனி உயர் ரகத் தேயிலைத் தோட்டமாகும்.

நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முன்னர் இயங்கிக் கொண்டிருந்த அரசுதேயிலைத் தோட்டத் திட்டமானது ஓர் அரசு நிறுவனக் கழகமாக 1956ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்திற்குட்பட்டு 22.8.75ல் இணைக்கப்பட்டது. 1.4.76 முதல் இத் தேயிலைத் தோட்டக் கழகம் இயங்கவிருக்கிறது. வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தினர், கனரா வங்கி, யுனைடெட் கமர்ஷியல் வங்கி, இந்தியன் வங்கி மூலமாக இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ. 302 லட்சத்து 79 ஆயிரமும் இரண்டாவது கட்டமாக ரூ. 235 லட்சத்து 76 ஆயிரமும் நிதி உதவி செய்ய ஒப்புதல் அளித்துள்ளனர்.

முதல் கட்டமாக 1968ம் ஆண்டு முதல் 1979ம் ஆண்டு வரை தேயிலை பயிரிடப்படுவதற்காக 1517 ஹெக்டர் நிலப் பரப்பு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 600 ஹெக்டேர் நிலம் தேயிலை பயிரிட திட்டமிடப் பட்டுள்ளது. இதில் முதலாண்டு 1979ம்ஆண்டு 300 ஹெக்டர் நிலம் இரண்டு தோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு (தேவாலா மற்றும் கூடலூர் தேயிலை பயிரிடப் பட்டது. இந்த இரண்டாம் கட்ட நிலை 1982ஆம் ஆண்டு முழுமை பெறும். அதன் பிறகு 100 ஹெக்டேர் நிலம் மூன்றாவது கட்டமாகத் தேயிலை பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திட்டம் நிறைவேற்றப்படுதல்

இக்கழகம் முதல் கட்டத்தின் கீழ் 1517 ஹெக்டர் நிலப் பரப்பையும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 600 ஹெக்டேர் நிலப்பரப்பையும் நீண்டகாலக் குத்தகையில் ஒரு ஹெக்டருக்கு வருடத்திற்கு ரூ. 500 வீதம் குத்தகை வரி வழங்கி தமிழ்நாடு அரசு வனத்துறையிலிருந்து நிலத்தைப் பெற்று இயங்கி வருகிறது. இவ்வாறு இதுவரை 1897.16 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

## பயிர் செய்யும் முறை

தற்போதுள்ள காடுகளை துப்புரவாக்கி பயன்படுத்தப்பட்டு 15 முதல் 18 மாதம் வயதுள்ள உயர்ரகத்தேயிலை நாற்றுக்களை ஒரு ஹெக்டருக்கு 11,000 வீதம் நடப்படுகின்றன. இந்நாற்றுக்கள் தரத்தில் சிறந்ததாய் செடிகளிலிருந்து எடுக்கப்பட்ட கழிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. செடி நட்ட நான்கு ஆண்டுகளிலேயே முறையாக 10 நாட்களுக்கு ஒருமுறைதேயிலைக் கொழுந்து பறிக்கப் பட்டு வருகிறது. இந்த முதல் நான்குஆண்டுகளுக்கிடையே செடிகளுக்கு நிலத்திருத்தம், களை பிடுங்குதல், பூச்சி மருந்து அடித்தல், தொற்று நோய்த்தடுப்பு மருந்தடித்தல் போன்ற பண்ணை வளர்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர்மட்ட மலைப்பகுதியில் உள்ள தேயிலை செடிகளுக்கு நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் கீழ்ச் சமவெளி மலைப்பகுதியில்



உள்ள தேயிலைச் செடிகளுக்கு ஆறுமுதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தழை வெட்டி செடிகளைப் புதுப்பிக்கும் வேலை செய்யப்படுகிறது.

**இலங்கை அகதிகளை வேலைக்கு அமர்த்துதல்.**

இக்கழகத்தில் 2060 இலங்கை குடிபெயர்ந்தோர் குடும்பங்களுக்கு இதுவரை மறு வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அதுவும் இல்லாமல் சேரம்பாடி கோட்டத்தில் ஆரம்பம் முதல் தற்காலிகமாக பணியாற்றிய 24 இலங்கை குடிபெயர்ந்தோர் அல்லாத குடும்பங்கள் நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

**தொழிலாளர்கள் மனை கட்டுதல்**

இக்கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2194 தொழிலாளர் குடியிருப்புகளில் இதுவரை 1882 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளை கட்டி முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**அலுவலர்களின் குடியிருப்புகள் கட்டுதல்**

இக்கழகத்தில் நிர்வாக இயக்குநர் முதல் பலதரப்பட்ட ஊழியர்களுக்கும் இலவச குடியிருப்பு மனைகள் கட்டப் பட்டுள்ளன. அனைத்துப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் அளிப்பதற்கான திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்படும்.

**தொழிலாளர்களின் கடமை**

ஒரு நாளுக்கு 8 மணி நேரம் வீதம் வாரத்தில் 6 நாட்கள் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அவர்களுக்கு ஊதியம் வழங்கப் படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் ஊதியத்துடன் கூடிய ஒன்பது விடுமுறை நாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் அவர்கள் பணிபுரிகின்றனர். இந்நிறுவனத்தில் உள்ள எல்லா வேலைகளும் நிரந்தரத் தொழிலாளர்களால் செய்யப்பட்டுவருகின்றன. தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் இதர சமூக நலத்திட்டங்களும் இக்கழகத்தால் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சேரங்கோடு தேயிலைத் தொழிற்சாலை**

தயாரிக்கப்பட்ட பெரும் செயல்திட்டத்தில் கூடலூர்வையநாடு பகுதியைச் சார்ந்த (சேரங்கோடு சேரம்பாடி நெல்லியாளம்) மூன்று இடை மலைப் பிரதேசத்திலுள்ள தோட்டங்களிலிருந்து பறிக்கப்படும் தேயிலைக்கென ஓர் தொழிற்சாலையும் குன்னூர் கோத்தகிரி ஆகிய தோட்டங்களுக்கென மற்றொரு தொழிற்சாலையும் கட்ட திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. முதல் கட்டமாக இடை மலைப் பிரதேசத்திலுள்ள மூன்று தோட்டங்களில் கிடைக்கும் தேயிலைக் கொழுந்திலிருந்து ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் கிலோ (15 இலட்சம்) தேயிலை தயாரிக்கும் திறனுள்ள சி.டி.சி. தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ. 87. லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. **மிகப் பெரியதும் நவீன இயந்திரங்களைக் கொண்டதுமான இத் தொழிற்சாலைதான் தமிழ்நாடு அரசு நிறுவனத்தால் கட்டப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் மிகப் பெரியதொன்றாகும்.**

**குன்னூரில் இரண்டாவது தொழிற்சாலை**

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பி.ஓ.பி. தேயிலை விலையை கணக்கிட்டுப் பார்த்தில் பலவகையான தாய்க் கழியில் வரும் தேயிலையானது சாதாரணமாக பி.ஓ.பி. தேயிலையைக் காட்டிலும் ஒரு ரூபாயாவது அதிகம் விலை நிச்சயமாசக் கிடைக்கும். தாய்க் கழியில் உற்பத்தியாகும் தேயிலைச் செடியிலிருந்து கிடைக்கும் கொழுந்துகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு குன்னூரில் ஆண்டு ஒன்றுக்கு 0.75 மில்லியன் கிலோ உற்பத்தித் திறனுள்ள ஆர்த் தோட்டக்ஸ் தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ. 50 இலட்சம் செலவில் கட்டப் பட்டு செயல்பட்டு வருகின்றது.

**தேயிலை பயிரிடுதல் அதிகரித்தல்**

மேலும் 1000 ஹெக்டர் ஜென்மம் நிலத்தில் தேயிலை பயிர் செய்யத் திட்டமிடப்பட்டு இதற்கான வேலை துவங்கப்பட்டுள்ளது. இதன்படி மேலும் 1250 இலங்கை வாழ் இந்திய குடும்பங்களுக்கு வேலை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

**நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகளுக்கு நாற்றுகள் வழங்குதல்**

நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு தேயிலை நாற்று ஒன்றுக்கு 75 காசு வீதம் குறைந்த விலையில் நில அபிவிருத்தி வங்கி மூலமாக வழங்கி சிறு விவசாயிகள் ஊக்குவிக்கப் படுகிறார்கள்.



தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், பாலக்கோடு

தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கைக்கடிகாரம் வழங்கும் விழா 10.8.82 அன்று சர்க்கரை ஆலை அமைப்பகத்தில் நடந்தது. விழாவில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் கலந்து கொண்டு 814 தொழிலாளர்களுக்குக் கைக்கடிகாரங்களை வழங்கினார். ஒரு கைக்கடிகாரத்தின் மதிப்பு 403.96 ஆகும்.

**தெ**ன்னையில் எத்தனை வகைகள் உள்ளன?

தென்னையில் நெட்டை ரகம், குட்டை ரகம், நெட்டை குட்டை ஒட்டு ரகம் முதலிய மூன்று ரகங்கள் உண்டு. இவைகளேயன்றி பயிரிடப்படும் மரத்தின் உயரத்தையும் காயின் பருமனையும் பொருத்து பல உள் நாட்டு, வெளிநாட்டு ரகங்கள் உள்ளது.

மேற்குக் கடற்கரை நெட்டை ரகம் தமிழ்நாட்டில் பயிரிடச் சிறந்ததா?

சாதாரணமாக நமது நாட்டு ரகத்தில் உயரமாக வளர்ந்து நீண்டகாலம் பலன் கொடுக்கக்கூடிய ரகத்தையே நெட்டை ரகம் எனக் கூறுகிறோம். மேற்குக் கடற்கரைப் பகுதியில் பயிரிடப்படும் நெட்டை ரகத்தை 'மேற்கு கடற்கரை நெட்டை ரகம்' என்றும், கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பயிரிடப்படுவதை



# தென்னைகள் பலவிதம்

டாக்டர் மு. ஸ்டீபன் துரைராஜ்,
திருச்சிராப்பள்ளி.

அதிக அளவு தென்னை பயிரிட ஏற்ற ரகம் எது? அந்த ரகத்தின் சிறப்புகள் யாவை?

அதிக அளவு தென்னை பயிரிட ஏற்ற ரகம் நெட்டை ரகம். இது நட்டு 6 ஆண்டுகளில் பலனுக்கு வரும். 80 முதல் 120 ஆண்டுகள் வரை இது பலன் தரும். சராசரியாக வருடந்தோறும் மரம் ஒன்றுக்கு 75 முதல் 80 காய்கள் காய்க்கும் காய்கள் நடுத்தரப் பருமனாகவும், அதிக அளவு பருப்புடனும் இருக்கும். இவ்வகைத் தென்னையே நமது தமிழ் நாட்டிலுள்ள தட்ப வெப்ப நிலைக்கும், மண்ணின் தன்மைக்கும் மிகவும் ஏற்றது.

'கிழக்குக் கடற்கரை நெட்டை ரகம்' என்றும், சொல்லுகிறோம். பொதுவாகப் பார்க்கும்போது. இந்த இரண்டு நெட்டை ரகங்களுக்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை. எனினும் ஒரு பகுதியில் பல காலங்களாகப் பயிரிடப்படும் எந்த ரகமும் அந்தப் பகுதியின் சீதோஷ்ண நிலைக்கும், மண்ணின் தன்மைக்கும் ஏற்ப வளர்ந்து, நல்ல பலனைக் கொடுக்கும் தன்மையைப் பெறுகிறது. ஆகவே மேற்குக் கடற்கரைக்கு அருகிலுள்ள கோயம்புத்தூர் முதலிய பாகங்களில் மேற்கு கடற்கரை நெட்டை ரகம் நல்ல பலனைக் கொடுக்கும். அதுபோல செங்கல்பட்டு, வடஆர்க்காடு,





தென்ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் கிழக்கு கடற்கரை நெட்டை ரகம் நல்ல மகசூலைத் தரும்.

**ஒரு தென்னை மரம் எத்தனை ஆண்டுகளுக்குப் பலன் தரும்? ஒரு ஆண்டுக்கு எத்தனை காய் காய்க்கும்?**

நெட்டை ரக தென்னை மரம் நட்டபின் ஆறாவது ஆண்டு காய்க்கத் தொடங்கி சுமார் 100 ஆண்டுகள் வரை பலன் கொடுத்தாலும், முதல் 40 ஆண்டுகள் நல்ல மகசூலைக் கொடுக்கும். மாதந்தோறும் ஒரு பாளைத் தோன்றி குலை ஒன்றுக்கு 8 முதல் 10 காய்கள் வரை கொடுத்து, நல்ல மரம் ஒன்றுக்கு 90 முதல் 120 காய்கள் வரை கொடுக்கும்.

**குறைந்த வருடத்தில் காய் கொடுக்கும் தென்னை வகை எது? எத்தனை வருடத்தில் பலனுக்கு வரும்? வருடத்திற்கு எத்தனை காய் காய்க்கும்?**

குட்டை ரகத் தென்னையே குறைந்த வருடத்தில் பலன் கொடுக்கக்கூடியது. நட்ட 3½ ஆண்டு கழித்து காய்க்க ஆரம்பித்து, சுமார் 40 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். மரம் ஒன்றுக்கு வருடம் தோறும் சராசரியாக 50-55 காய்கள்தான் கிடைக்கும். காய்கள் சிறியதாகவும், பருப்பு மெல்லியதாகவும் இருக்கும். எண்ணெய் ஆட்டுவதற்கோ, சமைப்பதற்கோ இதன் பருப்பு ஏற்றதல்ல. இளநீருக்கு மட்டுமே இது சிறந்தது. நட்டபின் முதல் 10, 15 ஆண்டுகள் மட்டுமே இது நல்ல பலனைக் கொடுக்கும்.

**வீட்டு வாசலில் நடவு செய்ய எந்த ரக தென்னை சிறந்தது? வீட்டின் சுவற்றிலிருந்து எத்தனை அடி தள்ளி நடவேண்டும்?**

குட்டை ரக தென்னையில் பச்சை, மஞ்சள், ஆரஞ்சு முதலிய பல அழகிய வண்ண ரகங்களையுங் காய்கள் இருப்பதால் இந்த ரகத்தை வீட்டின் முன் நடுவது வீட்டுக்கு அழகைக் கொடுக்கும். மரம் சுமார் 2 அடி உயரமிருக்கும்போதே குலைகள் இருப்பதால் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாய் இருக்கும். இளநீருக்கும் இது ஏற்றது. அவற்றிலிருந்து குறைந்தது 3 அடியாவது தள்ளி நடுவது நல்லது.

**இளநீருக்கு ஏற்ற தென்னை வகை எது?**

குட்டை ரகத் தென்னையே இளநீருக்கு ஏற்றது.

**நெட்டை ரகம், குட்டை ரகம் இவைகளில் ஒரு தேங்காயில் கிடைக்கும் கொப்பரையின் அளவு, எண்ணெய்ச் சத்து எவ்வளவு?**

ஒரு தேங்காயில் கிடைக்கும் கொப்பரையின் அளவு நெட்டை ரகத்தில் 165 கிராம், குட்டை ரகத்தில் 100 கிராம், ஒட்டு ரகத்தில் 180 கிராம். எண்ணெய் சத்தில் அளவு நெட்டை ரகத்தில் 72 சதம், குட்டை ரகத்தில் 68 சதம், ஒட்டு ரகத்தில் 71 சதம்.

## மண் வகையும் பருவ நிலையும்

**தென்னை எந்த விதமான மண்ணில் நன்றாகச் செழித்து வளரும்?**

பலதரப்பட்ட மண் வகைகளிலும் தென்னை வளரக்கூடியது. மணற்பாங்கான கடற்கரைப் பகுதிகளிலும் செம்மண் மற்றும் கரிசல்மண்



நிலங்களிலும், வண்டல்மண் பிரதேசங்களிலும் சில கற்களும் கரடுமுரடுமாகத் தூளாகும் பாறைகளைக் கொண்ட இடங்களிலும் தென்னை வளரும். எனினும் நல்ல வடிகால் வசதி உடைய மணல் கலந்த செழிப்பான வண்டல் மண் நிலமே தென்னை சாகுபடிக்கு மிகவும் சிறந்தது. நீர்ப்பிடிப்பு இல்லாத மண்ணும், வடிகால் வசதி இல்லாத நிலமும், தென்னை பயிரிட ஏற்றவை அல்ல.

**தென்னங்கன்றுகள் கலர் நிறத்தில் வளருமா?**

பி. சி. பி. ஹெச். அளவுக்கும் மேற்பட்ட கலர்த்தன்மை உடைய நிலங்களில் தென்னை நல்ல பலனைத் தருவதில்லை.

**தென்னை மணலில் நன்றாக வளருமா?**

தென்னை மணற்பாங்கான நிலத்தில் நன்றாக வளரும்.

**ஒரு அடிக்கு கீழ் சுக்கான் வைத்த மண்ணாக இருந்தால் தென்னை நன்கு வளருமா?**

நன்றாக வளராது.

**தென்னங்கன்று நட ஏற்ற பருவம் எது?**

தென் மேற்கு அல்லது வடகிழக்குப்பருவ மழை ஆரம்பமாவதற்கு முன் தென்னம்பிள்ளை நடுவது நல்லது. தண்ணீர் வசதி உள்ள இடங்களில் பருவ மழைக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே நடலாம். பள்ளத்தாக்கான பகுதிகளிலும் தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களிலும் பருவ மழை முடியும் நிலையில் நடவேண்டும்.





# தாய் தெய்வம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை விழுப்புரத்திலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உடையாநத்தம் என்ற கிராமத்தில் மலை அடிவாரத்தில் 3 மீட்டர் உயரம் (10 அடி) உயரத்தில் கல் பலகையால் செதுக்கப்பட்ட ஒரு விசித்திரமான உருவத்தைக் கண்டுபிடித்துள்ளது. இந்த உருவத்தைச் சுற்றிலும் வட்டமாக கல் பலகைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இந்தச் சின்னத்தின் அருகில் சுமார் 30க்கு மேற்பட்ட பண்டைய கால ஈமச் சின்னங்கள் (கல் திட்டைகள்) காணப்படுகின்றன. தலை, இரண்டு, கை, கால் இவை எல்லாம் முழுமையாகச்காணப் படாமல் ஒரு உருட்டிச்சட்டி பொம்மைபோல் இது காணப்படுகிறது. இது போன்ற விசித்திரமான கல், தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்னர் திருவண்ணாமலைக்கு மேற்கில் 25 கல் தொலைவில் 'செங்கம்' பகுதியில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 'மோட்டூர் என்ற ஊரில் இதே போன்ற ஒரு கல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது உடையாநத்தத்தில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கும் இந்தக் கல் சின்னம் உருவம் நன்கு முழுமை பாகக் காணப்படுவதால் இது 2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் வணங்கிய தாய் தெய்வத்தின் உருவம் ஆக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இது போன்ற உருவங்கள் மத்திய தரைக்கடலில், கிரேக்க நாட்டுக்குத் தெற்கில் 'கிரீட்டே' என்ற நாட்டில் 3,500 ஆண்டுகளுக்கு முன் இருந்த ஈமச் சின்னங்களில் இருந்து கிடைத்துள்ளது. அங்கும் இதே உருவம் ஈமச் சின்னங்களோடு தாய் தெய்வமாக வழிபடப்பட்டது குறிப்பிடத் தக்கது. இந்த உருவத்தைப் போன்று கோதாவரி நதிக்குத் தெற்கில் ஆந்திரப் பிரதேசத்தில் சென்ற நூற்றாண்டு இரண்டு கல் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை இதுகாறும் எதைக் குறிக்கின்றன என்று தெளிவாகத் தெரியவில்லை. இப்போது கிடைத்துள்ள உருவத்தின் அமைதியினால் இது தாய் தெய்வத்தின் சிலை என்று தெளிவாகத் தெரிகிறது. மத்தியப்பிரதேசத்தில் 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல் உருவம் ஒன்று இதைப்போலவே கிடைத்துள்ளது. அதை வேதகால அத்தி என்ற பெண் தெய்வம் என்று குறித்துள்ளார்கள். அந்த உருவத்தை இப்போது இங்கிலாந்தில் லண்டனில் நடைபெறும் கண்காட்சியில் சிறப்புக் குறியீடாகக்கொண்டு இருக்கிறார்கள். பலுசிஸ்தானத்தில் ஈமச் சின்னங்களிலும் தாய் தெய்வத்தின் உருவங்கள் இது போல் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் ஈமச் சின்னங்களோடு தொடர்புடையதாக இருப்பதால் ஈமச் சின்னங்களை எடுத்தவர்கள் வழிபட்டு நம்பிக்கைகளை அறிவதற்கு இது மிகவும் பயன்படுவதாக இருக்கிறது.

இவற்றை எடுத்தவர்கள் திராவிட மொழி பேசுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். மத்திய தரைக்கடல் பகுதியில் காணப்படும் இது போன்ற உருவங்களும் பெரும் கல் சின்னங்களில காணப்படும் இந்தத் தாய் தெய்வ உருவங்களும் என்ன தொடர்பு உடையது என்பது போன்ற கேள்விகளுக்குப்புதிய ஒரு திருப்பத்தை இந்தக் கல்சிலை அளிக்கிறது என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். வரலாற்றுக்கு குறிப்பாக தென் இந்திய வரலாற்றுக்கு இது இன்றியமையாத புதிய கண்டு பிடிப்பு ஆகும். இந்தக் கல் சிலையைக் கண்டு பிடித்துள்ள தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இந்தப் பகுதியில் மேலும் சில வரலாற்றுச் சின்னங்களையும் கண்டுபிடித் திருக்கிறது. இதற்கு அருகில் 'புறாக்கள்' என்ற இடத்திலும், 'குளிர்சுனை' என்ற இடத்திலும் மேலும் பழங்கால ஓவியங்களை இத்துறை கண்டுபிடித்திருக்கிறது. சுனைகளுக்கு அருகில் பழங்கால மனிதன் கல் கருவிகளைத் தீட்டிய இடங்களையும் இந்தத் துறை இப்போது கண்டுபிடித்திருக்கிறது. மேலும் இந்தப் பகுதியில் பழைய கருவாச்சி என்ற இடத்திலும் கருமான் மலை என்ற இடத்திலும் 13ம் நூற்றாண்டுத் தமிழ்ச் செய்யுளில் உள்ள கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. கஞ்சனூர் மலை என்ற மலையிலும் கருமான் மலையிலும் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் சமணப் பெரியார்கள் வாழ்ந்த கல் படுக்கைகளையும் இந்தத் துறை இப்போது கண்டுபிடித்து இருக்கிறது. இந்த இடத்தில் மேலும் ஆராய்ச்சியைத்தொடர்ந்து இத்துறை மேற்கொண்டுள்ளது.



# உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

**1974** ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22ஆம் நாள் ரூ. 50 இலட்சம் மூலதனத்துடன் தமிழ் நாடு உப்பு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் பிப்ரவரி 22ஆம் நாள் இயங்கத் தொடங்கியது. 1981ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ 50 இலட்சத்திலிருந்து ரூ100 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு உற்பத்தி செய்வதும், உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் தயாரித்தலும் உப்பு சார்ந்த உபபொருள்கள் தயாரித்தலுமாகும்.

மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 145 இலட்சம் மூலதனத்துடன் மாரியூர்-வாலிநோக்கத்தில் ஒரு பெரிய உப்புத் தொழிற்சாலையை இந்நிறுவனம் அமைத்தது. இதன் மொத்தப் பரப்பளவு 5,617 ஏக்கராக்கள். வேறு எந்தத் தொழிலும் ஆரம்பிக்க முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இந்த இடத்தில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எண்ணத்துடன் மாரியூர் வாலி நோக்கம் உப்புக் கூட்டுத்திட்டம் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் இந்நிறுவனம் தஞ்சாஊர் மாவட்டம் பட்டுக் கோட்டைத் தாலுக்கா, மரவக்காடு, வடகாடு கிராமங்களில் 4,092ஏக்கராப் பரப்பளவில் உப்பு உற்பத்திக்காக எடுத்துக் கொண்டுள்ளது.

**மாரியூர் வாலி நோக்கம் உப்புக் கூட்டுத்திட்டம்**

இத்திட்டம் வடமேற்கு இராமநாதபுரத்திலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ளது. 1975-76 ஆம் ஆண்டு முதல் முன்னேற்றப் பணிகள் தொடங்கப்பட்டன. மேம்படுத்த வேண்டிய 4,400 ஏக்கராக்களில், இதுவரை 2,366 ஏக்கராக்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1976ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் உப்பு உற்பத்தி, விற்பனை, முதலிய விவரங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வருடம் | உற்பத்தி (டன்களில்) | விற்பனை |
|---|---|---|
| 1976 | 550 | 550 |
| 1977 | 3,400 | 799 |
| 1978 | 6,500 | 2,747 |
| 1979 | 22,660 | 2,237 |
| 1980 | 29,047 | 10,645 |
| 1981 | 2,5600 | 8,194 |

தரமான உப்பை உற்பத்தி செய்ய எடுத்த முயற்சியாலும் உற்பத்திக் காலங்களில் ஏற்பட்ட மழையினாலும் மின் சக்தி பற்றாக்குறையினாலும் 1981ஆம் வருடத்திற்கான உற்பத்தியின் அளவுகுறைவதற்கான மற்றைய காரணங்களாகும்.

1981ஆம் ஆண்டு 25.6.81ல் உயர் அழுத்த மின்சாரம் பெறப்பட்டது. நசுக்கிய பொடி செய்த உப்பு தயார் செய்வதற்காக வசதிகள் உண்டாக்கப்பட்டன. ரூ 1 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியும் செய்து தரப்பட்டது.

1982ஆம் ஆண்டு இத்திட்டம் 50,000 டன் தரமான படிக உப்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. நசுக்கிய பொடி செய்த உப்பும் தயார் செய்யப்படும். அலுவலருக்கான குடியிருப்புக்கள்; வேலைக்கூடக் கட்டடம், தொழிலாளர் கழிப்பிடக் கூடமும் இவ்வாண்டு அமைக்கப்படும்.

மொத்தம் 4,400 ஏக்கராக்களும் மேம்படுத்தப்படும் பொழுது இத்திட்டம் 2.4 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யும். உப்பு விற்பனையில் உள்ள சிரமங்களால் மேற்கொண்டு நிலத்தை மேம்படுத்தப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தூர இடங்களுக்கு உப்பை அனுப்புவதற்கு அதிக சிரமங்களை ஏற்க வேண்டியுள்ளது. அத்தியாவசியமான துறைமுக, ரயில் வசதிகளும் அருகாமையில் இல்லை. ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் இருந்தபோதிலும் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. இதனால் இந்நிறுவனம் வாலி நோக்கத்தில் ஒரு சிறிய துறைமுகம் அமைக்க அரசைக் கேட்டுள்ளது. இங்கு ஒரு சிறு துறைமுகம் அமைந்ததால் வறட்சியால் பாதிக்கப்படும் இப் பின்தங்கிய பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து இந்நிறுவனம் இலாபகரமாகச் செயல்படும்.

இந்நிறுவனம் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 1,000 நபர்களுக்குப் பருவ கால வேலை வாய்ப்பு அளிக்கிறது. இந்நிறுவனம் முடிவடையும் தறுவாயில் 200 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு 1,500 நபர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிக்கும்.

**மரவக்காடு வடகாடு உப்புத் திட்டம்**

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மரவக்காடு வடகாடு கிராமங்களில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் உப்புத் திட்டம் உருவாக்கப்படுவதற்கு நவம்பர் மாதம் 1978ஆம் வருடம் தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் திட்ட மதிப்பீடு ரூ. 120 இலட்சம் ஆகும். 4092. 4,092.33 ஏக்கராப் பளரப்பவில் மேம்பாட்டுப் பணியை 1979ஆம் ஆண்டு துவக்கியது. 1980, 1981 ஆம் ஆண்டுகளில் ஆரம்பப் பணிகள் போன்ற சுற்றுக்கரைகள் குறுக்குக் கரைகள் அமைக்கப்பட்டன. 1982ஆம் ஆண்டு மீதி சுற்றுக் கரைகளும் சாலைக்கரைகள் போடும் வேலைகளும், கால்வாய், உப்பள வேலைகளும் நடைபெற்றன. இதுவரை 262 உப்பளங்கள் வெட்டப்பட்டு உப்பு நீர்க் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. 11.5.82 முதல் உற்பத்தி மாதிரி தொடங்கப்பட்டது. இத்திட்டம் இவ்வாண்டு 5,000 டன் உப்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேம்பாட்டுப் பணிகளுடன் உற்பத்தியும் நடைபெற்று 1985 ஆம் ஆண்டில் வளர்ச்சிப் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. முழுவளர்ச்சி அடைந்தபின் இத்திட்டம் 1,200 டன் உப்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 1,000 நபர்களுக்கு பருவ கால வேலைவாய்ப்பும் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது 15 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் 600 நபர்களுக்குக் கரைகட்டும் பணியில் வேலை வாய்ப்பும் இத்திட்டம் அளிக்கிறது.



**இரசாயனப் பொருட்கள்**

மாரியூர் வாலி நோக்கத்தில் கிடைக்கும் களிக் கல்லிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் களிக்கல்தூள் ( Plaster of Paris ) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 12 இலட்சம். இத்திட்டம் சுமார் 30 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கும்.

1982-83ல் புதிய திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு ரூ. 15 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான ஆரம்பப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



# கொட்டிலில் கட்டி வெள்ளாட்டினை வளர்ப்போம்

மனிதனால் முதன் முதல் வளர்க்கப்பட்ட கால்நடை வெள்ளாடே ஆகும். நமது நாட்டில் அநேகமாக எல்லா விவசாயிகளும் குறுநில விவசாயிகளே. ஆதலால் இவர்கள் தங்கள் குடும்பவாழ்க்கைக்குத் தீவிரநிலச் சாகுபடித் திட்டத்தைதான் மேற்கொண்டு நல்லபயனை அடைய வேண்டும். இவர்கள் வெள்ளாடு வளர்ப்பவர்களே ஆயின், கால் ஹெக்டேர் நிலத்தில், புரதச்சத்து மிகுந்த குதிரை மசாலா, பர்சும் மற்றும் செழுமையான புற்களைக் கலந்து வளர்த்தால் குறைந்த அளவு இரண்டு வெள்ளாடுகளைக் கொட்டிலில் வளர்த்து தம் குடும்பத்திற்குப் பால் செலவினம் போக அதிகப்படிப் பாலை விற்கவும் செய்யலாம். இது இவர்களுக்கு அடர் தீவனம் அல்லது கலப்புத் தீவனம் வாங்க செலவுக்குச் சரி கட்டிவிடும். ஒருநல்ல வெள்ளாடு சராசரிபத்து ஆண்டுக் காலம் வரை பால் கொடுக்கக் கூடியது. பிறகு அதை அதனுடைய முழு இறைச்சியின் மதிப்பிற்கே விற்று விடலாம்.

இதற்கான வீடு அல்லது கொட்டில் மிக எளிதாக எளிமையான முறையில் செலவு அதிகமில்லாமல் அமைக்கலாம். நம் நாட்டில் மிகுந்த தட்ப வெட்ப நிலையினால் அவைகளை அதிக வெப்பம், மழை இவைகளில் இருந்து தடுத்துக் கொள்ள அவ்சியமான கொட்டிலே போதுமானதாகும். தீவன தொட்டி மிக சாதாரணமாக கள்ளிப் பெட்டியினாலோ அல்லது மூங்கில் சிம்பு தொட்டிகளாகவோ கட்டிவிடலாம்.

உயர்ந்த ரக வெள்ளாடுகளை நல்ல போஷாக்கினால் அதன் இளம் வயதிலேயே அதாவது சுமார் 10 அல்லது 12 மாதத்தில் அதன் எடை 35 கிலோ கிராமிற்கு குறைவு இல்லாமல் அடையச் செய்யலாம். இவ்வாறு நன்கு வளர்க்கப்பட்ட நிலையில் அவை குறுகிய காலத்தில் பருவத்திற்கு வந்துவிடும். அதை உடனே பயன் படுத்திக் கொண்டு விடலாம்.

வெள்ளாடுகளுக்கு குட்டிகள் ஈனும் டருவம் 150 நாட்களதான் ஆகையினால் 10 அல்லது 12 மாத வயதுடைய வெள்ளாடுகள் நல்ல போஷாக்குடன் பருவத்திற்கு வரும்போது அவைகள் 1 வருடம் 3 மாதம் அல்லது ஓராண்டு 6 மாதக் காலத்தில் குட்டிகளுக்கு இவைகள் தொடர்ந்து 10 மாதங்கள் பால்தரும். இத்தருணத்தில் 7 மாதங்கள் முடிந்ததும் பருவத்திற்கு வரும் நேரம் கவனித்து கடாவுக்கு சேர்த்து விட வேண்டும். இதனால் இந்த பத்து மாதகால பால் தரும் பருவத்திற்கு பிறகு இரண்டு மாதகாலம் பால் வறட்சி நிலையை நாம் ஏற்படுத்துவதினால் வயிற்றில் வளரும் குட்டிகள் நன்கு திடகாத்திரமாக வளர்வதுடன் குட்டிகள் பிறந்தவுடன் தொடர்ந்து 10 மாத காலம் பால்தரும் நிலைக்கு வெள்ளாடுகள் அடைகின்றன. இம்முறையினால் நம் தேவைக்கு பால் கிடைப்பதுடன், குட்டிகளும் நன்கு போஷாக்குடன் பராமரிக்கப்படுகின்றன.

வெள்ளாடுகளை வருடத்திற்கு இரண்டு போகமாகப் பயனடையலாம். ஒவ்வொரு தட்வையும் குறைந்த அளவு இரண்டு குட்டிகள் போடுவது இயல்பு.

மேலும், ஒரு வெள்ளாடு, ஒரு பசுமாடு சாப்பிடும் தீவன அளவில் ஐந்தில் ஒரு பங்கையும், ஒரு எருமை சாப்பிடும் தீவன அளவில் எட்டில் ஒரு பங்கு அளவும் தான் தன் வளர்ச்சிக்குப் புசிக்கின்றன.

வெள்ளாட்டின் பால் மற்ற பிராணிகளின் பாலுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது, அதனுடைய கொழுப்பு, புரதம் இவ்விரண்டு சத்துப்பொருள்களும் தாய்ப்பாலுக்குச் சமமாக உள்ளன.

சாதாரணமாக ஒரு எருமைக் கடா அல்லது பொலி காளை தரமான நிருபிக்கப்பட்ட பொலி காளையாக விளங்க குறைந்த அளவு எட்டு ஆண்டுகள் ஆகிவிடும். பிறகு அதன் பயன்தரும் ஆண்டுகள் மிகக் குறைவு. ஆனால் ஒரு வெள்ளாட்டு கிடா தரமாக பொலிகடாவாக நிருபிக்க மூன்று ஆண்டுகளே போதுமானது. பிறகு அதனைப் பல ஆண்டுகள் பயன்படுத்தி பலன் அடையலாம்.

நம்நாட்டில் பால்வளப் பெருக்கத்திற்கு நல்ல உயர்ரக இன வெள்ளாடுகள் உள்ளன. அவைகளாவன: ஜம்னாபாரி, பாஸ்மினா, மார்வாரி, ஆண்மனாபாடி மற்றும் டெல்லிச்சேரி (மலபாரி). இவைகள் இறைச்சிக்கும், உயர்ரக தோலுக்கும் மிகவும் பயன்படுகின்றன.

'டெல்லிச்சேரி' இன வெள்ளாட்டை 'மலபாரி' என்றும் கூறுவர். இது வடகேரளத்தில் மலபார் பிரதேசத்தில் அதிகம் காணப்படுகிறது. இவைகள் பார்வைக்குக் கவர்ச்சிகரமானவை. அடக்கமான தலை, சில சமயங்களில் ரோமானிய மூக்கு மற்றும் நீண்ட அகலமான காதுகள் உடையவை. நிறம் நிரந்தரம் அல்ல. கருப்பு கலந்த வெள்ளை நிறமும் உண்டு. முடி நன்றாக வளர்ச்சி உடையவை. முன்னுக்குப் பின்னும் பரந்த அகன்று உள்ளவை. இவைகளிலேயே கொம்பு இல்லாத இனமும் உண்டு. அது மிகவும் முக்கியமானது. இவைகள் கறவைக்கு உகந்தது. இறைச்சிக்கும் மேன்மையானவை. திருச்சியிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் குமரப்பெருமாள் வேளாண் அறிவியல் நிலையத்தில் டெல்லிச்சேரி இன வெள்ளாடு பராமரிக்கப்பட்டு வருகிறது.

வழக்கமான பருவகாலங்களில் வெள்ளாடு 18 முதல் 21 நாட்களுக்கு ஒருமுறை சினைக்கு நிற்கும். செப்டம்பர் முதல் நவம்பர் வரை உள்ள பருவ காலங்களில் சினைக்கு நிற்கும் காலம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை நீடித்து இருக்கும். இந்தப் பருவகாலம் மாற மாற சினைக்கு நிற்கும் காலமும் குறையும். பொதுவாக சினைக்கு கண்டு 15

மணி நேரம் கழித்து கடாவுக்குச் சேர்க்கப்படும்போது சினை பிடிக்க வாய்ப்புகள் அதிகம் என்று கருதப்படுகின்றன. சாதாரணமாகக் குட்டிகள் ஈனும் காலம் 145 நாட்கள் முதல் 155 நாட்கள் வரை நீடிக்கும். சராசரி நாட்கள் 150.

ஆடுகள் ஈனும் தறுவாயில் உள்ளபோது அவைகளைத் தனியாக வைப்பது மிகவும் நல்லது. இவைகளுக்கு உலர்ந்த சுத்தமான இடவசதி தேவைப்படுகின்றன. ஈனும்போது வெள்ளாடுகள் சிரமமில்லாமல் குட்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் போட்டுவிடும். ஆகையினால் ஈனும் அறிகுறிகள் கண்டபின் இரண்டு மணி அவகாசத்திற்குள் குட்டிபோட்டு விடும். அதற்கு மேல் காலதாமதம் ஆனால் உடனே அருகிலுள்ள கால்நடை மருத்துவரின் உதவி அத்தியாவசியமாகிறது. வெள்ளாடு மிகவும் தளர்ந்து விடுவதற்கு முன் மருத்துவ உதவியை நாடவேண்டும்.

**ஈனும் தறுவாயிலுள்ள வெள்ளாட்டில் காணப்படும் அறிகுறிகள்**

மடி நன்றாக வளர்ச்சியடைந்து பெருத்து பிரகாசமாகக் காணப்படும். பால் கறப்பதற்கு உண்டான அறிகுறிகள் காணப்படும். ஆடு அடிக்கடி படுத்து நிற்கும். கால்களைக்கொண்டு தரையைப பிராண்டும். பிறகு சிறிது மஞ்சள் நிற கொழுப்பான திரவம் ஈத்து வாயில் வெளிப்படும். இது குட்டி பிறப்பதற்கு ஆரம்பம்.

இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஒரு பிரசவத்திற்குச் சாதாரணம். முதல் குட்டிக்குப் பிறகு மற்ற ஒன்றோ அல்லது இரண்டோ 20 அல்லது 25 நிமிடங்களுக்கு பிறகு போட்டுவிடும். தொப்புள் கொடியைச் சுத்தமான நூல் கொண்டு கட்டி டின்சர் அயோடின் தடவ வேண்டும். இதனால் புண் ஏற்படுவதையும் நோய் வருவதையும் தடுக்கலாம்.

பிறந்தவுடன் தாயிடமிருந்து குட்டிகளைப் பிரிப்பது மிகவும் நலம். இதனால் வெள்ளாடு கறவைக்குச் சிரமமில்லாமல் வருவதுடன் நல்ல சுகாதார முறையும் கையாளப்படுகிறது. மேலும் தாயிடமிருந்து பாலைத் தனியே கறந்து பாட்டிலில் இட்டு குட்டிகளின் எடைகளுக்குத் தகுந்தவாறு ஊட்டுவதால் குட்டிகள் பால் குடித்ததா இல்லையா என்ற ஐயம் நீங்கும். மேலும் குட்டிகளின் எடைக்குத் தக்கவாறு பால் ஊட்டலாம். தாய் ஆட்டின் மடியில் ஏற்படக்கூடிய சில நோய்களைத் தவிர்க்கலாம். குட்டிகள் பிறந்த பிறகு சுமார் 8-ல் இருந்து 10 மணி அவகாசத்திற்குள் நச்சுக்கொடி விழுந்து விட வேண்டும். தவறினால் மருத்துவரின் உதவி உடனே அவசியமாகிறது.

வெள்ளாடு குட்டிகள் போட்டு பிறகு முதல் இரண்டு நாட்களுக்கு தீவனம் அவைகளுக்குச் சற்று குறைத்து பிறகு அதன் பால் வளத்திற்குத் தக்கப்படி உயர்த்த வேண்டும். தினம் இரண்டு தடவை கறப்பது நலம். பிறகும் மடி கனம் இருப்பதானால் 8 மணிக்கு ஒரு தடவை கறப்பது நலம்.

குட்டிகளுக்குப் பிறந்த முதல் நான்கு நாட்களுக்கு அதன் தாய்ப்பால் மிகவும் அவசியம். பிறகு பாலைச் சிறுகச் சிறுக குறைத்து அடர்த் தீவனத்தைப் பழக்க வேண்டும். குட்டிகளுக்கு இரண்டு மாதம்தான் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். பிறகு நிறுத்த வேண்டும்.

குட்டிகள் பிறந்த இரண்டு வாரத்திலேயே சற்று தழைகளைக் கடிக்கப் பழக்கலாம். இதனால் அவைகள் தழைகள் சாப்பிட விரைவில் பழகிவிடும். மேலும் அதற்கு அடர்த் தீவனமும் சிறுக சிறுக பழக்கலாம்.

கறவை வெள்ளாடுகளுக்கு அதிகச் செலவில் கொட்டில் தேவையல்ல. அதற்கு ஒரு ஆட்டிற்கு 2.2 ச.மீ. இடவசதி என்ற அளவில் கொட்டில்கள் போடலாம். அதற்குத் தீவனப்பெட்டி, தழைகளோ, புற்களையோ கட்டு கட்டா கட்டி அதன் உயரத்திற்கு கட்டி விட்டால் அவைகள் நின்ற இடத்திலேயே தழைகளை உட்கொள்ள மிக எளிதாகிறது. இதனால் வெளியில் மேய்ச்சலுக்கு அனுப்பப்படுவதில்லை. அப்போதைக்கப்போது தழைகள் கொண்டு வரப்பட்டு, கட்டப்படுவதனால், தழைகளும் வீணாவதில்லை.

விவசாய நண்பர்கள் சவுண்டல் அகத்தி, குதிரைமசால், ஆல் பூவரசு, முள் முருங்கை போன்ற மர இலை போன்ற தீவனப் பயிர்களைப் பயிரிட்டு அவற்றின் தழைகளைப் பரித்து தீவனமாகப் உபயோகித்து பெரிதும் பயன் பெறலாம்.

கொட்டில் அமைப்பதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள். உலர்ந்த சுத்தமான கொட்டில் அறை. அதில் கோடை காலங்களில் நல்ல காற்றோட்டம். ஆடுகளைக் கொட்டிலில் சற்று தாராளமாக நடமாடவசதியுடன் ஏற்படுத்துவது மிக அவசியம். ஒரு நல்ல கொட்டில் தற்காப்புடன் சௌகரியத்துடன், சுத்தமாக, ஆடுகளை எளிதில் கண்காணிக்க வசதியுடன் இருக்க வேண்டும். இதை நம் நாட்டு தட்பவெட்ப நிலைக்கு, அதிகச் செலவில்லாமல், எளிதில் எளிமையாக மிக வசதியுடன் செய்து விடலாம்.



குட்டிகள் நன்கு வளர இரண்டு அல்லது மூன்று மாதத்திலிருந்தே அடர்த்தீவனம் கொடுக்கலாம். தினம்ஒரு குட்டிக்கு 500 கிராம் முதல் 700 கிராம் வரை என்ற அளவில் கொடுக்கலாம். மற்றும் கறவை வெள்ளாட்டிற்கு அடர் தீவனம் தினம்ஒரு ஆட்டிற்கு 750 கிராம் முதல் 1 கிலோ கிராம் வரைபால் வளத்திற்குத் தகுந்தபடி கொடுக்கலாம். மற்றும் குதிரைமசாலா, பர்ஸீக் மற்றும் புரத சத்துக்கள் மிகுந்த தழைகளை 2 முதல் 2.5 கிலோ கிராம் வரை தினம் ஒரு ஆட்டிற்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ஒரு வெள்ளாட்டுப் பண்ணையில் நோய்க்கு வைத்தியம் செய்தால் அது லாபகரமான பண்ணையே அல்ல. சுற்றுப்புறச் சுகாதாரம் தகுந்த காலத்தில் முன்கூட்டியே தடுப்பு முறைகளை அனுசரித்தல் திட்டமிட்ட பராமரிப்பு இவைகளை நல்ல முறையில்கையாண்ட நோயற்ற பண்ணைதான் நமக்கு வேண்டிய அளவு பால், இறைச்சி தந்து இலாபகரமாகச் செயல்படும். இதனை மனத்தில் இருத்தி, முன்கூட்டியே தடுப்பு முறைகளை அனுசரித்து, சுகாதாரமான ஆரோக்கியமுள்ள பண்ணைக்கு பாடுபடுவோமேயானால், நாமும் நல்வ பயனை அடையலாம்.

சீரிய முறையில் இந்த 'டெல்லிசேரி' இன வெள்ளாடு திருச்சியிலுள்ள குமரப் பெருமாள் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.



# விவசாயக் கருவிகள்

பருத்திக்கேற்ற

## தெளிப்புக் குழல்கள்

இந்த தெளிப்புக் குழல்கள் பருத்திச் செடியின் எல்லா நிலைகளிலும், செடியின் இலைப்பரப்பை ஒரே சமயத்தில் முழுவதுமாக தெளிக்கப் பயன்படுகிறது. இதில் மூன்று நாசில் தெளிப்புக்குழல், ஐந்து நாசில் தெளிப்புக்குழல் என இரண்டு வகைக்குழல்கள் உள்ளன.

இதில் மூன்று நாசில் தெளிப்புக் குழலை தோளில் தூக்கும் கைத்தெளிப்பான்களிலும், ஐந்து நாசில் தெளிப்புக்குழலை ராக்கர் கைத் தெளிப்பானிலும் இணைக்கவேண்டும். ஒரு மணி நேரத்தில் அரை ஏக்கர் தெளிக்கலாம்.

மூன்று நாசில் கொண்ட தெளிப்புக் குழலின் விலை ரூ. 90—00.

ஐந்து நாசில் கொண்ட தெளிப்புக் குழலின் விலை ரூ. 120—00.

*ஆய்வாளர் : தங்கவேலு*

## சோளத்திற்கு மருந்து தூவும் கருவி

தற்சமயம் உபயோகத்திலுள்ள மருந்து தூவும் கருவிகளால் 1.5 மீட்டர் உயரம் தான் தூவ முடிகின்றது. சோளம் போன்ற உயர்ந்த பயிர்களுக்கு மருந்து தூவுவதற்கு ஏற்ற ஒரு தூவானை தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்துகிறது.

*ஆய்வாளர் : ஏ. சண்முகம்*

## டிராக்டர் மூலம் இயங்கும் அகலப்பாத்தியில் விதைக்கும் கருவி

டிராக்டர் மூலம் இயங்கும் இக்கருவி அகலப்பாத்தி அமைக்கவும் பாத்திகளில் விதைக்கவும் பயன்படுகிறது. இது 5¼ அடி அகலமுள்ள பாத்திகளை அமைக்கிறது. பாத்திகளின் இருமருங்கிலும் ஒரு அடி அகலமுள்ள வாய்க்கால்களும் சேர்ந்து அமைக்கப்படுகின்றன. இக்கருவியை 35 குதிரைத் திறன் கொண்ட எந்த டிராக்டருடனும் இணைக்கலாம். இதன் மேல்பகுதியில் 7 விதைப்பெட்டிகளும் விதைகளைச்சரியான அளவில் எடுத்து விதைக்கும் சாதனமும் அமைந்துள்ளன. ஒரு நாளில் இக்கருவியைப்பயன்படுத்தி சுமார் 8 முதல் 10 ஏக்கரில் விதைப்பு வேலையைச் செய்து முடிக்கலாம். இதன் மூலம் விதைப்புச் செலவும், விதைக்க ஆகும் நேரமும் கணிசமாகக் குறைக்கலாம்.

நிலக்கடலை, சோளம், கொண்டைக் கடலை, உளுந்து, துவரை போன்ற பயிர் விதைகளை விதைக்கலாம். சதுர மீட்டருக்கு 44 செடிகள் வளரும். விலை ரூ. 2,000/-

*ஆய்வாளர் : ஆர். கருணாநிதி*

## வேர்க் கடலை பறிக்கும் இயந்திரம்

ஒரு குதிரைச் சக்தியுள்ள ஒருமுக மின் சார மோட்டாரால் இயங்கக் கூடியது. இது ஒருநிமிடத்திற்கு 250 சுற்றுக்கள் சுற்றுகிறது.

இந்த இயந்திரம் மணிக்கு 150 கிலோ காய்கள் பறிக்கும். ஒரு கிலோ காய் பறிப்பதற்கு 4 காசு செலவு ஆகும். இதன் விலை ரூ. 2500/-

*ஆய்வாளர் : தங்கவேலு.*

*குறிப்பு : விவசாயக் கருவிகள் பற்றிய தகவல்கள் வேண்டுவோர் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.*



# இதன் பெயர் 'பலராம்'

குஜராத் மாநிலம் பவநகரில் உள்ள மத்திய அரசு நிறுவனமான "ஆல்காக் ஆஷ்டவுன் அண்ட் கம்பெனி" பைபர் கிளாஸ் மோட்டார் விசைப்படகு ஒன்றை சென்னைத் துறைமுக டிரஸ்டுக்காகத் தயாரித்து, பொது நிர்வாகி டபிள்யு. ஓ. ராகவன் அவர்கள் **5-8-82** காலை 9 மணி அளவில் வழங்கினார். சென்னைத் துறைமுகத் தலைவர் திரு. செல்வராஜ் இதனைப் பெற்றுக் கொண்டார்.

கிருமத் —

இந்தப் படகு ஒருவகை பிளாஸ்டிக் கலவையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பைபர் கிளாஸ் படகு சென்னைத் துறைமுகத்தில் தான் பயன்படுத்தப்படுகின்றது.

சென்னை துறைமுகத்தின் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்தவர் கேப்டன் பலராம். இரயில் விபத்தில் மரணம் அடைந்த அவருடைய நினைவாகப் புதிய படகுக்கு 'பலராம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த 'பைபர் கிளாஸ்' பைலட் கப்பல் **22** இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. மணிக்கு **17.25** கடல் மைல்கள் வேகத்தில் செல்லக் கூடியது இது.

# மங்கையர் கொண்டாடும் மயில் வழிபாடு!



திரு கலைவாணன் காப்பாளர் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஆர்க்காடு

இன்றைய நாகரிகத்தின் தாக்குதலினால் நம்முடைய பண்டைய பண்பாடுகளும் சிறப்புகளும் அதிகமாக அழிந்து விடாமல், இன்றைய தினம் தமிழகத்தில் எஞ்சி உள்ள பகுதிகளில் தருமபுரி மாவட்டமும் ஒன்றாகும். அம்மாவட்ட மகளிர்களால் கொண்டாடப் பட்டு சிறுகச் சிறுக செல்வாக்கிழந்து வரும் ஓர் அரிய பண்டிகையே மயில் பண்டிகை யாகும்.

இப்பண்டிகை உழவர் திருநாளை உவகையுடன் தைமாதம் கொண்டாடி முடித்த உடன் நடக்கும் ஓர் பண்டிகை ஆகும். தை மாதம் ஆறாம் தேதி இரவே இப்பண்டிகை ஆரம்பித்து விடும். அன்று இரவே பெண்கள் அனைவரும் விரதம் இருக்கத் தொடங்கி விடுவர். தை ஏழாம் தேதி காலை மகளிர் தங்கள் வீடுகளைச் சுத்தப்படுத்தி குளித்து முடித்து மயில் பண்டிகையினைத் துவக்கி விடுவர். இத்துவக்கத்தில் ஊரில் உள்ள அனைத்துப் பெண்களும் ஓர் இடத்தில் கூடி மயிலை வணங்கத் துவங்குவர். அவர்கள் எப்படி எப்படி விரதம் மேற்கொள்ள வேண்டும் என்பதை ஓர் அழகான பாடலாகப்பாடி வணங்குவர். அந்நாட்டுப்புறப்பாடல் வருமாறு:

'மொச்சு மொச்சு என மோர் குடிக்கக்கூடாது
பச்சுப் பச்சு என பைத்தங்காய் தின்னக்கூடாது
ஆலை ஏறி கரும்பு தின்னக் கூடாது.
செக்கு ஏறி புண்ணாக்கு தின்னக் கூடாது
பாக்கு நசுக்கக் கூடாது
பள்ளாங்குழி ஆடக் கூடாது
சுக்கு நசுக்கக் கூடாது
சோம பாணம் கூட்டக் கூடாது
கீழ்த்தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
மேல் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
அன்று கட்டி அன்று அவிழ்த்து
ஆயிரம் நோன்புக்கும் தலையான நோன்பு
கும்பிடுங்கோ தோழிகளே! கும்பிடுங்கள்'.

இப்படி அவர்களுக்கு கடுமையான விரதங்கள் விதிக்கப்படுகின்றன. பின் ஒவ்வோர் வீட்டிலும் மணக்கும் சமையல் துவங்கும், ஒவ்வொரு வீட்டிலும் இருபத்தோ வகையான காய்கள் சமையல் செய்யப்படும். அன்று ஒரு நாள் மட்டும் பெண்கள் யார் தோட்டத்தில் காய்கள் இருந்தாலும் யாரையும் கேட்காமல் பறித்துக் கொள்ளலாம் என்பது இன்றளவும் வழக்கில் உள்ள ஓர் நிகழ்ச்சி ஆகும்.

சமையல் வேலை முடிந்த உடன் அனைத்துப் பெண்களும் ஒர் இடத்தில் கூடி ஓர் வெள்ளைச் சுவரில் மயில்களை வண்ணத்தில் வரைவர். சில ஊர்களில் வரைந்து வைக்கப்பட்டுள்ள வண்ணத் திரைச் சீலைகளைத் தொங்க விடவும் செய்கின்றனர். இந்நிகழ்ச்சி முடிந்த உடன் கட்டு உடைப்பு அல்லது பண்டிகையின் இறுதி நிகழ்ச்சிகள் துவங்கும். ஒவ்வொரு வீட்டிலும் சமைக்கப் பட்ட விதவிதமான காய்கறிகளுடன் சித்திரம் எழுதப்பட்ட இடத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் எனத் தனியோரப் படையல்கள் போடப் படும். படையல் போடுதல் முடிந்தஉடன் கட்டு உடைப்புப் பாடல் பாடப்படும். அப்பாடல் வருமாறு :

''ஆளோடு மயில் எழுதி
அம்மானை தான் எழுதி
தேரோடு மயில் எழுதிப்
பெரும் பானை தான் எழுதி
மொச்சி, மொச்சி என மோர் குடிக்கலாம்.
பச்சி, பச்சி என பைத்தங்காய் தின்னலாம்.
ஆலை ஏறி கரும்பு தின்னலாம்.
செக்கு ஏறி புண்ணாக்குத் தின்னலாம்
பாக்கு நசுக்கலாம்,
பள்ளாங்குழி ஆடலாம்
சுக்கு நசுக்கலாம்
சோமபாணம் கூட்டலாம்
கீழ் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
மேல் தெருவில் ஏழு கன்னிப் பெண்கள்
ஆயிரம் நோன்பிலும் தலையான நோன்பு
கும்பிடுங்கோ தோழிகளே கும்பிடுங்கள்''.

எனப் பாடிப் பாடி கட்டு உடைக்கப்படும். அதன் பின் ஒவ்வொரு வீட்டின் படையலில் இருந்தும் சிறிது சோறு எடுத்து ஒரு படையல் உருண்டை ஆக்கி மயிலுக்குப் படையல் ஒரு வீட்டின் கூரையில் வைக்கப்படுகிறது. இப் படையலை உண்பதற்காக மயில் ஏழுநாட்கள் உண்ணா நோன்பு இருக்குமாம். மயிலுக்குப் படையல் வைத்த பின் மகளிர் ஏழைகளுக்கு அன்னமிட்டபின் தாங்களும் தங்கள் குடும்பத் தாரும் உண்டு மகிழ்வர். இப்பண்டிகையை முழுக்க முழுக்கப் பெண்களே செய்வர்.

ஒரு பெண் கட்டு போடப்படும் இடைக் காலத்தில் ஏதாவது மேற் சொன்ன பொருளில் ஒன்றைச் சாப்பிட்டாலும் மயில் பண்டிகையில் கலந்து கொள்வதில் இருந்து நீக்கப் படுவாள். ஒரு பெண்ணோ அல்லது அவள் குடும்பத்தைச் சேர்ந்த யாரோ மயிலுக்குத் துன்பம் விளைவித்ததாகவோ அல்லது மயில் மாமிசம் உண்டதாகவோ தெரிய வந்தால் அவளும் அக்குடும்பமும் அக்குடும்பத்தின் வழி வருபவர்களும் மயில் பண்டிகையில் இருந்து விலக்கப்படுவார்கள்.

ஒருவேளை மயில் பண்டிகை செய்யாத குடும்பத்தில் இருந்து மயில் பண்டிகை செய்யும் குடும்பத்திற்கு ஒரு பெண் மனைவியாக வருவாளானால் அவள் நாக்கிலும் கைகளிலும் கற்பூர தீபம் ஏற்றப்பட்டு அவளைப் புனிதப்படுத்தி மயில் பண்டிகையில் சேர்த்துக் கொள்வர். அதேபோல் மயில் பண்டிகை செய்யும் ஓர் குடும்பத்தில் பிறந்த பெண் மயில் பண்டிகை இல்லாத குடும்பத்தில் மண முடிக்கப்படுவாளானால் அவள் மயில் பண்டிகை செய்யும் தகுதியையே இழந்து விடுவாள். இவ்வாறு மயில் பண்டிகையைச் செய்வதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்துப் பெண்டிர் இன்றும், கொல்லாமை, நோன்பு, முதலிய வற்றை எவ்வாறு கடுமையாகக் கடைப்பிடித்து வருகின்றனர் என்பதற்கு இது ஓர் சான்றாகும். அதே நேரத்தில் சிறுகச் சிறுக இப் பண்டிகை முக்கியத்துவத்தை நாளுக்கு நாள் இழந்து வருகின்றது என்பது வருந்தத் தக்க ஒன்றாகும்.




● 1794ல் தான் முதன் முதலாக திருக்குறள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

● 1796-ல் பார்கர் என்பவர் 'சிமெண்ட்டைக்' கண்டுபிடித்தார்.

● ஆங்கிலத்தில் அதிக அளவு உபயோகிக்கப்படும் எழுத்து 'E' என்பதாகும். குறைவாக உபயோகப்படுத்தும் எழுத்து 'Z'

● பெண்களைவிட ஆண்களுக்கே காசநோய் அதிக அளவில் வருகிறது. அதுவும் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கே அதிகம் ஏற்படுகிறது. காசநோயைக் கண்டுபிடித்தவர் ராபர்ட் கோச் (Robert Coach) என்பவராவார். 1882-ம் ஆண்டு பிறந்த இவருக்கு இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

● ஆசிய விளையாட்டுப் போட்டிகள் முதன்முறையாக 1951-ல், மார்ச் மாதத்தில், டில்லியில் நடந்தது. இதில் சுமார் 11 ஆசிய நாடுகள் கலந்து கொண்டனவாம். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைப் போலவே, ஆசிய விளையாட்டுக்களும் நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடக்கின்றன.

## மாணவர் பக்கம் :

1951-ல் இருந்து 1982 வரை ஆசிய விளையாட்டுக்கள் நடந்த இடங்கள் வருமாறு :

1951—டெல்லி (இந்தியா)

1954—மணிலா (பிலிப்பைன்ஸ்)

1958—டோக்கியோ (ஜப்பான்)

1962—ஜாகர்த்தா (இந்தோனேசியா)

1966—பாங்காக் (தாய்லாந்து)

1970—பாங்காக்

1974—டெஹரான் (ஈரான்)

1978—(மீண்டும்) பாங்காக்

1982—தற்போது மீண்டும் டெல்லியில்

● பட்டுக் கூடுகளில் இருவகை உள்ளன. மஞ்சள் நிறக்கூடு உள்நாட்டு இனம் என்றும் ( Local Cocoon ), வெள்ளை நிறக்கூடு ( Foreign Cocoon ) வெளிநாட்டு இனம் என்றும் அழைக்கப்படுகிறது. உள்நாட்டு இனத்திலுள்ள பெண் பட்டுப் பூச்சியுடன் வெளிநாட்டு இன ஆண் பட்டுப் பூச்சியை இனச் சேர்க்கைக்கு விடப்படுகிறது. இனச் சேர்க்கைக்கு விடப்பட்ட பெண் பூச்சி நான்கு மணி நேரத்தில் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு முட்டையிட வைக்கப்படுகிறது. பட்டுப்பூச்சி ஒரே சமயத்தில் 300 முதல் 400 வரை முட்டைகள் இடும். ஒரு முட்டை என்பது ஒரு கடுகளவே இருக்கும். 300-400 முட்டைகள் சேர்ந்தே ஒரு முட்டை என்ற கணக்கில் விற்கப்படுகிறது. பட்டுப் பூச்சியின் முட்டை ஒன்றின் விலை நாற்பது காசுகள்!

● சவுதி அரேபியாவின் மொத்த நிலப் பரப்பு 87,300 சதுர மைல்களாகும். இந்நாட்டின் மொத்த மக்கள்தொகை ஒரே ஒரு கோடிதான்!

தகவல் : **கோவை வசந்தகுமார்**



## பெற்றோரை மதித்திடு!

—பெ. சங்கரன்

பெற்றோரை மதியாமல்
பண்பற்று வாழ்ந்தாலே
பேரெல்லாம் கெட்டுவிடுமே—தம்பி
பழிஉன்னைச் சுட்டுவிடுமே!

நல்லோரை நாடாமல்
நன்றிதனை மறந்தாலே
நல்வழியும் மறையலாகுமே—தம்பி
நலிவுற்று வாழலாகுமே!

கல்விதனைக் கல்லாமல்
கண்மூடி வாழ்ந்தாலே
கல்லாக வாழநேருமே—தம்பி
காலமெல்லாம் கலங்கநேருமே!

மதியாதார் வாசல்தனை
மிதிக்க நீசென்றாலே
மரியாதை மாறிவிடுமே—தம்பி
மதிப்பெல்லாம் மங்கிவிடுமே!

வார்த்தைகள் வாயினில்
வரம்பின்றி வந்தாலே
வாழ்த்துக்கள் விலகலாகுமே—தம்பி
வருத்தத்தால் வாடலாகுமே!

# கோழி முட்டைக்கு ஊசி

கோழிக் குஞ்சுகளுக்கு ஒரு வகை கட்டிநோய் வருவதுண்டு. அதனை 'மாரெக்ஸ்' என்பார்கள். இந்நோய் வராமல் பாதுகாக்க ஒரு புதுமுறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

முட்டை கருநிலையில் இருக்கையிலேயே முட்டையோட்டில் ஒரு சிறு துளையிட்டு, அதன் வழியாக ஊசி (வாக்ஸின்) மருந்து செலுத்தி விடுகின்றனர்.

அமெரிக்க அரசில் வேலை பார்க்கும் கால்நடை மருத்துவ அதிகாரி ஜகதேவ் எம். சர்மா இப்புதிய முறையை விளக்கிக் கூறினார்:

"நாங்கள் கையாண்ட புதிய முறையினால் கிட்டிய பலன்கள் எங்களை வியப்பில் ஆழ்த்தின" என்கிறார் அவர். முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்டதுமே இந்த நோயை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அதற்கு ஏற்பட்டு விடுகிறது. இப்பொழுது கோழி வளர்ப்புத் தொழிலிலே இருந்து வரும் முறையை விட இப்புதிய முறை செம்மையாக இருக்கிறது. பழைய முறையில் குஞ்சு வெளி வந்தவுடன் அதன் கழுத்தில் மருந்தினை ஊசி மூலம் செலுத்தினர். இந்த முறையில் தோல்வி ஏற்பட்டதுண்டு. நோய் எதிர்ப்பு ஆற்றலைக் குஞ்சுகள் பெறவில்லை என்பது பின்பு தெரிய வந்தது.

புதிய முறைப்படி முட்டையில் கரு முதிர்ச்சியடைந்திருக்கும் நிலையில் 18ஆம் நாள் முட்டையோட்டில் துளையிட்டு ஊசி போடுகின்றனர். பாரஃபின்மெழுகினால் துளையை அடைத்து விடுகின்றனர். அடைக்காவிடினும் கேடு ஏதுமில்லை.

புதிய முறை வேறு நோய்கள் தடுப்புக்கும் பயன்படுமா என்றும் ஆராய்ந்து வருகின்றனர்.




FIG. 1
Pre-hatch Inoculation



FIG. 2
Post-hatch Inoculat...

# பால்

தோல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களுக்கும் பால் ஒரு நிவாரணியாகும். ஆயுர்வேத முறைப்படி பாலை அருந்தினால், தீராத நோய்களையும் தீர்க்கும் வல்லமை பொருந்தியது. பால் ஒரு சிறந்த ஔஷதமாகும் என்று உத்தரப் பிரதேச ஆயுர்வேதக் கல்லூரியில் இயற்கை மருத்துவப் பிரிவுத் தலைவர் பேராசிரியர் சீனுவாச சாஸ்திரி கருத்து தெரிவித்துள்ளார்.

தீராத நோய்களினால் பீடிக்கப்பட்டிருந்த அநேக நோயாளிகளை ஆயுர்வேத முறைப்படி பாலைப் பருகச் செய்து குணப்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நோய்களைக் குணப்படுத்தும் சத்துக்கள் பாலில் ஒவ்வொரு விதமாக அடங்கியுள்ளன. மாடுகளின் இனம், நிறம் இவைகளைக் கொண்டு பாலில் அடங்கியுள்ள மருத்துவச் சத்துக்களைக் கண்டுபிடிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கருப்பு நிறமுள்ள பசு மாட்டின் பால் இரைப்பை மற்றும் வாயு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தக் கூடியது. மஞ்சள் நிறமுள்ள பசு மாட்டின் பால் உடலில் பித்த நீரை ஒரு கட்டுப்பாட்டில் கொண்டு வரும் சக்தி கொண்டதாகும் என்றும், வெள்ளை மற்றும் புள்ளிகள் கொண்ட பசு மாட்டின் பால் இரத்தத்தில் உள்ள ஜீவ அணுக்களை அதிகரிக்கும் சக்தி கொண்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆட்டுப்பால் ஓர் அரிய மருந்து

இரத்த நாளம் வெடித்து வாயிலும் மற்றும் மலத் துவாரம் வழியாகவும் இரத்தம் கசிவதைத் தடுத்து நிறுத்த ஆட்டுப்பால் ஓர் அரிய மருந்தாகும் என்றும், ஆயுர்வேத முறையில் ஆட்டுப்பாலை பலருக்குக் கொடுத்து, பல தீராத நோய்களைப் போக்கியிருப்பதாகவும், தவிர பாலைப் பருகியவுடன் தொடர்ந்து பல மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளையும் சாப்பிட வேண்டும் என்றும் அந்தப் பேராசிரியர் கூறினார்.

## எழுதுங்கள்!

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிக்கதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன்/மாணவி பற்றிய குறிப்பும், புகைப்படத்துடன்-ஆசிரியரின் சான்றுடன் அனுப்பி வைக்கலாம். மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

# தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி

## சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்
## திரு. க. பாலசுப்ரமணியம், எம்.எல்.ஏ. அவர்களுடன் பேட்டி

(முன் இதழ் தொடர்ச்சி)

ஒகேனக்கல்லில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 74 படுக்கைகள் உள்ளன. மேலும் 42 படுக்கைகள் கொண்ட இளைஞர் விடுதி ஒன்று ரூ.5.42 இலட்சம் செலவில் கட்டப்பட்டுதிறக்கப்படவிருக்கிறது. காவேரி ஆற்றைக் கடந்து அருவிகளைக் கண்டு களிக்க பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் செயல்படத் தொடங்கி இருக்கிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.7.50 இலட்சம் ஆகும். இன்னும் 6 மாதங்களில் இந்தத் திட்டத்தை முடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**'மோட்டல்கள்'' எங்கெங்கு உள்ளன? வேறு எங்கெங்கு அமைக்கப்பட இருக்கின்றன?**

''மோட்டல்கள்'' (Motels) என அழைக்கப்படும் பெருவழி ஓய்வு விடுதிகள் ஏற்கெனவே இராணிப்பேட்டையிலும், உளுந்தூர்ப்பேட்டையிலும் அமைக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியில் மற்றும் ஒரு பெருவழி ஓய்வு விடுதி ரூ 11 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்று திறக்கப்பட இருக்கிறது. இவை தவிர செங்கல்பட்டுமாவட்டத்தில்திருத்தணியிலும்

பேட்டி :
ஜி. ஆனந்தன்

### தமிழ்நாடு ஓட்டல்கள்

சிதம்பரம்



கேப் ஓட்டல்



மாமல்லபுரம்



கன்னியாகுமரி



திருச்செந்தூர்



தஞ்சாவூர்







மதுரை மாவட்டத்தில் தேனியிலும் இத்தகைய பெருவழி ஓய்வு விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

**சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும் பயணத் திட்டங்கள் என்னென்ன என்பதை விளக்கமாகக் கூற முடியுமா?**

இக்கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள், சுற்றுலாப் பயணிகளின் கருத்துகளை அறிந்து அதற்கேற்ப விரிவாக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டுமின்றி அண்டை மாநிலங்களில் உள்ள சுற்றுலா சிறப்புப் பெற்ற இடங்களையும் கண்டு களிக்கும் வண்ணம் இந்தச் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் வருமாறு: 1. தமிழ்நாடு சுற்றுலா 2. தென்னிந்திய சுற்றுலா 3. காஞ்சிபுரம்-திருக்கழுக்குன்றம்-மாமல்லபுரம் சுற்றுலா. 4. சென்னை நகரச் சுற்றுலா 5. திருப்பதி சுற்றுலா.

**1) தமிழ்நாடு சுற்றுலா (7 நாட்கள்)**

இந்தச் சுற்றுலாவில் பயணிகள் திருச்சி, கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி, சுசீந்திரம், திருச்செந்தூர், இராமேஸ்வரம், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6.30 மணிக்குப் புறப்படும் சுற்றுலாப் பேருந்து அடுத்த வெள்ளிக்கிழமை மாலை சென்னைக்குத் திரும்புகின்றது.

**கட்டண விவரம்:**

ரூபாய் 680 — (இருவர் தங்கும் அறை)

ரூபாய் 750 — (ஒருவர் தங்கும் அறை)

5 வயது முதல் 12 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் ரூ.580 ஆகும். 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.

**2) தென்னிந்திய சுற்றுலா (7 நாட்கள்)**

இந்தச் சுற்றுலாவில் பயணிகள் பெங்களூர், மைசூர், சோம்நாத்பூர், சிரங்கப்பட்டினம், பிருந்தாவனம், முதுமலை, உதகை, கோவை, கொச்சி, ஒகேனக்கல், திருவண்ணாமலை, ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு அடுத்த வெள்ளிக்கிழமை மாலை சென்னைக்குத் திரும்புகின்றது.

**கட்டண விவரம்**

ரூபாய் 680 — (இருவர் தங்கும் அறை)

ரூபாய் 750 — (ஒருவர் தங்கும் அறை)

5 வயது முதல் 12 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் ரூ 580 ஆகும். 5வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.

மேற்கூறிய இரண்டு 7 நாள் சுற்றுலாப் பயணத்திற்கான கட்டணத்தில் தங்கும் வசதிக்கான கட்டணமும், பார்க்கும் இடங்களில் நுழைவுக் கட்டணமும் உள்ளடங்கும்.

**3) காஞ்சிபுரம் – திருக்கழுக்குன்றம் – மாமல்லபுரம் சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

காலை 6.45 மணிக்குப் புறப்பட்டு மாலை 5.30 மணிக்குத் திரும்புகின்றது. இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும் பயணிகள் காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**கட்டண விவரம்**

நபர் ஒன்றுக்கு 40 ரூபாய்.

மாமல்லபுரத்தில் இளைஞர் விடுதி



குளிர்சாதனப் பேருந்தில் 55 ரூபாய்.

**4) சென்னை நகர சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

மாலை 2.00 மணிக்குப் புறப்பட்டு மாலை 6.00 மணிக்குத் திரும்புகின்றது. சென்னை நகரின் முக்கியமான சுற்றுலா மையங்களுக்குப் பயணிகள் இந்தச் சுற்றுலாவின் மூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**கட்டண விவரம்**

நபர் ஒன்றுக்கு 25 ரூபாய்

**5) திருப்பதி சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு இரவு 9.00 மணிக்குத் திரும்புகின்றது. இந்தப் பயணத்தில் பங்கு கொள்ளும் பயணிகள் சொகுசுப் பேருந்து அல்லது குளிர் சாதன வசதி கொண்ட பேருந்தின் மூலம் திருப்பதி திருமலை, திருச்சானூர் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



கொடைக்கானல் ஏரி



ஏர்க்காடு படகு குழாம்

**கட்டண விவரம்**

நபர் ஒன்றுக்கு குளிர் சாதனப் பேருந்தில் 130 ரூபாய் (இந்தக் கட்டணத்தில் திருப்பதி கோவில் சிறப்பு தரிசனத்திற்காகக் கட்டணம் ரூபாய் 25ம் அடங்கும்). குளிர்சாதனம் பொருத்தப்படாத சுற்றுலாப் பேருந்து மூலம் சென்று வர பயணக் கட்டணம் ரூபாய் 105 ஆகும்.

மாமல்லபுரம், திருப்பதி சுற்றுலாக்கள் சொகுசுப் பேருந்துகளிலும், குளிர்சாதனப் பேருந்துகளிலும் நடத்தப்படுகின்றன.

**தனியார் சுற்றுலாவுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?**

ஒரு சுற்றுலாவின் சிறப்பு அது தனியார் நடத்துவதா அல்லது அரசு நடத்துவதா என்பதைப் பொறுத்ததல்ல-சுற்றுலா நடத்துவதற்கான தகுதியையும் மற்றஅடிப்படை வசதிகள் அளிக்கும் திறனையும் பொறுத்தது. அரசின் நிறுவனம் நடத்தும் சுற்றுலாவில் தகுந்த பாதுகாப்பு அளிப்பது மட்டுமின்றி, சொந்த விடுதிகளில் பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ப சுவையான உணவு வசதியும் அளிக்கிறது. பல வசதிகளுடன் சிக்கனமாகப் பல இடங்களைக் கண்டு களிக்க ஏற்பாடு செய்கிறது. நமது கழகம் நடத்தும் சுற்றுலாக்கள் வியாபார நோக்கத்தில் நடத்தப்படுபவை அல்ல. மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் நடத்தப்படுபவை.

**மொத்தத்தில் புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அதன் திட்டங்களோடு தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. சென்னையில் மத்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொடர்புடன் மூன்று நட்சத்திர விடுதி ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகரத்தில் சுற்றுலா முகாம் என்ற புதுமையான திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.12.50 இலட்சம் செலவில் உருவாக்கப் பெற இருக்கும் இந்த முகாமில் சென்னை நகருக்குப் பேருந்துகள் மூலம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் பேருந்துகள் நிறுத்தி வைப்பதற்கும் பேருந்துகளின் பயணிகளை அனுப்பி வைப்பதற்கும், வசதியாக அமைக்கப்படும். மாமல்லபுரம் சுற்றுலா முகாம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5. இலட்சம் செலவில் மேலும் 6 குடில்கள் கட்டப்படவிருக்கின்றன. மாமல்லபுரம் கடற்கரை வளாகத்தில் ரூ48.50 இலட்சம் செலவில் 28 குடில்கள், நீச்சல்குளம் மற்றும் உணவு விடுதி அமைக்கப்பெற்று முடியும் தறுவாயில் உள்ளன.

பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட பிச்சாவரம் மேம்பாட்டிற்காகஇதுவரை

ரூ 12.50 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி, குடில்கள், உணவுவிடுதி, படகு குழாம் ஆகியவை முடியும் தறுவாயில் உள்ளன. மேலும் 4 குடில்கள் கட்டவும் உல்லாசப் படகுகள் வாங்கவும் ரூ 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில் ரூ.15 இலட்சம் செலவில் இளைஞர் விடுதி ஒன்றினை இவ்வாண்டு கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இராமேசுவரத்தில் ரூ 8 இலட்சம் செலவில் புதிய உணவு விடுதி ஒன்றும் ரூ.12 இலட்சம் செலவில் 12 குடில்களும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இளைஞர் விடுதி ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. மண்டபத்தில் ரூ 3 இலட்சம் செலவில் உணவு விடுதி ஒன்று கட்டும் பணிகளும் துவங்கப்பட உள்ளன.

கன்னியாகுமரியில் கலை அரங்கு ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர் விடுதி ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உதகையில் குழந்தைகளின் பொழுது போக்கு வசதிகளை உருவாக்க ரூ20.50 இலட்சம் செலவில் ஒரு பெருந் திட்டம் அமலாக்கப்பட்டு வருகிறது. இதில் குழந்தைகளுக்கான குட்டி ரயில், குழந்தைகள் பூங்கா, மற்றும் படகு குழாம் ஆகியவை அடங்கும்.

இதைத்தவிர உதகை ஏரி உல்லாசப் படகுகளுக்கு அதிகப் படகுகள் வாங்க ரூ 1.92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதுமலையில் உணவு விடுதியும், இளைஞர் விடுதியும், ரூ.7 இலட்சம் செலவில் நிறுவ வேலைகள் துவக்கப் பெற்றுள்ளன.

கொடைக்கானலில் ரூ.11.95 இலட்சம் செலவில் உணவு விடுதியும், இளைஞர் விடுதியும் கட்டப்பட்டு முடியும் தறுவாயில்உள்ளன.

காஞ்சிபுரத்தில் ரூ.44.50 இலட்சம் செலவில் 20 அறைகள் கொண்ட நவீன பயணிகள் விடுதி ஒன்றினைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் சுற்றுலா விடுதி ஒன்றினைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

உதகை தொட்டபெட்டாவில் ரூ.2 இலட்சம் செலவில் தொலைநோக்கி இல்லம் ஒன்றினை அமைப்பதற்கான வேலைகள் துவங்கப் பெற்றுள்ளன.

உதகமண்டலம் படகு குழாம்



மேலும் தஞ்சை மாவட்டம் பூம்புகார் கலைக்கூடத்தின் மேம்பாட்டிற்காக குடிதண்ணீர் வசதி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சாலைகள் அமைத்தல் ஆகியவை ரூ.7.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மதுரையில் செயல்படுவது போல், ஒலி-ஒளிக் காட்சித் திட்டங்கள் எங்கெல்லாம் அமைக்க முடிவு செய்திருக்கிறீர்கள்? அது பற்றி விவரங்கள் கூறமுடியுமா?**

மாமல்லபுரத்தில் ஒலி-ஒளிக் காட்சி ஒன்றினை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.47 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தத் திட்டமானது மாமல்லபுரத்தில் புராதன சின்னங்களைப் பயன்படுத்தி இந்த



கன்னியாகுமரியில் விவேகானந்த பாறை



நிகழ்ச்சியை நடத்தயிருப்பதால், மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஒப்புதலை விரைவில் எதிர்பார்க்கின்றோம்.

**அரசு ஊழியர்கள் அல்லது சாதாரண மக்கள் குறைந்த வாடகையில் தங்குவதற்கு ஏற்ப வசதிகள் உள்ளனவா?**

இளைஞர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள உள்நாட்டு-வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு இக்கழகம் இளைஞர் விடுதிகளையும் சுற்றுலா முகாம்களையும் நிறுவியுள்ளது. இங்கு தங்குபவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் அளிக்கப்பட்டு மிகக் குறைந்த வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த வாடகை நாள் ஒன்றுக்கு ரூ.5 அல்லது ரூ.7.50 மட்டும்தான்.

**சாதாரண மக்கள், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா பயணத்திட்டத்தில் பங்கு கொள்ள முடியுமா?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்கள் சாதாரண மக்கள் பங்கேற்கும் வகையில்தான் அமைக்கப்பட்டுள்ளன. இக்கழகம் வசூலிக்கும் கட்டணத்தில் போக்குவரத்துக் கட்டணம், தங்கும் இடங்களுக்கு வாடகை மற்றும் சுற்றுலா இடங்களைக் காண்பதற்கான நுழைவுக் கட்டணம் வழிகாட்டிக்கான ஊதியம் ஆகிய அனைத்தும் அடங்கும்.

**உதகை, கொடைக்கானல், ஏர்க்காடு, கொல்லி மலை, முதுமலை ஆகிய மலைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சிறு பேருந்துகள் விடும் திட்டம் உண்டா?**

இத்தகைய திட்டம் தற்போது இல்லை. நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் தற்பொழுது உதகை, கொடைக்கானல், ஏர்க்காடு, கொல்லிமலை, முதுமலை ஆகிய மலைப் பகுதிகளில் சுற்றுலாப் பருவ காலங்களில் தேவைக்கு ஏற்ப அதிகப் பேருந்துகள் பயன்படுத்துவதால் அத்தகைய தேவை குறித்து இன்னும் ஆலோசிக்கப்படவில்லை.

**சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளைத் தொகுத்து வண்ணத்தில் செய்தி விளம்பரப்படங்கள் எடுத்து தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டை உலகம் எல்லாம் பரப்பும் வகையில் செய்யத் திட்டம் உள்ளதா?**

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலாச் சிறப்புப் பெற்ற இடங்களை விளம்பரப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. இத்துறை ஏற்கெனவே சுற்றுலாத் தலங்களைப் பற்றிய இரண்டு வண்ணப்படங்களைத் தயாரித்து மூன்றாவதாக மற்றொரு படத்தைத் தயாரித்துக் கொண்டு இருக்கிறது. இப்படங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பயணிகளுக்கு அளித்திடும் வசதிகளையும் எடுத்துக் காட்டுகிறது. தேவையெனில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வண்ணப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் முயலும்.

**சென்னை நகரில் இருப்பது போல மற்ற தலை நகரங்களிலும் (மதுரை, திருச்சி, தஞ்சை) சுற்றுலாப் பேருந்துகள் அமைக்கலாமே?**

மதுரை, திருச்சி, தஞ்சை போன்ற இடங்களில் உள்ள செயல்படும் போக்குவரத்துக் கழகங்கள் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. ஆகவே, அவை தற்போது தேவையில்லை.

**வரும் "சுற்றுலா பொருட்காட்சியையாவது மாற்றி அமைக்கும் (அனைத்துத்தரப்பட்ட ஏகோபித்த ஆதரவைப் பெறும் வகையில்) திட்டம் உண்டா? நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கும் யோசனை எந்த அளவில் இருக்கிறது?**

கடந்த பொருட்காட்சியில் பங்கேற்றவர்களிடமிருந்து இனி நடைபெறும் பொருட்காட்சிகளை மேலும் நல்ல முறையில் மாற்றி அமைக்க யோசனைகள் கோரி பெறப்பட்டுள்ளன. இந்த யோசனைகள் பங்கேற்றவர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் மேலும் வசதிகள் செய்து தருதல், அரங்குகளை மாற்றி நல்ல முறையில் அமைத்தல், பொருட்காட்சி நேரங்களில் மாற்றம் செய்தல், பொருட்காட்சி காண வருபவர்களுக்கு அதிக அளவில் போக்குவரத்து வசதிகள் அளித்தல் ஆகியவையாகும். அடுத்த பொருட்காட்சியினை அமைக்கும் பொழுது இந்த யோசனைகளை அமல்படுத்தத்தவறாமல் முயற்சி செய்வோம்.

நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கும் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. எந்த முறையில் அமைத்தால் நன்கு அமையும் என்பதனை அறிய நாட்டிலுள்ள பல வல்லுநர்களை ஆலோசனை கூறுமாறு பத்திரிகைகள் மூலம் அழைப்புகள் விடுத்து அவர்களது யோசனைகளும் பெற்றுள்ளோம். சிறந்த வடிவமைப்புகளை அனுப்பி வைத்துள்ளவர்களுக்கும், பரிசுத் தொகைகளை வழங்கி அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் நிரந்தரப் பொருட்காட்சியை உருவாக்க இருக்கின்றோம்.

—சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவரிடமிருந்து விடை பெறுகிறோம். தமிழகச் சுற்றுலாத் தலங்கள் சீரும் சிறப்பும் பெற்று வருவதற்குத் தேவையான திட்டங்கள், வடிவமைப்புகள், செயற்குறிப்புகள் எல்லாம் நமக்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் அளிக்கக் கூடியவையாக இருக்கின்றன அல்லவா?

# வடஆர்க்காடு மாவட்டத் தொழில்

வட ஆர்க்காடு மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின் தங்கிய மாவட்டம் எனக் கூறப் பட்ட தாகும். ஆனால், அண்மைக் காலத்தில் அம்மாவட்டம் பெற்று வருகிற - பெற்றுள்ள தொழில் வளர்ச்சி நம்மை வியக்கவைப்ப தாக உள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில், குறிப்பாக இராணிப்பேட்டையில் காணப்படும் தொழில் முன்னேற் றம் அருமை பெருமை மிக்க தாகும். இப் பகுதியில் பல்வேறு சிறு தொழில் நிறுவனங்கள் அடங் கிய தொழில்பேட்டையொன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி திட்டக் கழகத்தின் (State Industries Promotion Corporation of Tamil Nadu Ltd.) கீழ் உருவாகி இயங்கி வருகிறது.



சுமார் 869 ஏக்கர் நிலப்பரப் பிலே உருவாக்கப்பட்டுள்ள இந் தத் தொழிற்பேட்டைக்கு 1971ல் வித்தூன்றப்பட்டது.

இங்குள்ள தொழிற்சாலை களிலே பணியாற்றும் தொழிலா ளர்களுக்கு 132 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன; இன்னும் பல வீடுகள் கட்டத் திட்டமிடப்பட் டுள்ளது.

12 இடங்கள் கடை வைப்பதற் கெனவும், தனியார் மருத்துவ-மனைக்கென இரண்டு இடங் களும் இங்கே ஒதுக்கப்பட்டுள் ளன.

விரைவில் இப்பகுதியில் பணி யாற்றும் தொழிலாளர் இல்லப் பிள்ளைகள் கல்விக்கென 'மெட் ரிகுலேஷன்' பள்ளியொன்று உரு வாக இருக்கிறது. இப்பகுதி 'மக்க ளின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப் பட ஒதுக்கப்பட்ட 68 இலட்சம் ரூபாயில், அதற்கான பணிகள் துவக்கப்பட்டு இது வரை 60 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டு அத்திட்டம் முற்றுப்பெறும் நிலையில் உள்ளது.

தொழிலாளர் வசதிக்கென ஒரு கிலோ மீட்டர் நீளப் புதிய சாலையொன்றும் அமைந்துள் ளது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச் சிக் கழக நிர்வாக அலுவலர் திரு தியாகராசன் மேற்கண்ட விவரங் களோடு இராணிப்பேட்டை பற் றிய இன்னும் பல விவரங்களை யும் நமக்குச் சொல்கிறார்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச் சிக்கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் இங்கே 20 இரசாயனத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தமிழ்நாடு சிறுதொழில் திட்டக் கழகப் பகுதியில் 3 தோல் பொருள் தயாரிப்புத் தொழிற் சாலைகள் இருக்கின்றன.

தொழில் துறையிலே வட ஆர்க்காடு பின்தங்கிய மாவட்டம் என்பதாலே-இங்கே ஆரம்பிக்கப் படும் தொழில்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் அவ்வத் தொழிலின் முதலீட்டில் 15 சத வீதத்தை மான்யமாக அளிக்கின் றன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படித் துவக்கப்படும் சிறு தொழில்களுக்குத் தேவைப்படு கின்ற கருவிகள், எந்திரங்கள், மூலப்பொருட்கள் போன்ற வற்றைச் செய்துதரவும் கடன் வசதிக்கு வகை செய்திடவும் வேலூரில் உள்ள 'மாவட்டத் தொழில் மையம்' பெரிதும் உதவி புரிகிறது.

1979ல் அமைக்கப்பட்ட இந்த மையம் ஒரு பொது மேலாளரை யும், மூன்று நிர்வாக மேலாளர் களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

'வட ஆர்க்காடு மாவட்டத் தொழில் மையம்' ஏற்படுவதற்கு முன்னாலே அரசு பதிவு பெற்ற தாயிருந்த 1,374 சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை இம் மையம் உருவானதற்குப்பின் 2,324 என்ற அளவில் அதிகரித் தது. இதனால் புதிதாக வேலை வாய்ப்புப் பெற்றோர் எண் ணிக்கை 20,178.

கடந்த ஜூன் மாதம் வரை

## தொழில்

யிலே 3,377 கைவினைப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் இங்கே பதிவு செய்யப்பட்டுள் ளன. 4,255 பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

1979-82ல் பதிவு பெற்ற குடி சைத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,122. இவற்றின் மூலம் வேலைவாய்ப்புப் பெற் றோர் 5,971 பேர்.

வடஆர்க்காடு மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு இப்புள்ளி விவரங்களே போதுமானவைக ளாகும்.

மிகவும் சாதாரண அளவிலே சிறுதொழில்களை நடத்துபவர் களுக்குக் காட்பாடியில் 10 தொழிற்கூடக் கட்டடங்களை யும் மாதவனூரில் 6 தொழிற் கூடக் கட்டடங்களையும் மாவட் டத் தொழில் மையமே அமைத் துக் கொடுத்திருக்கிறது.

சிறுதொழில்களுக்குத் தேவை யான சிறுதொழிற் கூடங்கள் இந்த ஆண்டும் காவனூர், வாலா ஜாபாத், தெள்ளாறு, ஆதமங்க

லம், நாட்றாம்பள்ளி, சேத்துப்பட்டு ஆகிய ஊர்களிலே கட்டுவதெனத் திட்டம் தீட்டப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

*1980-81*ல் ஒரு லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 259 பேர்களுக்குப் பல தொழில்களிலும் பயிற்சியளிக்கப்பட்டது.

தொழில் வளர்ச்சியிலே மிகவும் பின்தங்கிய பகுதிகளான போளூர், செங்கம், வந்தவாசி, செய்யாறு வட்டங்களுக்கு மாநில அரசு மான்யம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, திருப்பத்தூர் வாணியம்பாடி, வேலூர் ஆகிய பகுதிகளிலே சிறுதொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கு முதலீட்டு மான்யத் திட்டத்தின் அடிப்படையிலும், மான்யத் திட்டத்தின் அடிப்படையிலும் மத்திய அரசே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில், 1978ல் நிறுவப்பட்டு, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் இயந்திரக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இது, பெங்களூர் கன

# வளர்ச்சி



ரக எந்திரத் தொழிற்சாலையான 'எச்.எம்.டி.'யுடன் தொடர்புடையதாகும். சுமார் ஒரு கோடியே 52 இலட்சம் ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்ட இத் தொழிற்சாலையில் உருவாகும் எந்திரக் கருவிகள் ஜாம்பியா, இந்தோனேஷியா, இலங்கை ,நைஜீரியா போன்ற நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பெங்களூரில் உள்ள எச்.எம்.டி நிறுவனத்திற்கு மட்டும் இந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 35 எந்திரக் கருவிகளை அனுப்பி வருகிறது. கடந்த இரண்டாண்டுக் காலத்தில் மட்டும் 26 எந்திர பாகங்களை அல்ஜீரியா, டான்சானியா, சராக், வங்கதேசம் உட்பட 11 நாடுகளுக்கு இத் தொழிற்சாலை ஏற்றுமதி செய்துள்ளது.

'விரோலெக்ஸ் கேபிள்ஸ்' (Virolex Cables) என்ற தொழிற்சாலையில் ஒயர்கள் தயாராகின்றன. இங்கே தயாரிக்கப்படும் ஒயர்களில் 80 சதவீதத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கிக் கொள்கிறது. மீதம், கோவா, போன்ற பிற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்குச் சொந்தமான 'டான்சி மெஷின் டூல்ஸ் (Tansi Machine Tools ) அமைப்பில் மாதமொன்றுக்கு 15 இயந்திர பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவைகளில் பெரும் பாலானவை நைஜீரியா, இந்தோனேஷியா, ஜாம்பியா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளால் விரும்பி வாங்கப்படுகின்றன. 1978ல் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை இது.

1979ல் தொடங்கப்பட்ட 'கார்த்திகேயா இன்டஸ்ட்ரீஸ்' என்றுள்ள தொழிற்சாலையில், வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் மூலப்பொருட்களைக் கொண்டு பாலிதீன் இழையில் பைகள் தயாரிக்கப்படுகின்றன. ஜீனி, உரம், காஸ்டிக் சோடா, அம்மோனியம் குளைரைடு போன்றவைகளுக்கு இந்தப் பைகள் உதவுகின்றன.

இந்தத் தொழிற்சாலையில் ஆண்களே ஏராளமாகப் பணியாற்றுகின்றனர். அற்புதம் என்ற ஒரே ஒரு பெண்மணி மட்டுமே நாம் சென்றபோது பணியில் இருந்தார்.

''இது சாதாரணத் தொழில் போல இருக்கிறதே, ஏன் பெண்களையும் அதிக அளவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது?'' என்று அதன் உரிமையாளர் திரு. ஏ. முருகேசன், நிர்வாகி திரு.சுவாமிநாதன் ஆகியோரைக் கேட்டோம். ''இரண்டு ஷிப்டு இருப்பதால் பெண்கள் பணியாற்றுவது கஷ்டம்'' என்றார்கள் அவர்கள்.

**பி. எல். ராஜேந்திரன்**

தோல் ஆடைகள், தோல் பைகள், தோலால் ஆன ஆண் பெண் காலணிகள் உருவாக்கும் தோல் தொழிற்சாலைகள் 16 இந்தத் தொழிற்பேட்டையில் உள்ளன. இவற்றில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் ஆட்டுத் தோல்கள் பதனிடப்பட்டு தோல் ஆடைகளாகவும் மற்றவைகளாகவும் உருவாகின்றன. பதனிடப்பட்ட ஒரு ஆட்டுத்தோல் மட்டும் 70 ரூபாய் அடக்கமாகிறது.

இத் தொழிலுக்குத் தேவையான ஆட்டுத் தோல் பெரியமேடு, திண்டுக்கல் ஆகிய இடங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

இந்த விவரங்களை யெல்லாம் நமக்குத் தெரிவித்த 'புரோகரசில் தோல் தொழிற்சாலை' (Progressive Leather Industries) நிர்வாகப் பங்குதாரர் திரு எஸ். ஆர். சீனிவாசன் ''இங்கு தயாராகும் தோல் ஆடைகள் குளிர் நாடுகளான இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம் போன்ற நாடுகளுக்குப் பெரிதும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன'' என்றும் குறிப்பிட்டார்.



வாணியம்பாடி தோல் தொழிற்சாலை (Vaniyambadi Leather Finishing and Servicing Industrial Co-operative Sciety) உதவி இயக்குநர் திரு. எம். கணேசனையும் சந்தித்து, அப்பகுதியில் தோல் தொழிலுக்கு ஏற்பட்டு வரும் வளர்ச்சியை நாம் அறிகிறோம். 1974ல் ஆரம்பிக்கப்பட்ட வாணியம்பாடி தொழிற்சாலை 1978க்குள் மட்டும் 6 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களைத் தயாரித்த பெருமையுடையதாகும்.

எஸ்.ஆர்.பி. (S.R.P. Tools Ltd.) தொழிற்சாலையில் மோட்டார் வண்டி போன்ற வாகனங்களுக்கான நேர்த்தியானகருவிகள்தயாராகின்றன. 1970ல் ஜப்பானியத் தொழில் கழக உதவியோடு தொடங்கப்பட்ட இத்தொழிற்சாலை இப்போது தனிப்படவே இயங்கிவருகிறது.

வாணியம்பாடியில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடிக்குச் சென்று பார்வையிடுகிறோம். பட்டு வளர்ச்சித் துணை உதவி இயக்குநர் திரு. மகமது அலி அப்பகுதியில் பட்டுத் தொழில் வளர்ச்சி நிலை பற்றி நமக்கு விளக்குகிறார்.

1973ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கண்ணமங்கலம், ஜமுனாமரத்தூர் ஆகியஇடங்களில்பட்டுத்தொழில் வளர்ச்சிக்கான முன்னோடி சேவை நிலையங்கள் திறக்கப்பட்டு அதன் வாயிலாகப் பட்டுத் தொழில் துவங்கப்பட்டுள்ளது.

1979ல் பட்டுத் தொழிலுக்குத் தனி இயக்குநரகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இத் தொழிலில் வேகமான வளர்ச்சி ஏற்பட்டது.

துவக்கத்தில் 50 ஏக்கர் நிலப் பரப்பில்ஆரம்பிக்கப்பட்டபட்டுத் தொழில் இம் மாவட்டத்தில் இப்போது 3784.58 ஏக்கர் நிலப் பரப்பு அளவில் பெருவளர்ச்சி பெற்றுள்ளது. சுமார் 4,326 விவசாயிகள் இப்பகுதியில் பட்டுப் பூச்சிக்குத் தேவையான மல்பரி பயிரிட்டு,பட்டுத்தொழில் வளர்ந்தோங்க உதவுகின்றனர்.

விவசாயிகள் உற்பத்தி செய்திடும் பட்டுக் கூடுகளை வாங்க வாணியம்பாடியிலும், செங்கத்திலும் பட்டுக்கூடு அங்காடிகள் இயங்கிவருகின்றன.

இவை தவிர-தொழில் கூட்டுறவு நூற்பு நிலையங்கள் நான்கும், தொழில் கூட்டுறவு பட்டு நூல் முறுக்கேற்றும் நிலையம் ஒன்றும் இம்மாவட்டத்தில் உள்ளன. இது தவிர 270 நூற்பு எந்திரங்களுடன் கூடிய 54 தனியார் பட்டு நூற்பு நிலையங்களும் இயங்கி வருகின்றன.

பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பதட்ப நிலை வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது.

இம் மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில், 350க்கும் மேலான மலைவாழ் மக்கள் இத் தொழிலில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர். 14 லட்சம் ரூபாய் நிதிஒதுக்கீட்டில் 10ஏக்கர் நிலப்பரப்பில் இங்கே ஒரு பட்டுப் பண்ணை அமைத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வாணியம்பாடியில் உள்ள அரசு பட்டுக்கூடு அங்காடியில் சென்ற ஆண்டு 20 இலட்சத்து 51 ஆயிரம் மதிப்புள்ள பட்டுக் கூடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 40 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டுக் கூடுகள்விற்கப்பட்டுள்ளன. செங்கம் அரசு பட்டுக்கூடு அங்காடியில் இந்த ஆண்டு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிறுதொழில் வளர்ச்சி எந்த அளவுக்குச் சிறப்புற்றிருக்கின்றது என்பதை நேரில் கண்டறிந்து இவ்வாறான விவரங்களைத் திரட்ட நம்மோடு உடன்வந்து துணைபுரிந்தார்கள் மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு. அ.பன்னீர்செல்வமும், உதவி மக்கள் தொடர்பு அதிகாரி திரு. பிச்சையாவும். ●

# மரம் வைத்தவன்

**-சிவசங்கரி**

எதிரில் நிழலாடியது.

பேனாவைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்தேன்.

முத்தாத்தா.....

ஒட்டின முகம். பெரிசாய் குங்குமப் பொட்டு. ஏகத்துக்கு எண்ணெய் தடவி இழுத்து முடியப்பட்ட முடி, மஞ்சளும் பிசுக்குமாய் தாலிக்கயிறு, கையிலும், காலிலும் வெள்ளிக் காப்பு, மெட்டி, வாய் நிறையப் புகையிலையோடு கலந்த வெற்றிலைச் சாறு, நிறை மாச கர்ப்பத்தை உணர்த்தும் வகையில் கூட்டிக் குமிந்து இறங்கிவிட்ட வயிறு.

''ஸ்ஸ..யப்பாடி..'' தன் கனம் தனக்கே தாங்காத தினுசில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

இந்த முத்தாத்தாளைப் பத்து வருஷங்களுக்கும் மேலாக நான் அறிவேன்.

இந்த ஊருக்கு நாங்கள் வந்த புதிதில் என் வீட்டு வேலைகளை இவள் செய்ய வந்ததிலிருந்து பழக்கம்.

கிட்டத்தட்ட முத்தாத்தாளுக்கும் எனக்கும் ஒரே வயசாக இருக்கும் என்பது என் அபிப்ராயம்.

''உன் வயசென்ன முத்து?'' என்று கேட்டால், ''ஆருக்குத் தெரியும்? அது ஆச்சு நாலு கழுதைக்கு ஆவுறது'' என்று வேடிக்கையாகப் பதில் சொல்வாள்.

திருமணமாகி நான் இங்கு இருபது வயசில் வந்தபோது,முத்தாத்தாளுக்கு ஏற்கெனவே நாலு, இரண்டு வயசில் இரண்டு பிள்ளைகள் இருந்தன.

புருஷன் வேலாயுதத்துக்குப் பக்கத்து உரத் தொழிற்சாலையில் வேலை. நானூறு சொச்சம் சம்பளம்-போனஸ், எதற்கும் குறைவில்லை.

முத்தாத்தாவைப் பற்றி இங்கே தனியாய் கொஞ்சம் சொல்ல வேண்டும். கண்டால் கை செய்யும் ரகம் என்பார்களே, இவள் அந்த ஜாதிதான். பெருக்குவதும், மெழுகுவதும், பத்துத் தேய்ப்பதும், துணி துவைப்பதும் படு நெறுவிசு. தரையில், ஜன்னலில், தூசி, துரும்பு; பாத்திரத்தில் பிசுக்கு ம்ஹூம்... கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு பார்த்தாலும் அகப்படாது. முறுக்கு சுற்ற மாவு இடிக்க வேண்டுமா? ரெடி; மெஷினுக்குச் சென்றுவர வேண்டுமா? தயார். இப்படி எந்த வேலையை எப்போது சொன்னாலும் ரிஷக்கில் பாங்குறச் செய்தவள், மூன்றாவதை உண்டாகி, அது பிறப்பதற்குச் சில மணி நேரங்கள் வரையிலும் அத்தனை வேலைகளையும் சுறுசுறுப்பாகப்பார்த்தவள்; குழந்தை பிறந்த பிறகு ''நா இனிமே வேலைக்கு வரலைம்மா'' என்றாள் எட்டாம் நாள்.

''பச்சை உடம்புக்காரி, பசங்களைக்கவனிச்சு, ஆக்கிப்போட்டுக்கிட்டு விட்டோட கிட, எதுக்காவ லோல் படறேனு புருஷன் சொல்றாரும்மா...''

பேசியவள் கண்களில், கணவன் தன்னை பூ மாதிரி தாங்குகிறான் என்ற சந்தோஷ ஜொலிப்பு.

அதற்குப் பிறகு அவ்வப்போது மதிய நேரங்களில் கைக் குழந்தை ஜோதியுடன் வீட்டுக்குப் பின் பக்கமாய் வந்து தாவாரத்தில் காலை நீட்டி உட்கார்ந்து கொள்வாள்.

போனஸில் வேலாயுதம் குழந்தைக்குக்கொலுசுபண்ணிப்போட்டிருப்பதை, தனக்குக் கால் சவரனில் மூக்குத்தி செய்து' கொடுத்திருப்பதை, பெருமையாய்க் கூறுவாள்.

ஜோதிக்கு எட்டாம் மாசம் நடக்கையில் முத்தாத்தாவின் உடம்பு மறுபடி பூசின மாதிரி ஆக, சந்தேகத்துடன் கேட்டேன்.

''என்ன முத்து..குளிச்சிகிட்டு தானே இருக்குறே?''—

அவள் வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

''என்ன முத்து?''—

--இப்ப எனக்கு மூணு மாசம்மா...''

கைப் பிள்ளைக்கு எட்டுமாசம். வயிற்றில் மூன்று மாசம்!

என்ன கஷ்ட காலம் இது!

மூத்தது சவலையாய்ப் போய் விடாதோ?

சின்னதாக எழுந்த எரிச்சலுடன் நான் பேசினேன்.

''லட்சணமா இரண்டு பிள்ளைங்க, ஒரு பெண்ணுனு ஆயாச்சு..அதுங்களைப் படிக்க வைச்சி முன்னுக்குக் கொண்டு வர்றதைப் பத்தி கவலைப்படாம என்ன அசட்டுக் 'காரியம் இது முத்து? பிள்ளைங்களை நினைச்சிகிட்டு கொஞ்சம் கவனமா இருந்துக்கக் கூடாதா?''

''இது பொறக்கறதால, மூத்ததுங்களுக்குச் சோறு போடாம இருந்திடப்போறமா? இல்லை, துணிமணி வாங்கித் தராம ஒதுக்கிடுவமா? என்னம்மா சொல். நீங்க நீங்க?''—

''சோறுபோட்டு, துணிவாங்கிக் கொடுத்தா ஆச்சா? முன்னுக்கு வர படிப்பு வேணாமா?...மூத்தவன் மலையனுக்கு இப்ப என்ன வயசாச்சி? ஆறா? பள்ளிக்கோடத்துக்கு அனுப்பறதா உத்தேசம் இருக்கா, இல்லையா? படிச்சா தானே நாளைக்கு நல்லா சம்பாதிக்கலாம்?''—

முத்தாத்தா கையைக் கொட்டிக் கொண்டு சிரித்தாள்.

-"என் ஊட்டுக்காரர் என்னத்தம்மா பெரிசா படிச்சிருக்கிறார்; அவுரு கை நிறைய சம்பாதிக்கலையா? எம் புள்ளைங்களும் அப்பனாட்டம் ராசாவா வளர்ந்திடும். ஊடு நிறைய புள்ளைங்க இருக்க கொடுத்து வைச்சிருக்க வேணாமா? என்னம்மா நீங்க?''

அன்றைக்குப் பேச்சு அதோடு முடிந்தது.

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய்-எதையும் கேட்க, ஏற்றுக் கொள்ள மறுப்பவளிடம் என்னவென்று பேசுவது?

அந்தப் பிள்ளை பிறந்த ஆறாம் மாசம் ஒன்று குறைப் பிரசவமாய்ப் போனது. அடுத்த வருஷமே இன்னொன்றை முத்தாத்தா வயிற்றில் சுமந்தபோது, சோகை பிடித்துப் போன அவள் உடம்பின் பலவீனத்தைக் காணச் சகியாமல் கோபித்தாலும்கோபிக்கட்டும் என்று கேட்டு விட்டேன்.

''மறுபடி உண்டாயிருக்கியா முத்தூ? உடம்பு சுத்தமா நல்லா இல்லேனு மூக்கால அழுதுகிட்டு, வருஷத்துக்கு ஒண்ணைப் பெத்துகிட்டே போனா எப்படி? அப்புறம், எப்பத்தான் தேறி வர்றதும்?....நான் ஒண்ணு சொல்லுவேன், கேப்பியா? டவுன் ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரம்மாவைப் பாரு...உடனடியா இதுக்கு வழி சொல்வாங்க..இன்னும் ஐம்பது நாள் தாண்டலை... சுலபமா முடிச்சிடலாம்..''

முத்தாத்தா கண்களை அகல விரித்தாள்.

'' என்னம்மா சொல்றீங்க, நீங்க''

''சொல்றேன் சோத்துக்கு உப்பில்லேனு; அட, என்ன முத்தூ, இது கூடவா புரியலை? இது உனக்கு அஞ்சாவது குழந்த. நடுவுலே, குறையாப் போனது வேற... டாக்டரம்மாவைப் பார்த்து, கருவக் கலைச்சிட்டு குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்துக்குறது உனக்கும் நல்லது; உன் குடும்பத்துக்கும்....''

என்னை முடிக்க விடாமல் முத்தம்மா 'வவவ' என்று உள்ளங்கையால் வாயில் தட்டினாள். காதைப் பொத்தினாள். கேட்கக் கூடாத எதையோ கேட்டு விட்ட மாதிரி துடித்தாள்.

''இந்த வார்த்தையைச் சொல்ல உங்களுக்கு எப்படிம்மா மனம் வருது? நீங்களும் பிள்ளை குட்டிங்களைப் பெத்தவங்க தானே? மனசறிஞ்சுதான் பேசறீங்களா? குளந்தைங்க, சாமியா பாத்து கொடுக்கிற வரம்...அதப் போயி வேணாம்னு தடுக்க நாம யாரு?''

''அதான் ஏற்கனவே நாலு வரத்தைக் கொடுத்திட்டாரே, முத்தூ...அஞ்சாவதா எதுக்குனு தான் கேட்கிறேன்...''

'' ஆ? அப்படி சொன்னா சரியா? அதது தானா வர்றப்ப, நாம தடுக்கறது பாவம்''

''என்ன பாவம்! இரண்டு குழந்தைங்க போதும்னு நாங்க தடுத்திடலியா? பெத்து, வளர்க்க சிரமப்படறத்துக்குப் பதிலா, பெறாம இருக்கிறது நல்லது இல்லியா?''

''ஊடு நிறைய புள்ளைங்க இருக்குறது தான் நாளைக்கு நமக்குச் சொத்து. தலைவலி, கால் வலின்னா நமக்கு ஆதரவு ஆரு? அத மறந்திட்டு பேசக் கூடாதும்மா, ஆமா, சிரமம், சிரமம்னு சொல்றீங்களே, இன்னாம்மா சிரமம்? அதுங்களா பொறக்குது, அதும்பாட்டுக்கு வளருதுங்க, இதுலே நமக்கு இன்னா?''

அவளுடைய அஞ்ஞானப் பேச்சு எனக்குச் சிரிப்பை வரவழைத்தது.

''அதுங்களா பொறந்து, வளருதா? என்ன முத்து அசடாட்டம் பேசறே? பெத்து, வளர்த்து, ஆளாக்குற பொறுப்பு பெத்தவங்களுக்கு இல்லியா? காலம் இருக்குற நிலைலே, விலைவாசி எல்லாம் தாறுமாறா ஏறிகிட்ட இந்த நாளில, இரண்டைப் பெத்து, நல்லவிதமா ஆளாக்கறத்துக்குள்ளே அவனவனுக்கு விழி பிதுங்கிப் போவுது..நீ என்னடான்னா...'

''வேணாம். இந்தப் பேச்சை இதோட விடுங்கம்மா. மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாமலியா இருந்திடுவான்? பட்டணத்துக்காரங்க மாதிரி மனசைக் கல்லாக்கிக்கிட எங்களால முடியாது; நடக்குறது நடக்கட்டும்..''

அதன் பிறகு வந்த வருஷங்களில் முத்தாத்தா முழுசாக இரண்டே பெற்றாள். அரை குறையாக மூன்றை வாரிக் கொடுத்தாள்.

இதனடுவில் கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு வேலாயுதம் குடிக்கத் துவங்க, வீட்டுக்கு வரும் பணம் பத்தாமல் தோட்டையும், காப்பையும்அடகு





தவறு செய்வதில் பிழையில்லை; ஆனால், தவறு செய்ததை அறிந்து கொண்ட பின்னர், அதைத் திருத்திக் கொள்ளாமலிருப்பது தவறு ஆகும்.

தியாக வாழ்வு ஆனந்தமானதல்லவா? கடமையை ஒரு சுமை என நினைத்து விட்டால் புனிதமான எண்ணத்திற்கே இடமில்லை.

நம் காரியங்கள் எல்லாவற்றிலும்-சொந்த விஷயத்திலாகட்டும் அல்லது பொதுத் துறையிலாகட்டும்-நாணயத்திற்கு முதலிடம் அளிப்பதே நம் கலாசாரத்தின் சாரமாகும்.

வைத்து, மேற்கொண்டு கடன் வாங்கி இரண்டு பசு மாடுகளை வாங்கிக் கட்டி, பால் வியாபாரம் பண்ண முற்பட்டாள் முத்தாத்தா.

அவளுடைய . பிரதான வாடிக்கை, நான்தான்.

காலையில் இரண்டு, மாலையில் இரண்டு என்று நாளுக்கு நாலு லிட்டர்.

பாலை ஊற்றிவிட்டு, வைக்கோல் வாங்க காசில்லை என்று பாதி நாட்களுக்கு குமுறுவாள், பொட்டுக் கூடையுடன் வந்து தோட்டத்தில் முளைத்திருக்கும் புல்லை அறுத்துக் கொண்டு போவாள்.

அதிசயமாய் இரண்டு வருஷ இடைவெளிக்குப் பின், வயிற்றில் இப்போது ஏழாவது....

எதிரில் உட்கார்ந்திருந்தவளை ஊன்றிப் பார்க்கையில், நமநம வென்று உள்ளுக்குள் கோபம் கனன்றது.

திடகாத்திரமாய் இருந்தவள், இன்று எப்படி ஆகிவிட்டாள்?

பதினைந்து வயசில் கல்யாணம் முப்பது ஆவதற்குள் முழுசாய் ஆறு, போனது மூன்று, வயிற்றில் ஒன்று. போதுமா? நகையும், நட்டுமாய் தலை நிமிர்ந்து நடமாடியவள், இன்று கிழவிபோல் தளர்ந்து, ஒட்டிப் போய் விட்டாளே!

''என்ன முத்து, வேளைகெட்ட வேளைல வந்திருக்கே? முகம் சுணுங்கி இருக்கே? இடுப்ப நோவுதா? சூடா காபித் தரட்டுமா?''

அவள் பதில் பேசாமல் இருக்க உள்ளே சென்று காபி நிறைந்த டம்ளருடன் வந்தேன்.

''இந்தா....குடி....''

மெதுவாகக் குடித்துவிட்டு, லோட்டாவைக் கழுவிக் கொண்டு வந்தவள், முந்தானையால் முகத்தைத் துடைத்தாள்.

''மாடுங்க பட்டினியா கிடக்குது...பொட்டு வாங்கி வச்சாதாவலை.. பத்து ரூபா பணம் தர்றிங்களா?''

''ஏன் மேய்ச்சலுக்கு அனுப்பலியா?''

''மலையன் ஊர்ல இல்லம்மா. மாமாவூட்டுக்குப் போயிருக்கான். ஏழுமலைக்குக் காய்ச்சலா இருக்குது. வெயில்ல போகமாட்டேனுட்டான்...''

''ஏழுமலைக்குக் காய்ச்சலா? நேத்துக்கூட அவனை சினிமா கொட்டகைல பார்த்தேனே''

முத்தாத்தா பதில் கூறாமல் தலையைக் குனிந்துகொண்டாள்.

முத்தாத்தாவின் மூத்த பையன் மலையனுக்குப் ,பதினாலும், இளையவன் ஏழுமலைக்குப் பன்னிரண்டும் ஆகிறதே ஒழிய, ஒரு வேலைக்கும் துப்புக்கெட்டதுகளாக இரண்டும் வளர்ந்து விட்டன.

படிப்பு ஏறவில்லை; கைக்காரியம் எதுவும் வகை இல்லை. பீடி குடிக்கும்; சினிமா பாட்டு ஒன்று விடாமல் பாடும்-இஷ்டம் இருந்தால் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்று வரும். அவ்வளவுதான்.

''சொல்றேன்'னு தப்பா எடுக்காதே முத்து. உம் பசங்க போக்கு கொஞ்சம் கூட நல்லா இல்லே, ஐயா கூட இரண்டு நாள் முந்தி வருத்தப்பட்டுக்கிட்டார். கண்டிக்கக் கூடாதா?''....

முத்தாத்தா பெருமூச்சுடன் எழுந்து நின்றாள்.

''விளையாட்டுப்பசங்க. அதுங்களுக்கா ஒண்ணும் புரியலை... கேப்பார் பேச்சைக் கேட்டுகிடுதுங்க..ம்ம்..வயசு வந்தா தானே தெளிஞ்சிடும்மா.. இதுக்காக வீணா ஏன் லோல் படணும்''?

சமாளிப்பு பேச்சாக எதையோ கூறிவிட்டு, முத்தாத்தா பணத்துடன் போய்ச் சேர்ந்தாள்.

அடுத்த வாரம் அவளுக்கு ஏழாவது குழந்தை பிறந்தது. ரொம்ப நேரத்துக்கு நஞ்சு விழாமல் வலியும், உதிரப் போக்கும் அதிகமாய் இருந்ததில் அந்தப் பத்து நாட்களும், மலையனும் ஏழுமலையும் பாலைக் கறந்து மாற்றி மாற்றி எடுத்து வந்தார்கள்.

பால் ஒரே ஜலம்.

ஏன் இப்படி? - என்ன சமாசாரம், என்று தோட்டக்காரனை அனுப்பி விசாரிக்க, அவன் போய் விட்டு வந்து, பாதிப்பாலை அம்மாவுக்குத் தெரியாமல் டீ கடைக்கு விற்று விட்டு தண்ணீர் கலந்து எடுத்து வருவதையும், வயசு பதினைந்து ஆகவில்லை, அதற்குள் மாமா பெண்ணை மணப்பேன் என்று மலையன் பிடிவாதம் பிடிப்பதையும், அடுத்தவன் தீபாவளிக்குத் தமிழ் சினிமா கதாநாயகன் ஒருவன் அணியும் டீ சர்ட் போலவே நூற்றிப் பத்து ரூபாய் கொடுத்து வாங்கினால் தான் சரி என்று அடமாக இருப்பதையும், ஜோதி பேதி கண்டு எழுந்திருக்காமல் படுத்திருப்பதையும் வரவர தலைகால் புரியாமல் வேலாயுதம் குடித்துவிட்டு வந்து ரகளை பண்ணுவதையும், முத்தாத்தா கண்ணால் ஜலம்விட்டு அழுவதையும் நீளமாய் கூறினான். கேட்க, கேட்க என் மனசு கனத்துப் போனது.

நன்றாய் வாழ வேண்டிய குடும்பம் அறியாமையால் சீரழிந்து போகிறதே என்ற வேதனையால் விடாமல் நாலு நாட்களாய் நான் அவஸ்தைப்பட்டதற்குச் சிகரம் வைத்தாற்போல் அன்று காலை தூங்கி எழுந்ததும் அந்தச் சேதி காதில் விழுந்தது.

வெறும் வயிற்றில் சாராயத்தையதிகமாய்க் குடித்துவிட்டு, பிதற்றலும், தள்ளாட்டலுமுமாய் வீட்டுக்குப் புறப்பட்ட வேலாயுதம் கண்மண் தெரியாமல் வந்த லாரியின் அகோரப் பசிக்கு இரையாக, இருட்டை சாதகமாக்கிக் கொண்டு லாரிக்காரன் நிற்காமல் ஓட, அப்புறம் என்ன? வேலாயுதத்தின் கதை இப்படித் தான் யாரும் எதிர்பார்க்காத வகையில்



சென்னை டி. யு. சி. எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த காமதேனு கூட்டுறவு சிறப் பங்காடியின் புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் 7.9.82ல் அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உடன் உள்ளார்.

முதல்நாள் இரவே முடிந்திருந்தது.

தொழிற்சாலை நண்பர்களும் இதர குடிசை வாசிகளுமாய்ச் சேர்ந்து, எக்கச்சக்கமாய் வேட்டு வாணம் வெடித்து, மோளம் கொட்டி, பூப்பல்லக்கில் வேலாயுதத்தைத்தூக்கிச் சென்றுபுதைத்தார்கள்; அதன்பின், சுத்தமாய் அவனை மறந்து போனார்கள்.

அடுத்து வந்த மாசங்களில் மளமளவென்று முத்தாத்தாளின் குடும்பம் சந்திக்கு வந்து நாற்றமாய் நாறத் தொடங்கியது.

பிரசவம் ஆனதிலிருந்து விடாமல் உதிரம் பட்டுக் கொண்டிருந்ததோடு, கணவன் இறந்த அதிர்ச்சியும் சேர்ந்து கொள்ள நடமாடும் சக்தி கூட இல்லாமல் முத்தாத்தா ஒடுங்கிப் போக, மூத்தவன் பொறுப்பில்லாமல் மாமா வீட்டோடு உட்கார்ந்துகொள்ள, சினிமா சான்ஸ் வாங்கித் தருகிறேன் என்று யாரோ ஆசை காட்டியதில் பதிமூன்று வயசு ஏழுமலை கறவை மாடு ஒன்றை ராவோடு ராவாக கால் விலையில் விற்று, பணத்துடன் ஓடிப்போக, இரண்டாங் கெட்டான் ஜோதி என்னைத் தேடிக் கொண்டுவந்து ஒருநாள் அத்தனையும் சொல்லிவிட்டு பிழியப் பிழிய அழுதது.

''காரியம் பண்ணறேன், அது செய்யறேன்னு வந்து உட்கார்ந்துகிட்டு உறவுக்காரங்க நெல்லு, கேவரகு, அத்தனையும் சுத்தமா காலி செய்திட்டு போயிட்டாங்க. வைச்சி சாப்பிட சாமான் எதுவுமில்லே...கம்பெனி பணமும் வரலை. அம்மாவுக்குக் காய்ச்சல். மாடு கறக்க எனக்குத் தெரியலை தம்பிங்க ஒண்ணும் புரியாம அழுவுதுங்க...நா என்னாங்க பண்ணுவேன்......'' என்று வெடித்துக் கதறியது.

என் கணவரிடம் கலந்துபேசிவிட்டு நூறு ரூபாய் பணத்தையும், காய்ச்சலுக்கான மாத்திரையையும் ஜோதியிடம் கொடுத்தேன்.

''போய் பத்து நாளைக்குத் தேவையான மளிகைச் சாமானை வாங்கிட்டு வந்து, முதல்ல வயிறார சாப்பிடுங்க..இந்த மாத்திரைகளை அம்மா கிட்ட கொடுத்து டீ வைச்சி சாப்பிடச் சொல்லு, ரொட்டி வேணா வாங்கிக் கொடு. கொஞ்சம் உடம்பு முடிஞ்சா என்னை வந்துபார்க்கச் சொல்லு....''

ஜோதி மூக்கையும், கண்ணையும் துடைத்துக் கொண்டு புறப்பட கூடத்துக்கு வந்து நாற்காலியில் அமர்ந்தேன்.

முத்தாத்தாவையும், அவள் குடும்பத்தையும் நினைக்கையில் பெருங்குடல் முடிச்சுப் போட்டுக் கொண்டது.

முத்தாத்தா மாதிரி இந்த நாட்டில் இன்னும் எத்தனை ஆயிரம், லட்சம் பேர்கள் தம் தலையில் தாங்களே மண்ணை வாறிப் போட்டுக் கொள்கிறார்கள்?

குடும்பத்தைக் கட்டுப்படுத்துவது முக்கியம், பிறந்ததை நன்றாகப் பேணி வளர்ப்பது கடமை என்பதை என்றைக்கு இந்த நாட்டு மக்கள் உணரப் போகிறார்கள்?

மரம் வைப்பவன் தண்ணீர் ஊற்றாமல் விடுவானா? என்று பழமொழி பேசிப் பொறுப்பை உதறுவது தவறு! தேர்ந்த விதைகளை விதைத்து, தண்ணீர் ஊற்றி அக்கறையுடன் விவசாயி பராமரிக்க, கடவுள் கிருபையால் நல்ல மகசூல் கிடைப்பது போல, குழந்தைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் பெற்றவர்பொறுப்புதான், அவன் நல்ல குணவானாக, புத்திமானாக வாழ வேண்டுமானால் கடவுளின் துணையை வேண்டலாம் என்பதை எல்லாரும் என்று ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? நாட்டின் பல பிரச்சினைகளுக்கு இந்த ஜனத்தொகைப் பெருக்கம் அடிப்படைக் காரணமாக இருப்பதையும், தனி மனிதன் கட்டுப்பாட்டால் குடும்ப நலனுண்டாகும் என்பதையும் குடும்ப நலத்தால் சமுதாயம் வளம் பெறும். சமுதாய வளத்தால் நாடே மேன்மையுறும் என்பதையும் என்று இந்நாட்டு மக்கள் உணர்ந்து செயலாற்றப் போகிறார்கள் ?

என்னென்னமோ கேள்விகள் மனசைப் பிராண்டிய வேகத்தில் கண்ணோரங்களில் நீர் திரண்டுவிட, அதை மறைக்கும் பாவனையுடன் நான் தலை குனிந்து கண்களை மூடிக் கொள்கிறேன்.

# தமிழ்நாடு வனவிலங்கு உய்விடங்கள்!

**அட்டை சொல்லும் செய்தி!**



**த**மிழ்நாடு மாநிலம் 1,30,069 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு உடையது. அதில் 20,910 சதுர கிலோ மீட்டர் மட்டுமே-அதாவது மொத்த நிலப்பகுதியில் 16 சதவீதம்-வனப்பகுதியாக உள்ளது. தமிழ்நாட்டின் இயற்கையமைப்பு வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலை பிரம்மாண்டமானதொரு மலைத் தொடராகும். அந்த மலைத் தொடரில்தான் 2,633 மீட்டர் உயரமுள்ள தொட்டபெட்டா சிகரம் உள்ளது. அதே சமயத்தில் இராமநாதபுரம் மாவட்டம் ஏறக்குறைய பாலைவன சீதோஷ்ண நிலையைக் கொண்டுள்ளது. அதன் கரைநெடுகிலும் சதுப்பு நிலக்காடுகள் மண்டியுள்ளன. அங்கு விசேஷ வகைத் தாவரங்கள் தென்படுகின்றன. இவ்வாறாக மாநிலத்தில் எண்ணற்ற வகைக் காடுகள் காணப்படுகின்றன.

புலி, சிறுத்தைப்புலி, காட்டெருது, கடமான் வகை, ஸ்லாத் பேர் (**Sloth Bear**) சிறுத்தை, பிளாக் பக் (**Black Buck**), நான்கு கொம்புகளையுடைய மறிமான், நீலகிரிக் குரங்கு, நீலகிரி காட்டாடு, சிங்கவால் குரங்கு முதலியவை உட்பட பல்வகை விலங்குகளும், எண்ணிறந்த பறவைகளும் ஊர்வனவும் வாழுமிடமாக இந்த வனங்கள் உள்ளன.

1972ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்புச்) சட்டம் செயல்படுத்தியதன் விளைவாக, வன விலங்குக் காப்பாளர்களை நியமித்ததன் மூலமும், தனி வன விலங்குப் பிரிவு ஒன்றை அமைத்ததன் மூலமும், தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. தங்களுடைய அதிகார வரம்பின் கீழுள்ள அனைத்து வன விலங்குகளுக்கும் முழுப்பாதுகாப்பு அளிப்பதே வன விலங்குக் காப்பாளர்களின் முக்கிய பணியாகும். புது உய்விடங்களும் ஏற்படுத்தப்பட்டன.

வளர்ச்சி என்கிற பெயரால் பாதிக்கப்படுகின்ற இயற்கைக்கூறு என்னவென்றால், வனங்களும் வன விலங்குகளுமே என்று ஐயமறக் கூறலாம். இந்த இனங்கள் ஒரு முறை அழிந்துவிட்டால், அழிந்தது தான் என்பதை உணர்ந்து தமிழ்நாடு அரசு வன விலங்கு உய்விடங்களாக சில பெரும்பகுதிகளை ஒதுக்கியுள்ளது.

உய்விடங்கள் எட்டும், நீர் வாழ் பறவைகள் வாழுமிடம் 17ம் உள்ளன. இந்த உய்விடங்களின் பரப்பு மொத்த வனப்பரப்பில் 10 சதவீதத்திற்குச் சற்று அதிகமாகும். இது இந்தியாவில் பிற மாநிலங்களைக் காட்டிலும் மிக அதிகமான பரப்பளவாகும்.





## முதுமலை வன விலங்கு உய்விடம்

**இடம்**

நீலகிரி மாவட்டம். உதகமண்டலம்-மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ளது.

**பரப்பளவு**

321 ச.கி. மீட்டர்.

**வனவகை**

முதலில் சரக்கசிவுள்ள இலையுதிர் காடுகளாக இருந்து, பானிபூரை நெருங்க நெருங்க வறண்ட இலையுதிர் காடுகளாக உள்ளது. மூங்கில்களுடன் முக்கியமாகத் தேக்கு மரக் காடுகள் பல்வகை இன மரங்களும் உள்ளன.

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

புலி, சிறுத்தைப்புலி, யானை, காட்டெருது, கடமான் வகை, புள்ளிமான் வகை, கடால் (Dhole), பார்க்கிங் டீயர் (Barking Deer), கொம்புகளையுடைய வனமான் வகை, ஸ்லாத் பேர் (Sloth bear), மலைப்பாம்பு, நீர் நாய், முதலைகள் ( Mugger ), பல வகைப் பறவைகளும், ஊர்வனவும்.

**மழை அளவு.**

900 மி.மீ.-1800 மி.மீ.



**அருகிலுள்ள விமான நிலையம்**

கோயம்புத்தூர்-160 கி.மீ.

**அருகிலுள்ள ரயில்நிலையம்**

உதகமண்டலம் -64 கி.மீ.
மைசூர் -95 கி.மீ.

**சிறந்த பருவம்**

பிப்ரவரிக்கும் ஜூனுக்கும் இடையிலுள்ள காலம்

**இட வசதிகள்**

அபயாரண்யம், கார்குடி, மசினகுடி, சில்வன் லாட்ஜ், ஆகிய இடங்களில் ஓய்வுமாளிகைகளும், தெப்பக்காட்டில் மர வீடுகளும் உள்ளன. வாடகைக்குக் கூடாரங்களும் கிடைக்கும். உணவு வசதிகள் உள்ளன.

**ஏனைய வசதிகள்**

வாடகைக்கு மோட்டார் வண்டிகளும் யானைகளும் கிடைக்கும்.

## கோடிக்கரை வன விலங்கு உய்விடம்

**இடம்**

தஞ்சாவூர் மாவட்டம்.

**பரப்பளவு**

17.26 ச.கி.மீ.

**வனவகை**

சதுப்பு நிலக்காடுகளும், வறண்ட பசுமைக்காடுகளும் உள்ளன.



காணக்கிடைக்கக்கூடிய
விலங்குகள்

உய்விடம், கோனை மூக்கு நாரைகளுக்கும், பிளாக் பக் (Black Buck)கும் புகழ் வாய்ந்தது. சிறவிகள், கடல் குருவிகள், கடல் ஆலா, நண்டு தின்னும் கோட்டான், உள்ளான்கள் முதலியவைகள் போன்ற நீர் வாழ் பறவைகளின் கூட்டத்தை குளிர் காலத்திலும் பார்க்கலாம். புள்ளி மான் வகை, காட்டுப்பன்றிகள் முதலியவை உட்பட ஏனைய பாலூட்டிகள்.

மழை அளவு.

*1300 மி.மீ. முதல் 1500 மி.மீ.வரை*

அருகிலுள்ள
விமான நிலையம்

*திருச்சிராப்பள்ளி-230 கி.மீ.*

அருகிலுள்ள
இரயில் நிலையம்

*கோடிக்கரை-0.5 கி.மீ.*

சிறந்த பருவம்

நீர்வாழ் பறவைகளுக்கு நவம்பர் முதல் பிப்ரவரி வரை, பிளாக் பக் (Black Buck) புள்ளிமான் ஆகியவைகளுக்கு ஆண்டு முழுவதும்.

இடவசதி

கோடிக்கரையிலுள்ள வன ஓய்வு மாளிகை. உணவு வசதிகள் உள்ளன.



## வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்



இடம்

செங்கல்பட்டு மாவட்டம் -சென்னையிலிருந்து 86 கி.மீ.

பரப்பளவு
வனவகை

*0.3 ச.கி.மீட்டர்*
பேரிங்டோனியா ( Barringtonia ) மரங்கள் நிறைந்த ஏரி

காணக்கிடைக்கக்கூடிய
விலங்குகள்

இந்த உய்விடம் பறவைகள் கூடி முட்டையிட்டு குஞ்சு பொறிக்கக் கூடிய வசதிகள் நிறைந்த கார்மோரன்ஸ், ( Cormorants ) சக்ரெட்ஸ் (Egrets), சாம்பல் நிறக்கொக்குகள் ஹெரான்ஸ் (Herons) அகலவாய் கொக்குகள் (Open Billed Storks) டார்ட்டர் (Darter) ஸ்பூன்பில் (Spoon Bills) வெள்ளை இப்பீஸ் (White Ibis) நைட் ஹெரான், (Night Heron) கிரிபி (Crebe) கிரே (Grey) பெலிகன் (Pelican) முதலியன. இது தவிர கார்கானி சிரஷுகள் (Garganey) சோவெலர்ஸ் (Shovellers) துடுப்பு வாழ் பறவைகள் (Pintails) வாத்துக்கள், உள்ளான்கள் (Stilts) சேண்டு பைப்பர்ஸ் (SandPipers) முதலிய இடம் மாறும் பறவைகளும் உண்டு. இது தவிர, இங்கேயே இருக்கக் கூடிய கூட்ஸ் (Coots) கடல் ஆலா (Terns) நீர்க்கோழி (Moor Hens) ஆகிய பறவைகளையும் காணலாம்.



மழையளவு

*1200 மி.மீ. ஒரு ஆண்டுக்கு*

அருகிலுள்ள விமான
நிலையம்

சென்னை-70 கி.மீட்டர்.

அருகிலுள்ள
புகைவண்டி நிலையம்

*கருங்குழி-10 கி.மீட்டர்.*

சிறந்த பருவம்

நவம்பர் முதல் பிப்ரவரி வரை.

## ஆனைமலை வன விலங்கு உய்விடம்

இடம்

கோயம்புத்தூர் மாவட்டம்
கோயம்புத்தூரிலிருந்து 60 கி.மீ.

பரப்பளவு

*958 ச.கி.மீட்டர்*

வனவகை

இலையுதிர் காடுகளிலிருந்து ஓரளவு

ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கும் காடுகள் வரை பல்வேறு காடுகள் உள்ளன. ஆண்டு முழுவதும் பசுமையாக இருக்கும் காடுகளில் தேக்கும் பல்வகை இன மரங்களும் உள்ளன.

**காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள்**

யானை, காட்டெருது, புலி, சிறுத்தைப்புலி, ஸ்லாத் பேர் (Sloth Bear) காட்டுப் பன்றி, காட்டு நாய், நீலகிரி குரங்கு, சிங்கவால் குரங்கு, கடமான் வகை, நான்கு கொம்புகளுடைய மறிமான், புள்ளிமான் முதலியனவும், பறவைகளின் கூட்டமும் உள்ளது.

**மழை அளவு.**

500 மி.மீ. முதல் 5000 மி.மீ.வரை கிழக்குச்சரிவுகளில் குறைவான மழை மேற்குச் சரிவுகளில் பலத்த மழை.

**அருகிலுள்ள ரயில் நிலையம்**

பொள்ளாச்சி-35 கி.மீ.

**சிறந்த பருவம்**

ஏப்ரல் முதல் ஜூன் வரை

## முண்டன்துறை வன விலங்கு உய்விடம்

**இடம்**

திருநெல்வேலி மாவட்டம்

**பரப்பளவு**

567 ச.கி.மீட்டர்

**வனவகை**

வறண்ட இலையுதிர் காடுகள்

**காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள் ..**

புலி, குரங்குகள், குரங்குகள் (Langurs) ஸ்லெண்டர் லோரிஸ் (Slender loris) ஸ்லாத் பேர், கடமான் வகை, புள்ளிமான் வகை காட்டு நாய் முதலியவைகள். பறவைகளைப் பார்ப்பதற்குச் சிறந்த பகுதி.

**அருகிலுள்ள இரயில்நிலையம்**

அம்பாசமுத்திரம்-45 கி.மீ.

**சிறந்த பருவம்**

அக்டோபர் முதல் சனவரி வரை

## களக்காடு வன விலங்கு உய்விடம்

**இடம்**

திருநெல்வேலி மாவட்டம்.

**பரப்பளவு**

223 ச.கி.மீ.

## வேட்டங்குடி நீர்ப் பறவைகள் உய்விடம்

**இடம் ..** இராமநாதபுரம் மாவட்டம்-மதுரையிலிருந்து 55 கி.மீ. சிறிய ஏரி

**வனவகை** பாபுல் ( Babul ) மரங்கள் நிறைந்துள்ளன.

**காணக்கிடைக்கக் கூடிய விலங்குகள் . . .** கார்மிராண்ட்ஸ் ( Cormorants ) கெரான்ஸ் ( Herons ) ஈக்கிரட்ஸ் (Egrets) ஸ்பூன் பில்ஸ் (Spoon Bills) முதலியன.

**அருகிலுள்ள புகைவண்டி நிலையம்** காரைக்குடி-26 கி.மீ.



**வனவகை**

குன்றுகளின் அடிவாரத்திலிருந்து முட்காடுகள் வரையில் பசுமையாக இருந்த காடுகள் வறண்ட இலையுதிர் காடுகளாக மாறியுள்ளன.

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

சிங்கவால் குரங்குகளுக்கு புகழ் வாய்ந்த இடம். ஓரிடத்தில் நான்கு வகைக் குரங்குகளையும் (சாதாரணக் குரங்கு, நீலகிரிக்குரங்கு, பானெட் மெகாக் (Bonnet Macaque), சிங்கவால் குரங்கு) ஒரு சேரக் காணலாம். நீலகிரி காட்டாடு, கடமான் வகை, ஸ்லாத் பேர் (Sloth Bear), காட்டெருது, யானை, புலி, பறக்கும் அணில், சிறுத்தைப் புலி, காட்டு நாய், பான்கோலின் (Pangolin) உட்பட ஏனைய விலங்குகள் பல்வகைப் பறவைகளும், ஊர்வனவும்.

**அருகிலுள்ள இரயில் நிலையம்**

சேரன்மகாதேவி-20 கி.மீ.

**சிறந்த பருவம்**

செப்டம்பர் முதல் மார்ச் வரை

## கிண்டி தேசீய பூங்கா

**இடம் .**

சென்னை நகரம்

**பரப்பளவு**

2.82 ச.கி.மீட்டர்

**வனவகை**

முட்புதர்கள் நிறைந்த வனம்

**காணக்கிடைக்கக்கூடிய விலங்குகள்**

பிளாக் பக் (Black Buck), புள்ளி மான், குள்ள நரிகள், பாங்கோலின் ( Pongolin ) மற்றும் பலவகை பறவைகள்.

**சிறந்த பருவம்**

ஆண்டு முழுவதும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.